# பலதிரட்டு வைத்தியம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

தஞ்சாவூர்.

தஞ்சை சரசுவதி மகால் வெளியீட்டு எண்: 330

# பலதிரட்டு வைத்தியம்

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்

டாக்டர் **எம். நந்தகுமார்**, R. I. M. P.

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்,**

**தஞ்சாவூர்.**

2005 )

( விலை ரூ. 60-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | பலதிரட்டு வைத்தியம் |
| பதிப்பாசிரியர் | : | டாக்டர் எம். நந்தகுமார் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம்,<br>தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 330 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | மூன்றாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2005 |
| தாள் | : | TNPL 18.6 கி.கி. |
| நூல் அளவு | : | 21x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : | 150 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சு,<br>சரசுவதி மகால் நூலகம் |
| புத்தகக்கட்டு | : | ராப்பர் கட்டு |
| பொருள் | : | மருத்துவம் |
| விலை | : | ரூ. 60-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

பலதிரட்டு வைத்தியம் எனும் இந்நூல் சரசுவதி மகால் நூலகத்திலுள்ள சித்த வைத்திய சுவடிகள் வரிசையில் எண். 331 ஆக இடம் பெற்றுள்ள ஓலைச்சுவடியிலிருந்து பதிப்பிக்கப் பெற்றதாகும். சித்த மருத்துவர்கள் தங்கள் அனுபவத்தின் அடிப்படையில் நூற்றிநாற்பதற்கும் மேற்பட்ட மருந்து தயாரிப்பு முறைகளை இச்சுவடியில் தொகுத்ததோடு, அவை எந்தெந்த வியாதிகளுக்கு அளிக்கப்பட வேண்டிய மருந்துகள் என்பதையும் குறித்து வைத்துள்ளனர்.

பழம் சுவடிகள் சிதைவுறும் போது அவற்றை மீண்டும் ஏடுபெயர்த்து எழுதுதல் மரபாகும். அவ்வகையில் இச்சுவடி நூல் பிற்காலத்தில் ஏடு பெயர்த்து எழுதும்போது எழுத்துக்களையும், சொற்களையும் பிழைபட எழுதியுள்ளனர்.

இச்சுவடியை டாக்டர் எம். நந்தகுமார், மூலச்சுவடியில் காணப்பெறும் செய்திகளை அப்படியே பதிப்பித்து, விளக்க உரையில் தவறுகளைச் செப்பம் செய்து, அனைவருக்கும் எளிதில் பயன்படும் வகையில் பதிப்பித்துத் தந்துள்ளார். அவரது பணி பாராட்டுக்குரியதாகும்.

மூன்றாம் பதிப்பாக தற்போது வெளிவர துணைநின்ற இந்நூலினைப் பதிப்பிக்கத் துணைநின்ற சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திரு. இரா. சுப்பிரமணியன், வெளியீட்டு மேலாளர் டாக்டர். குடவாயில் பாலசுப்ரமணியன் ஆகியோருக்கும், பதிப்புத்துறை பணியாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

இந்நூலினை அச்சிட நிதிஉதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மா. வீர சண்முக மணி**, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்
சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்
8-12-2005

## முன்னுரை

முந்தி யுதித்தனை முக்கண்ணர்க் கோர்கணை
தந்த முகத்தனைத் தார்புனை தோளனைச்
சிந்து நிறத்தனைச் சித்திச மேதனை
வந்தனை செய்து வழிபடு வாமரோ.

உலகில் மனிதர்களாகப் பிறந்து முற்பிறவியில் செய்த நன்மையினாலும், பிறப்பின் உண்மைகளைப் பற்றி ஆராய்ந்து மக்களுக்குப் பலவிதங்களில் தொண்டு செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் சித்தர்கள் பலவிதமான முறைகளில் கற்றுத் தெரிந்து கொண்டவற்றில் ஞானம், போகம், சித்து ஆகியவையும் அடங்கும். இவற்றைப் பற்றி ஆராயும்பொழுது மக்கள் பிணிகள் தீர்ந்து நோய் நொடிகள் இல்லாது நீண்ட நாள் வாழவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் அக்காலத்துச் சித்தர்கள் பலவழிகளில் மருத்துவத்தைப்பற்றி ஆராய்ந்தனர். அவ்வாறு மருந்துகள் செய்வதற்குத் தேவையான மூலப்பொருட்கள் சில மூலிகைகள் ஆகியவற்றைக் கொண்டுவர அடர்ந்த காட்டுப் பகுதிகள் மற்றும் மலைப் பிரதேசங்கள் இவற்றிற்குச் சென்று அவற்றைத் தேடி இனங்கண்டு கொண்டு வரும் பொழுது விஷ வண்டுகள், பூச்சிகள், கொடிய மிருகங்கள், நச்சுப் பாம்புகள் ஆகியவற்றால் தீங்குகள் ஏற்படும்பொழுது அவைகளிடமிருந்து மிகவும் சாதுரியமாகத் தப்புவித்து மூலிகைகள், கிழங்கு வகைகள், பட்டை வகைகள், பூ கொடி வகைகள், பழ வகைகள் எல்லாம் சேகரித்துக் கொண்டுவந்து நோய் கண்டவர்களுக்கு மருந்துகள் தயார்செய்து கொடுத்துக் குணப்படுத்தி இருக்கிறார்கள்.

இந்த நிலையில் அக்காலத்துச் சித்தர்கள் மருந்து வகைகளையும், வியாதிகளின் குறி குணங்களையும் நன்கு புரிந்து வைத்துக்கொண்டு அவற்றைப் பயன்படுத்தி அனுபவ முறையில் சில மருந்துகளைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். விரைவில் செய்து முடிக்க வேண்டும் என்றும் அதே சமயத்தில் சில பச்சைவெட்டு மருந்துகளையும் இத்துடன் உபயோகித்து இந்த மருந்துகளின் குணம், அதன் தன்மை, வீரியம் இவைகள் விட்டுப்

போகாத அளவிற்கு மருந்துகளைக் கட்டுப்படுத்தியும், கொடிய விஷத் தன்மையுள்ள மருந்துகளைச் சில மருந்து வகைகளில் சேர்த்து அந்த மருந்துகளின் வீரியத் தன்மையைக் குறைத்தும் இருக்கிறார்கள். சில மருந்துகளை முறைப்படி அரைத்து முறைப்படி சுத்திசெய்து மருந்துகள் தயார் செய்து நோயாளிகளுக்குக் கொடுத்துச் சில நேரங்களில் குணப்படுத்தியும் இருக்கிறார்கள்.

அப்படி அவர்கள் செய்ததையும் அவர்களது உண்மையான அனுபவத்தையும் அக்கால மக்கள் புரிந்துகொண்டு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகச் சுவடிகள் மூலமாக எழுதி வைத்து இருக்கிறார்கள். அப்படி அவர்கள் எழுதி வைத்திருந்த சுவடிகளில் ஒரு பகுதியை நன்கு புரிந்துகொண்டு மிகவிளக்கமாக, புத்தகமாகப் பதிப்புச் செய்து இக்காலத்து மக்களுக்கு அக்காலச் சித்தவைத்திய அனுபவ முறைகளையும் பற்றித் தெரிந்துகொள்ள வசதியாக இந்தச் சுவடியைத் தொகுத்துப் பார்க்கும்போது மிகமிக அதிர்ச்சி ஏற்படும்படியாகவும் இந்த உலகில் இவ்வளவு மருந்து வகைகள் இருக்கின்றனவா? என்று வியப்பு அடையும் அளவிற்கு மருந்து வகைகளின் அளவுகள் குறிக்கப்பட்டு இருப்பது மிகவும் ஆச்சரியமான ஒன்றாகும். மற்றவர்களுக்கு எளிதில் புரியாத அளவிற்குச் சூசகமான பாடல்கள் மூலமாக எழுதி வைத்திருப்பதுடன் ஒவ்வொரு மருந்துக்கும் தொகுப்புப் பெயர் இட்டுப் பாடல் மூலமாக எழுதி வைத்து இருக்கின்றார்கள்.

மேலும், இந்த நூலில் எழுதப்பட்டு இருக்கும் சில மருந்துகள் செய்வதற்குத் தேவையான மருந்து வகைகள் சுமார் 140-க்கும் மேற்பட்டவை. இவற்றைப் பார்க்கும்பொழுத் மிகவும் வியப்பாக இருக்கும். அக்காலத்தில் இவ்வளவு பெரிய மருந்து வகைகளைச் செய்வது என்பது அவர்களுக்குக் கஷ்டமாக இருக்காது. ஆனால் இக்காலத்தில் அனைத்து மருந்து வகைகளையும் சுத்தமானதாவும் அவர்கள் குறிப்பிட்டு இருக்கும் அளவிற்கு வாங்குவது என்பது கஷ்டமாகத்தான் இருக்கும். இருப்பினும் நாம் இவற்றைப் படித்து மருந்துகளைத் தயாரித்து உபயோகம் செய்து பார்ப்பதற்கு முயலுவதில்லை. என்றாலும் இன்று நாம் இவைகளைப்

பற்றியெல்லாம் தெரிந்துகொள்ள இப்படிப்பட்ட சுவடிகளையெல்லாம் புத்தகமாகப் பதிப்புச் செய்து மக்கள் பயன்பெற வெளியிட வேண்டும் என்று நடுவண் அரசும், மாநில அரசும் பொறுப்பு எடுத்துக்கொண்டு இதற்கான செலவுகளுக்கு நிதியுதவி செய்து வருவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

மேலும், இந்த நூல்களில் பதிப்புச் செய்யப்பட்ட சுவடிகளின் முறைகளையும் அளவுகளையும் தற்காலத்திற்கு ஏற்றபடி மக்கள் எளிதில் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகச் சில மருந்துகள் செய்யும் முறைகளில் அதிகப்படியான முறைகளைத் தெரிவித்து இருக்கின்றார்கள். இதில் சில மருந்துகள் செய்யும் முறைகளில் புரியாத நிலையும், சந்தேகமும் ஏற்படக்கூடாது. அவ்வாறு சந்தேகம் ஏற்பட்டால் அனுபவம் உள்ள மருத்துவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுச்செய்ய வேண்டும் என்று இந்நூலில் குறிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் சில மருந்து வகைகளில் கொடிய விஷம் உள்ள மருந்துகள் சேர்க்கப்பட்டுச் செய்ய வேண்டி இருக்கும். அப்படி உள்ள மருந்துகளைச் சில நோய்களுக்காக உட்கொள்ளும் பொழுது, அவைகள் தகுந்த முறைப்படியும், கலவைகளில் சரியானபடியும் கலந்து செய்யப்படாமல் இருக்குமாயின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டுவிடும். ஆகவே மருந்து செய்யும் முறைகள் இந்தநூலில் மிக விளக்கமாக இருந்தாலும் அவற்றை அனுபவரீதியாகத் தெரிந்து செய்வதுதான் நல்லது. இதற்காக இத்துறையில் அனுபவம் உள்ள மருத்துவர்களின் ஆலோசனையைப் பெற்று மருந்து செய்ய முற்படவேண்டும் என்று இந்த நூலில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

முக்கியமாக சில நோய்களுக்குப் பல முறைகளைப் பின்பற்றி சிகிச்சை செய்தும் பலன் கிட்டாத அளவிற்கு இருக்கும் நோய்களுக்கு மிகச் சிறப்பாகவும், எளிய முறையிலும் மக்கள் பெற்றுப் பயன்பெற வேண்டும் என்பதற்காகச் சில மருந்து முறைகளுடன், வியாதிகளின் குறி குணமும், எத்தனை வகையான முறைகள் உள்ளன என்பதும் இந்த நூலில் விபரமாக இடம் பெற்றுள்ளன.

இந்த நூலில் குறிப்பிட்டு உள்ள மருந்து வகைகளில் எல்லாம் கூடுமான வரையில் எல்லாவிதமான மருத்துவ முறைகளும் உள்ளன. அதாவது மேல் பூச்சு மருந்து குடிநீர் (கஷாயம்) தைலம், லேகியம், சூரணம், பற்பம், செந்தூரம், நெய் வகைகள் இப்படி எல்லா விதமான முறைகளும் மிகவும் விரிவாகக் கூறப்பட்டு உள்ளன. இப்படிப்பட்ட மருந்து வகைகள் அக்காலத்திலிருந்து இக்காலம் வரையிலும் பலவிதமான நூல்கள் மூலமாக வெளிவந்து உள்ளன. இருந்தாலும், மருந்தின் வகைகள, மூலிகைகள் எல்லாம் ஒன்றுதான். ஆனால் அவைகள் செய்யும் முறைகளிலும், மருந்துகளைச் சேர்த்துக்கொள்ளும் வகைகளில்தான் அதிகமான வேறுபாடு உள்ளது. இப்படி அமைந்த காரணம் அக்காலச் சித்தர்கள் அவரவர்கள் அனுபவ முறைகளில் ஆராய்ந்து செய்யப்பட்டதனாலாகும். இந்த நூலைப்படிக்கும் பல வாசகர்கள் போல், அனுபவம் உள்ள சித்த வைத்திய இளைஞர்கள்; வாசித்துப் பார்க்கும் பொழுது பல நூல்களில் உள்ள முறைகளுக்கும் இந்த நூலில் உள்ள முறைகளுக்கும் மிகுந்த வேறுபாடு உள்ளது என்று அவர்கள் யோசிக்கக்கூடும்.

உதாரணமாக அக்காலச் சித்த மருத்துவர்கள் மருந்து வகைகளை எழுதும்பொழுது வேர்களைக் குறிப்பிட்டு எழுதுவார்கள். சிலர் இலைகளையும், பட்டை வகைகளையும், பூ வகைகளையும் கிழங்கு வகைகளையும் குறிப்பிட்டு எழுதுவார்கள். இப்படி எழுதியுள்ளவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வியாதிகளுக்கு ஏற்றபடி மருந்து வகைகள் சரியான அளவுகளிலும், முறைகளிலும் சேர்க்கப்பட்டு உள்ளனவா என்பதைப் படித்த உடன் கண்டு பிடிக்கும் ஆற்றல் இக்கால மருத்துவ உலகில் சித்த வைத்தியர்களுக்கு மட்டும்தான் இருக்க இயலும். இதற்குக் காரணம், அனைத்து மூலிகைகளின் குணம், அதன் வீரியம், செயல் புரியும் தன்மை, ஆகியவற்றை மிகவும் விபரமாகவும், தெளிவாகவும் தெரிந்து வைத்திருப்பதே ஆகும்.

ஒரு வியாதிக்கு ஒரு மருந்துமுறை எழுதப்பட்டு அந்த முறையில் வியாதிக்கும் ஏற்றபடி மருந்து வகைகள் சேர்க்கப்பட்டு உள்ளனவா? சில விஷ மருந்துகளை மருந்துகளுடன் கலந்து

மருந்துகள் செய்யும்பொழுது அதனால் சிலருக்கு ஒவ்வாமை ஏற்பட்டால் அதற்கு மாற்று மருந்து குறிப்பிடப்பட்டுள்ளதா? அல்லது நன்கு அரைக்கப்பட்டு உள்ளதா? சுருக்குக் கொடுக்கப்பட்டு உள்ளதா? என்பதைப் பார்த்த அளவில் சொல்லும் அளவிற்கு மருத்துவர்களுக்குத் தெரியும். ஆனால் இந்த நூல் மூலச் சுவடியில் இருந்து நகல் செய்யப்பட்டது. சில பக்கங்கள் சரியில்லை. இருந்தாலும் அதனைச் சீர்செய்து முறையாக ஒழுங்குபடுத்திப் பின்ன்ர தொகுத்து இந்த நூல் பதிப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதை வாசகர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நூல் சரசுவதி மகால் நூலகத்தின் மருத்துவச் சுவடிப் பகுதியில் மூலச்சுவடி எண்; 331ஐயும் கையெழுத்துப் பிரதி எண் (Copied volume) 1758ஐயும் கொண்டதாகும்.

இப்படிப்பட்ட மருந்து முறைகள் மக்களுக்கு அவசியம் தெரிய வேண்டும் என்னும் உயரிய நோக்குடன் மிகுந்த அக்கறையுடன் மற்றும் சிரமத்துடன் இந்நூலைப் பதிப்பித்த பதிப்பாசிரியர் இந்நூலை மிகவும் நல்ல முறையில் பதிப்புச் செய்ய உதவிய உலகப் புகழ் பெற்ற தஞ்சை சரபோஜி மன்னர் சரஸ்வதி மகால் நூலக இயக்குநர் பேராசிரியர் மு. சதாசிவம் அவர்களுக்கும், அவ்வப்போது சில பழைய நூல்களை முகம் சுளிக்காமல் பார்வைக்குக் கொடுத்து உதவிய அலுவலக ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பு: இப்பதிப்பு நூலில் இச்சுவடியின் மூலத்தின் பாடல்கள் பிழைதிருத்தாமல் எழுதப்பட்டு, விளக்கத்தில் திருத்தி எழுதப்பட்டுள்ளன என்பதை வாசகர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மூலப்பாடலில் உள்ள பிழைகளைத் திருத்தாத காரணம், அக்காலத்தில் இருந்த கல்வி நிலை, சொல்லமைப்புகள், எழுத்து வடிவங்கள் ஆகியவை அழியாதிருக்கவும், இக்காலத்தில் தெரிந்து கொள்ளவுமேயாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

டாக்டர் **மு. நந்தகுமார்**

# பொருளடக்கம்


| பாடல் எண் | | பக்க எண் |
|---|---|---|
| 1. | தலைமயிர் உதிர்தலுக்கும் புழு வெட்டுக்கும் மருந்து செய்யும் முறை | 1 |
| 2. | கண் விழிகளில் விழும் பூ, வெள்ளைப் புள்ளி இவைகள் நிவர்த்திக்கு மருந்தும் செய்யும் முறையும் | 3 |
| 3. | மேக கிரந்தி நோய்க்கு நெய் மருந்து செய்யும் முறையும் உபயோகமும் | 5 |
| 4. | அம்மைக்கட்டுக்கு மருந்தும் செய்யும் முறையும் | 8 |
| 5. | தந்த வாய்வுக்கு (பல் குத்தல் பல்லரணைக்கு) மருந்து | 10 |
| 6. | தாம்பூர பற்பம் செய்யும் முறையும், தீரும் நோய்களும் | 13 |
| 7. | குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்குப்பண்டாரம் சொன்ன தேங்காய் எண்ணெய் மருந்தும் செய்யும் முறையும் | 16 |
| 8. | ஒத்தைத் தலைவலிக்கு மருந்து செய்யும் முறையும் இந்த நோயின் குறிகுணமும் | 21 |
| 9. | சூதக வாய்வு வலிக்கும், வயிற்று வாய்வு வலிக்கும் சுர வீக்கத்திற்கும் மருந்தும், செய்யும் முறையும் | 24 |
| 10. | குடலேற்ற நிவர்த்திக்கு மருந்து | 26 |
| 11. | செம்பு உலோகத்தைச் சுத்தி செய்யும் முறையும் அனைத்துச் சுரத்திற்கான மருந்து சஞ்சீவி மாத்திரையும் | 27 |

12. அரையாப்பு நோய்க்கும் இரத்த கிரந்தி நோய்க்கும் மருந்து 30
13. பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வுக்கு லேகிய மருந்து 33
14. சவுக்கார வைப்பு 35
15. முக்கூட்டுத் தைலம் செய்யும் முறை 39
16. மேகம் பிறக்கும் வகை அல்லது மேக நோய் வருவதற்கான காரணங்கள் 48
17. ரச (இரத்த) செந்தூரம் செய்யும் முறையும் உபயோகமும் 50
18. தாளக பற்பம் பவளக் குழம்பு செய்யும் முறையும் உபயோகமும் 53
19. சன்னி மாத்திரை (சன்னி நோயின்அறிகுறிகளும் அதன் நிவர்த்திக்கு மருந்து செய்யும் முறையும்) 56
20. கிறாணி கபாடம் (கண்களின் மூலமாக மருந்து போடும் முறை, கலிக்கம்) 59
21. பாலாசமொடு கிளிப்பாய் 61
22. லிங்கக்கட்டு (மருந்து செய்யும் முறையும், அதன் உபயோகமும்) 63
23. ரசக் கற்பூரக் கட்டு சவுக்கார லிங்கம் 65
24. பிரமமுனி அருளிச்செய்த கருக்கடைசூத்திரம் 67
25. வாதத்திற்குத் தைலம், வாதம் எண்பதுக்கும் தைலம் 71
26. கந்தக ரசாயனம் செய்யும் முறை 78
27. வாயுவுக்கு வச்சிரவல்லி உருண்டை மருந்து 82
28. சயரோக இருமலுக்கும் இளைப்புக்கும் லேகிய மருந்து 84
29. சகல கண் வியாதிகளுக்கும் மருந்து 89

30. பேதி (வயிற்றுப் போக்கு) நிவர்த்திக்கு மருந்து 91
31. சிவன் வேம்புச் சூரணம் 94
32. சூசிக வாய்வுக்கு லேகியம் 98
33. பரங்கிப்பட்டை பதங்கம் 103
34. மண்டையிடி, கபாலவலி இவைகள் நிவர்த்திக்கு வேப்பம்பட்டை தைலம் செய்யும் முறை 106
35. அறுகம்புல் வேர் தைலம் செய்யும் முறையும் நிவர்த்தியாகும் நோய்களும் 108
36. குமரித் (சோற்றுக் கற்றாழைத்) தைலம் செய்யும் முறையும், இதனால் நிவர்த்தியாகும் நோய்களும் 111
37. மேகவாய்வு, சூலை, காய்ச்சல், கரப்பான் கிரந்தி, அரையாப்பு இவற்றிற்கு மருந்து 114
38. மனித அவயவங்களின் ராசிபலன் பற்றிய சுவடி விவரங்கள் 116
39. இரும்பைச் சுத்தி செய்யும் முறை 128
40. அக்காலத்து சித்தர்களின் கருத்துக்களின் குறிப்பு 129

# பல திரட்டு வைத்தியம்

**சுவடி மருந்து முறை 1**

## தலை மயிர் உதிர்தலுக்கும் புழு வெட்டுக்கும் மருந்தும் செய்யும் முறையும்

பழந்தின்னி வெளவால் கொண்டு வந்து தேங்காய் எண்ணெயில் போட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி நாற்பது நாள் பூசவும். புழு வெட்டுத்தலை, மயிருதிர்தல் நீங்கி ரோமம் முளைக்கும்.

**விளக்கம்**

மனிதர்களுக்கு மிக முக்கியமான அழகைக்கொடுப்பது தலை மயிர் ஆகும். இப்படி அழகாக இருக்கும் தலை மயிர் சில சமயங்களில் தானாக உதிர்வதும் உண்டு. இப்படி உதிர்வற்குக் காரணம் அதிக உஷ்ணம் அல்லது தலைமுடி வளர்வதற்குத் தேவையான சத்துக்களில் குறைவு ஏற்பட்டாலும் உதிரும். மேலும், முடிகளில் புழு வெட்டு என்று சொல்வதும் ஏற்படுவதுண்டு. இது தலையில் திட்டுத் திட்டாக இருக்கும். அதனைச் சுற்றியிருக்கும் முடிகள் உதிர்ந்து விழுந்து விடும். இப்படிப்பட்ட நோய்களுக்கு நிவர்த்தி செய்ய மருந்து செய்யும் முறை கீழே விவரமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

பழந்தின்னி வெளவால் என்ற பறவையினத்தை உயிருடன் கொண்டுவந்து அதன் மலப்பையை மட்டும் வெளியே எடுத்துவிட்டு இதன் முழு உருவத்தைத் தேங்காய் எண்ணெய் 11/2 லிட்டர் அளவில் ஒரு இரும்புச் சட்டியில் ஊற்றிப் பிறகு அந்த வெளவாலை நசுக்கி இதில் போட்டு நன்றாகக் காய்ச்சி (1½

லிட்டர் தேங்காய் எண்ணெய் சுமார் 750 மில்லி ஆக வரும் வரை) மெழுகு பதத்தில் வந்தவுடன் இறக்கி விடவும். இந்த எண்ணெய் ஆறிய பிறகு துணி கொண்டு வடிகட்டிப் பாட்டிலில் ஊற்றி வைத்துக் கொண்டு தினம் இரண்டு வேளை வீதம் நாற்பது நாட்கள் தலையில் பூசி வந்தால் புழு வெட்டு, மயிர் உதிர்தல் நிற்கும். இது மிக உயர்ந்த மருந்தாகும். இந்த எண்ணெயை நமது உள்ளங்கையில் மட்டும்தான் ஊற்றித் தலையில் தடவ வேண்டும். மற்ற இடத்தில் பூசிக் கொள்ள வேண்டாம். அப்படி உள்ளங்கைத் தவிர மற்ற இடத்தில் பூசிக் கொண்டால் அந்த இடத்தில் மயிர் வளரும் என்ற கருத்தினைப் பார்க்கும்பொழுது தலைமுடி இல்லாமல் வழுக்கையாக இருக்கும் இடத்தில் இதில் குறிப்பிட்டுள்ள வௌவால் தைலத்தைத் தொடர்ச்சியாகத் தடவிக் கொண்டே வந்தால், வழுக்கையாக இருந்த இடத்தில் முடி வளரும்.

குறிப்பு: இதில் குறிப்பிட்டுள்ள முக்கியமான மூலப்பொருள் பழந்தின்னி என்ற வௌவால் ஆகும். இந்த வௌவாலை எந்தவித உட்காயங்கள் அல்லது வெளிக்காயங்கள் இல்லாமல் உயிருடன் கிடைப்பதை உபயோகப்படுத்திக் கொள்ளவும் என்பது பதிப்பாசிரியர் கருத்தாகும். காரணம் இந்த எண்ணெயில் சேர்க்கப்பட வேண்டிய பழந்தின்னி வௌவால் முழுமையாக எண்ணெயில் போட்டுக் காய்ச்ச வேண்டும் என்று அக்காலத்துச் சித்தர்கள் சுவடிகளின் மூலமாக எழுதி வைத்திருக்கின்ற காரணத்தினாலும் மேலும் இந்த வௌவாலின் உடலில் இருக்கும் ரத்தம் மாமிசம் சிதறக்கூடாது என்பதற்காகக் காயம், உட்காயம் இல்லாது உயிருடன் பிடித்துத் தேங்காய் எண்ணெயில் போட்டுக் காய்ச்சினால் தான் நல்ல பலன்களைக் கொடுக்கும். எனவே, இந்த வௌவால் மிகச் சிறியதாக இல்லாமல், நடுத்தரமாக உள்ள அளவு அல்லது அதை விடப் பெரிய அளவு உள்ள வௌவாலாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் அந்த வௌவாலில் இருக்கும் கொழுப்பும் எண்ணெயும் அதிகமாக இருக்கும். எனவே, இந்த மாதிரியான வௌவாலைச் சேர்ப்பதால் எண்ணெய் மிகவும் சக்தியுடன் இருக்கும். எனவே நன்கு வளர்ந்து பருவமடைந்த வௌவாலை உபயோகப்படுத்தவும்.

**சுவடி மருந்து முறை**: 2

## கண் விழிகளில் விழும் பூ வெள்ளைப் புள்ளிகளுக்கு நிவர்த்திக்கு மருந்தும் செய்யும் முறையும்

பீதரோகணி 92 திப்பிலி 61 இந்துப்பு 91 இந்த மூன்று மருந்தையும் நந்தியாவட்டைச் சாற்றில் நாள் நாலு சாமமரைத்து மாத்திரை செய்து நிழலிலுலர்த்தலாயுலர்த்தி முலைப்பாலிலரைத்துக் கண்ணிலிடக் கண் பூ வெள்ளைப் படலம் சிர நோய் முதலானவை தீரும்.

விளக்கம்:

மனிதப் பிறவிகளுக்கும் மற்ற எல்லா உயிர்களுக்கும் கண் மிக முக்கியமானதாகும். அப்படிப்பட்ட கண்ணை நாம் எந்த நோய்களும் வராதவாறு நல்லவிதமாகப் பார்வை தெரியும்படி வைத்துக் கொள்வது நமது கடமையாகும். சில சமயங்களில் கண்ணில் நோய்கள் வருகின்றன. அப்படி வரும் நோய்களில் கண்ணில் பூ, வெள்ளைப் படலம் என்பது ஒரு வகை. அதாவது, கருவிழிகளில் வெள்ளைப் புள்ளி மாதிரி இருக்கும். இதனைத் தான் கண் வெள்ளைப் பூப்படலம் என்று சொல்வதுண்டு. இந்த வெள்ளைப் பூ கண் விழிகளை மறைக்கும் அளவிற்குப் படர்ந்து விடும். இதனைக் கூடத் தற்சமயம் ஆங்கில முறை கண் மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்து, இந்த வெள்ளைப் படலத்தை நீக்கி விடுகிறார்கள். அக்காலத்தில் கீழ்க்கண்ட சித்த வைத்திய முறைகளின் மூலமாக மருந்துகளைத் தயார் செய்து குணமடையச் செய்துள்ளார்கள் என்பதை அக்காலத்துச்

சுவடிகளின் மூலமாக நாம் அறிந்து கொள்கிறோம். அந்த மருந்துகளின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

தேவையான மருந்துகளின் விபரம்:

| | |
|---|---|
| பீதரோகணி | 15 கிராம் |
| திப்பிலி | 10 கிராம் |
| இந்துப்பு | 10 கிராம் |

இந்த மூன்று வகைகளையும் கல்வத்தில் போட்டு நந்தியாவட்டை பூச்சாற்றில் நான்கு சாமம் (12 மணி நேரம்) அரைத்து மாத்திரையாகச் செய்து நிழலில் காயவைத்துக் கொண்டு, மேற்கண்ட கண் நோய்களுக்கு இந்த மாத்திரையைத் தாய்ப்பாலில் உரைத்து, மூன்று சொட்டு வீதம் கண்களில் போடவும். இப்படித் தினம் இரண்டு வேளை வீதம் ஏழு நாட்கள் போட்டு வந்தால் கண் வெள்ளைப்பூ மாறும், மற்றக் கண் நோய்களும் தீரும். இது கைகண்ட மருந்து. கண் வலி, கண் குத்தல், கண் வீக்கம் இவைகளுக்கு நந்தியாவட்டைப் பூச்சாற்றை மட்டும் தினம் 5 சொட்டு வீதம் மூன்று நாட்களுக்குப் போட்டு வந்தால் நல்ல குணம் தெரியும். கண் அரிப்பு நீங்கும்.

இரண்டாவது முறை:

| | |
|---|---|
| ஓரிலைத்தாமரை வேர் | 25 கிராம் |
| துத்தம் | 5 கிராம் |
| நெல்லிமுள்ளி | 10 கிராம் |
| மிளகு | 10 கிராம் |

இந்த நான்கு வகைகளையும் கல்வத்தில் போட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு அரைத்து உருண்டைகளாகச் செய்து நிழலில் காய வைத்துக் கொண்டு மேற்சொன்ன வியாதிகளுக்கு

இந்த உருண்டையை எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு நன்கு உரைத்துக் கண் விழிகளில் தினம் இரண்டு வேளை வீதம் மூன்று சொட்டுகளாக மூன்று நாட்களுக்குப் போடவும். மேற்சொன்ன வியாதிகள் தீரும்.

**மூன்றாவது முறை:**

உத்தாமணிக் கொடியின் இலைகளைக் கொண்டு வந்து சாறு பிழிந்து 6 நாட்களுக்கு ஒரு கண்ணிலும் ஏழு நாட்களுக்கு ஒரு முறை கண்ணிலும் மூன்று சொட்டு வீதம் விட்டால் கண் வலி,, கண் விழிகளில் பூ விழுதல் நீங்கும்.

**குறிப்பு:**

பீதரோகிணி, நற்பவளம், சாரடை வேர் இவைகளைச் சமமாக எடுத்துத் தண்ணீர் விட்டு அரைத்துக் கெட்டியாக ஒரு சிறு துண்டு போல் செய்து, நிழலில் காயவைத்துக் கொண்டு இதனை முலைப்பாலில் உரைத்துப் போட்டால் வெள்ளைப் பூ மாறும். தண்ணீரில் உரைத்துப் போட்டால் வெள்ளை எழுத்துப் போகும்.

**சுவடி மருந்து முறை 3**

## மேக கிரந்தி நோய்க்கு நெய் மருந்து செய்யும் முறையும் உபயோகமும்

கட்டுக்கொடிச்சார் விடத்தலை ஓரிதழ்த்தாமரை யாவாரையிலை வகைக்குப் படி பசுவெண்ணெய் படிக்கு சீரகம் அதிமதுரம் 31 குக்குலம் 34 சாதிக்காய் சாதிபத்திரி கிராம்பு வால்மிளகு வகைக்குவிடச் சன்னி லவங்கப்பட்டை விலாமிச்சம் வேர் வீதம் ஏலம் வெள்ளைக் குங்கிலியம் இவ்வளவும் பசுவின் பால் விட்டரைத்து நெய்யிலேயுஞ் சாரிலேயுங் கலந்து காய்ச்சிப் பதத்தோடேயிரக்கி வைத்துக் கொண்டு சாயந்திரம் ஒரு கரண்டி

சாப்பிடவும். இச்சா பத்தியம் கரைப்பன பதார்த்தம் வுளித்து விரக்கலுயிருபத்தி மூன்று வகை கிரந்தி பித்தகாசம் கிரணி ரேருவுயிலவுந் தீரும் பத்து பத்தி நாலிருபது பொழுது கொள்ளவும்.

**விளக்கம்**:

இந்தக் கிரந்தி நோய் என்பது தோலைப் பற்றி உடலில் சொரி படைகள் மாதிரி இருக்கும். இதில் பலவகை உண்டு. இவற்றில் சிலவற்றின் குறிகுணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

கருங்கிரந்தி
செங்கிரந்தி
அரிகிரந்தி
ஆளங்காய்க் கிரந்தி
கள்ளிப்பூக் கிரந்தி

**குறிகுணங்கள்:**

தேகத்தில் சொரி படைகளைப் போல் இருக்கும். தேகத்தில் எரிவு, தினவு கண்டுக் கருப்பாய்த் தடித்து அடிக்கடி செம்முலைப்போல் ஏற்பட்டு, நீர்க்கட்டி வெடித்து வற்றக் கருமையான நிறத்தில் அசடு உண்டாகி உதிரும். இப்படி ஏற்பட்டு கருப்புத் தழும்பும் ஏற்பட்டுப் புண் மாதிரி இருந்தால் இதனைக் கருங்கிரந்தி என்று கூறுவார்கள்.

2. தேகத்தில் செம்மை நிறமாய் வட்ட வட்டமாய்த் தடித்துப் படர்ந்து இவைகளின் மத்தியில் வெண்மையாய் இருந்து அதைச் சுற்றிலும் ஓரங்களின் முளை முளையாய் இருந்து சீழ்கட்டி வற்றிச் சிவந்து சருகு போல் உதிரும். இதன் தழும்பும் சிவப்பாக இருக்கும். இதனைச் செங்கிரந்தி என்று கூறுவர்.

3. தேகத்தில் சிறு சிரங்குபோல் தோன்றிப் படர்ந்து மாருத்தினவும் அரிப்பும் அதிகமாகக் காணும். இதனை அரிகிரந்தி என்று கூறுவர்.

4. தேகத்தில் கழற்காய் போல் தோன்றி உருண்டைகளாக இருக்கும். ஒவ்வொன்றும் வெடித்துப் புண்ணாகும். இதனை ஆலங்காய்கிரந்தி என்று கூறுவர்.

5. தேகத்தில் கள்ளிப்பூப் போல் தடித்து அரிப்பு ஏற்பட்டு இரணமாகும். (புண் மாதிரி இருக்கும்) இதனைக் கள்ளிப்பூ கிரந்தி என்று கூறுவர்.

இப்படி இன்னும் சில வகையான கிரந்தி நோய்களும் உண்டு.

**மருந்து செய்யும் முறை பற்றியும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| காட்டுக்கொடிச்சாறு | 1/2 லிட்டர் |
| ஓரிலைத் தாமரை இலைச்சாறு | 1/2 லிட்டர் |
| பசுவின் நெய் | 1/2 லிட்டர் |
| சீரகம் | 35 கிராம் |
| அதிமதுரம் | 35 கிராம |
| குக்குளம் | 35 கிராம் |
| சாதிக்காய் | 35 கிராம் |
| சாதிப்பத்திரி | 35 கிராம் |
| கிராம்பு | 35 கிராம் |
| வால்மிளகு | 35 கிராம் |
| சன்ன லவங்கப்பட்டை | 35 கிராம் |
| விலாமிச்சம் வேர் | 35 கிராம் |
| ஏலம் | 35 கிராம் |
| வெள்ளைக் குங்கிலியம் | 35 கிராம் |
| விடுதலைச் சாறு | 1/2 லிட்டர் |
| ஆவாரையிலைச்சாறு | 1/2 லிட்டர் |

கடைச் சரக்குகளை எல்லாம் பசுவின் பால் விட்டு நன்றாக அரைத்து நெய்யில் சாறுவகைகளையும் நன்றாகக் கலந்து இரும்புச்

சட்டியில் ஊற்றி நன்றாகக் காய்ச்சிப் பதம் வந்தவுடன் இறக்கி ஆறவைத்துக் கொண்டு, நல்ல சுத்தமான பாட்டிலில் அடைத்து வைத்து கீழே கொடுக்கப்பட்டுள்ள விகித முறைப்படி உட்கொள்ளவும்.

**பத்தியம்:**

மிகமிகக் கடுமையான இச்சா பத்தியம் (புளி, உப்பு, கரப்பான் வகைப் பதார்த்தங்கள் நீக்க வேண்டும்.)

**உட்கொள்ளும் அளவு:**

தினம் ஒரு வேளை வீதம் ஒரு சின்ன மோர்க்கரண்டி அளவு 10 நாட்களுக்கு மட்டும் சாப்பிட வேண்டும்.

**தீரும் வியாதிகள்;**

அனைத்துக் கிரந்தி பதின்மூன்றும் பித்தகாசம் கரப்பான், சூலை, முழிக்கட்டு, இரணம் முதலியவைகள் தீரும்.

**சுவடி மருந்து முறை 4**

## அம்மைக்கட்டுக்கு மருந்தும் செய்யும் முறையும்

சமுத்திரப் பழமனைத் திப்பிலினைக்கிறம்புனைக் இந்த மருந்து மூணு முலைப்பால் விட்டரைத்து கெட்டயிறுக்கிறயிடத்திற்றடவ அம்மைக்கட்டு வற்றிப்போகும். காரைப்பருப்பு, துவரைப்பருப்பு, பச்சைப்பருப்பு, உப்பு, மிளகு, மஞ்சள், பெருங்காயம் ஆகும். மோரைத் தயிராகும் பதினைஞ்சறசாக்கு புளிப் புகையிலை ஆகாது. கரைப்பான் பண்டம், பூசணிக்காய் பன்னிக்கறி இது மூணு மாசமாகாது. கிரந்தி பண்டம் அப்படித்தானே விடவும். மருந்துயிட்டுத்தால் யிருக்கமானால் தாயிசத்தின் மேலே குணமாகும்.

**விளக்கம்:**

அம்மை என்பது ஒரு உஷ்ணத்தினால் வரக்கூடியது. இந்த நோயைக் கண்டு மக்கள் மிகவும் பயப்படுவார்கள். ஆனால் இப்படி அம்மை வந்தால் அதற்கு எந்தவிதமான மருந்துகள் மூலமாகவும். சிகிச்சை அளிக்க முடியாது. அப்படிச் செய்தாலும் பயன் இருக்காது. மேலும் இப்படி வரும் அம்மைகளில் பலவகை உண்டு. அம்மை உள்ளவர்கள் வீட்டில் யாரும் எதையும் சாப்பிட மாட்டார்கள். அப்படிச் சாப்பிட்டால் அவர்களுக்கும் ஒட்டிக்கொள்ளும் என்று நினைப்பார்கள். இந்த அம்மை எளிதில் பரவக்கூடியது. மிகச் சுத்தமாகவும் இருக்க வேண்டும். இந்த அம்மை சில சமயம் கட்டி மாதிரி நின்று விடும். இதனை அம்மைக்கட்டி, தாது வீக்கம், பொன்வீங்கி என்று சொல்வார்கள். இதன் நிவர்த்திக்குத் தேவையான மருந்துகளின் பெயரும், மருந்து செய்யும் முறையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**தேவையான மருந்துகளின் விபரம்:**

| | |
|---|---|
| சமுத்திரப்பழம் | 15 கிராம் |
| திப்பிலி | 15 கிராம் |
| கிராம்பு | 15 கிராம் |

இந்த மூன்று வகைகளையும் கல்வத்தில் தட்டிப் போட்டு முலைப்பால் விட்டு நன்றாக அரைத்துக் கட்டியாக இருக்குமிடத்தில் ஒரு வாரத்திற்கு மேல் தடவினால் கட்டி கரைந்து குணமாகும். இத்தகைய அம்மைக் கட்டுக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள உணவுப் பொருள்களைச் சிறிது காலம் வரை பின்பற்றிக்கொள்வது மிகவும் அவசியமானது.

புளி, புகையிலை கரப்பான் வகை உணவுப் பண்டங்கள் இவைகளைப் பதினைந்து நாட்களுக்குச் சேர்த்துக் கொள்ளக்கூடாது. பூசணிக்காய், வாழைக்காய், பறங்கிக்காய் இவைகளை மூன்று மாதத்திற்குச் சேர்த்துக்கொள்ளக்கூடாது.

காரமணி பருப்பு, துவரம் பருப்பு, பச்சைப் பருப்பு, மிளகு, மஞ்சள், பெருங்காயம், சுவைக்கேற்ற உப்பு இவைகளை உணவுடன் சேர்த்துக்கொள்ளலாம்.

**குறிப்பு:**

இந்த அம்மைக் கட்டுக்கு மேல் குறிப்பிட்டுள்ள பத்திய உணவுகளைச் சேர்த்துக் கொள்ளவும். நீக்கவும் என்று குறிப்பிடுவதற்குக் காரணம், இந்த நோய் முற்றிலும் குணமாவதற்காகத்தான். மேற்சொன்ன மருந்துகளை நரம்புச் சிலந்தி என்ற நோய் வந்தாலும் இந்த மருந்தை தினம் இரண்டு வேளை வீதம் ஒரு மாதம் வரையிலும் அல்லது நான்கு மாதம் வரையிலும் தொடர்ந்து சாப்பிட்டு வந்தாலும், ஒரு வருடம் அல்லது இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட வியாதிகளும் குணமாகும்.

**உட்கொள்ளும் அளவு:**

இரண்டு கிராம் எடை தினம் ஒரு வேளை மட்டும்.

**உட்கொள்ளும் காலம்:**

ஒரு மண்டலம். அதாவது 48 நாள்.

**அனுமானம்;**

சர்க்கரையில் கலந்து சாப்பிடவும்.

**சுவடி மருந்து முறை 5**

## தந்த வாய்வுக்கு மருந்து
### (பல் குத்தல் பல்லரணைக்கு மருந்து)

திரிகடுகு கல்லுப்புச் சேர் புளையெள்ளுள்ளி உரியோமமேழும் பொடித்தே கருமுண்டே பல்லோர் மிட்டடக்கப் பல்லரணை பல்குத்து நில்லாமல் போமே நிசம்.

**விளக்கம்:**

மனிதனின் அவயவங்களில் முக்கியமானது பல். இந்த பற்கள் அதிகமாகப் பயன்படக்கூடியவை. ஆகையால் இவற்றை மிகக் கவனமாகவும், சுத்தமாகவும், பல் பூச்சிகள் ஆட்டம், பல் உடைவு, பல் ரத்தக்கட்டு, பல் சொத்தை இவைகள் வராமல் பார்த்துக் கொள்வது மிகவும் நல்லது. இந்தப் பல் வரிசையில் அடிப்பாகத்தில் சில சமயங்களில் பல் பூச்சிகள் (கிருமிகள்) தாக்கும் பொழுது சீழ் கட்டிக்கொண்டு, அந்தப் பாகத்தில் வீக்கமாகவும், அதிக வலியுடனும் இருக்கும். இதனைப் பல் அரணை என்று சொல்லுவார்கள். இதன் நிவர்த்திக்குத் தேவையான மருந்துகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

**தேவையான மருந்துகளின் விபரம்:**

| | |
|---|---|
| சுக்கு | 10 கிராம் |
| மிளகு | 10 கிராம் |
| திப்பிலி | 10 கிராம் |
| கல்லுப்பு | 10 கிராம் |
| புளி | 10 கிராம் |
| வெள்ளைப்பூண்டு | 10 கிராம் |

இவைகளைச் சமனெடை எடுத்துக்கொண்டு, கல்வத்தில் போட்டுப் பொடிசெய்து பல்ஈறு பகுதியில் வைத்துக்கொண்டால் மேற்சொன்ன வியாதிகள் தீரும். பல்லரணை, பல் குத்துகள், தந்த வாய்வு, பூச்சிப்பல் (சொத்தைப் பல்) பல் கூசுதல் இவைகளுக்கு மேல் குறிப்பிட்டுள்ள பொடியைத் தினம் இரண்டு வேளே வீதம் 7 நாட்களுக்குத் தொடர்ந்து உபயோகிக்க வேண்டும்.

**குறிப்பு:**

இதில் சொல்லப்பட்டுள்ள நோய் இருக்கும் சமயத்தில் பல் இடுக்குகளில் உணவுத் துகள்கள் தங்கிக் கொள்ளாதவாறு பார்த்துக் கொள்வது மிகவும் அவசியம். மேலும், உணவுகளைச் சாப்பிட்ட

பிறகு உப்புக் கரைத்த நீரைக் கொண்டு வாயைக் கொப்பளிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் உணவுத் துகள்கள் பல் இடுக்குகளில் தங்கிக் கொள்ள வாய்ப்பில்லாமல் போகும். எனவே மனித அவயவங்களில் மிக மிக முக்கியமானது பல் என்பதை மனதில் கொண்டு நோயற்ற வாழ்வே, குறைவற்ற செல்வம் என்ற பழமொழிக்கேற்பப் பற்களை நாம் பாதுகாத்துக் கொள்வது மிக அவசியமாகும்.

மனித உடம்பில் வாய்வு என்ற காற்றழுத்தம் தங்கிக் கொண்டால் உடலில் வீக்கம், உடல் கடுப்பு, உடல் வலி இவைகள் உண்டாகும். இம்மாதிரியான வாய்வுகளில் ஒன்றானது தான் தந்த வாய்வு ஆகும். இந்தத் தந்த வாய்வு பல் வரிசையின் அடிப்பாகத்தில் இருக்கும். (யானைத் தந்தத்தை விட உறுதியான எலும்பு) அடிப்பாகத்தின் கீழ் இந்த வாய்வு என்ற காற்றழுத்தம் வலியுடன் தங்கிக்கொள்வதினால் வலியுடன் சேர்ந்து தந்த வாய்வு ஏற்படுகின்றது.

**இரண்டாவது முறை:**

பிராயன் பட்டையைக் குழித்தைலம் செய்து, அதில் சுக்கு, கடுக்காய், அரைப்படி இவைகளைச் சமனளவு எடுத்து நன்றாக இடித்துத் தூள் செய்து, மேல் சொன்ன பிராயன் பட்டைக் குழித்தைலமும் இத்துடன் கலந்து களிம்பு போன்று செய்து வைத்துக் கொண்டு பல் துலக்கி வந்தால் தந்த வாய்வு நீங்கும்.

**பல் பூச்சிக்கு மருந்து:**

கண்டங்கத்தரி பழத்தைப் பிட்டுத் தவிட்டு அனல் மீது பரப்பிச் சுட்டு இதனைப் பாகயிலைச் சாற்றில் அரைத்து, நல்லெண்ணெயில் கலந்து, சூரிய வெளிச்சத்தில் ஆறு மணி நேரம் வைத்திருந்து, பல் பூச்சி இருக்கும் இடத்தில் தடவி வந்தால் பல் பூச்சி சாகும். பல் கூசல், பல் வலி இவைகள் நீங்கும்.

**பல் வலிக்கு கஷாயம் மருந்து:**

அவுரிச் செடியின் சமூலத்தைக் கொண்டு வந்து தண்ணீரில் போட்டு, நன்றாகக் காய்ச்சி, வடிகட்டிக் கொண்டு வாய் கொப்பளித்தால் பல்வலி தீரும். இப்படித் தினம் மூன்று வேளை கொப்பளித்து வந்தால் நிவர்த்தி ஆகும்.

**சுவடி மருந்து முறை 6**

# தாம்பூர பற்பம் செய்யும் முறையும் தீரும் நோய்களும்

செம்புப் பொடிக்கு முட்டை தெல்லை-க இரண்டு மொன்றாய்க்கூட்ட கிலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து வில்லைத் தட்டிக் காயவைத்துச் சீலைமண் செய்து கெசபுடம் போடவும். பற்பமாகும். அதை எடுத்துப் போட்டு பண்ணி வைத்துக் கொண்டு சகல சுரத்துக்கும் இஞ்சிச் சாற்றிலிட வள மத்தியம் உப்புப் புளியாகாது.

**விளக்கம்:**

நல்ல சுத்தமான செம்புப் பொடியுடன் கோழி முட்டையின் ஓடுகளை அளவுடன் எடுத்துக் கொண்டு இந்த இரண்டு வகைகளைக் கல்வத்தில் போட்டு எலுமிச்சம் பழத்தின் சாற்றைக் கொண்டு நான்கு பகல் நன்றாக அரைத்து வில்லையாகத் தட்டிக் காய வைத்துக் கொண்டு மண் ஓட்டில் வைத்து, அதனை மண் ஓட்டினால் மூடி, கஜ புடம் போடவும். இந்தப்புடம், நன்கு ஆறிய பிறகு எடுத்துப் பார்த்தால் பற்பமாக இருக்கும். இதனைக் கல்வத்தில் மறுபடியும் ஒரு பகல் அரைத்துச் சுத்தமான பாட்டில்களில் வைத்துக் கொள்ளவும்.

**தீரும் வியாதிகள்:**

சகல சுரத்திற்கும், இஞ்சிச் சாற்றில் ஒரு அரிசி எடை வீதம் இந்த மருந்தைக் கலந்து தினம் இரண்டு வேளை வீதம் ஆறு நாட்களுக்குச் சாப்பிடவும்.

**பத்தியம்;**

உப்பு, புளிப்பு, அசைவ உணவு, கள் நீக்கவும். இதனைத் தவிர இந்தப் பற்பத்தைத் தினம் ஒரு பணவிடை வீதம் தேனில் கலந்து ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் குட்டம், பவுத்திரம், சூலை, குன்மம், வாய்வு வகைகள் குணமாகும்.

**குறிப்பு:**

மேற்படி பற்பத்தை கீழ்க்கண்ட நான்கு முறைகளிலும் செய்யலாம்.

| | |
|---|---|
| சுத்தமான தாம்பரத்தூள் | 30 கிராம் |
| வீரம் (சுத்தி செய்தது) | 10 கிராம் |
| இரசம் (சுத்தி செய்தது) | 10 கிராம் |
| வெள்ளைப்பாசாணம் (சுத்தி செய்தது) | 10 கிராம் |

இவைகளையெல்லாம் கல்வத்தில் போட்டு வெள்ளை எருக்கன் பால் விட்டு ஒரு நாள் அரைத்து வில்லை செய்து காயவைத்து, இதனை மண் ஓட்டில் வைத்துச் சீலை மண் செய்து கெஜ புடம் போட்டால் பற்பமாகும். இந்தப் பற்பத்தையும் மேற்குறிப்பிட்டுள்ள வியாதிகளுக்குக் கொடுக்கலாம்.

**இரண்டாவது மருந்து முறையின் விபரம்:**

| | |
|---|---|
| நல்ல சுத்தமான தாம்பூரம் தூள் | 35 கிராம் |
| சூதம் (ரசம்) | 20 கிராம் |
| கெந்தி (கந்தகம்) | 30 கிராம் |

இவைகளை வெள்ளை எருக்கன் பால் இட்டு ஒரு நாள் அரைத்து வில்லை செய்து காயவைத்து மண்ஓட்டில் அடைத்துச் சீலைமண் செய்து கெஜபுடம் போட்டால் பற்பமாகும். இந்தப் பற்பத்தை மீண்டும் கல்வத்தில் போட்டு சத்திச்சாரனைச்சாரை

விட்டு ஒரு நாள் அரைத்து முன்பு புடம் போட்டது போல் கெஜ புடம் போட்டால் பற்பமாகும். இதனை மேற்படி வியாதிகளுக்கும், மேலே குறிப்பிட்டுள்ள விகிதப்படியும், பத்திய அனுமானம் முறைப்படியும் கொடுக்கவும்.

**மூன்றாவது முறையின் விபரம்:**

| | | |
|---|---|---|
| செம்புத்தூள் (சுத்தி செய்தது) | | 50 கிராம் |
| வீரம் | ,, | 20 கிராம் |
| இரசம் | ,, | 20 கிராம் |
| சூடம் | ,, | 35 கிராம் |
| வெங்காரம் | ,, | 35 கிராம் |
| வெள்ளைப் பாஷாணம் | | 35 கிராம் |

இவைகள் அனைத்தையும் கல்வத்தில் போட்டு வெள்ளை எருக்கன் பால்விட்டு ஒரு நாள் அரைத்து வில்லை செய்து காயவைத்து மண் ஓட்டில் வைத்து, மேல் மூடி போட்டுச் சீலை மண் செய்து காய வைத்து கஜப்புடம் போட்டு ஆறிய பிறகு இதனை எடுத்து, மறுபடி கல்வத்தில் போட்டு நன்றாக அரைத்துப் பொடி செய்து கொண்டு பாட்டிலில் வைத்துக்கொள்ளவும்.

**தீரும் வியாதிகள்:**

சகல சுரத்திற்கும் இஞ்சிச் சாற்றில் இந்த மருந்தைக் கலந்துச் சாப்பிடவும்.

**அளவு:**

ஒரு அரிசி எடை வீதம் தினம் இரண்டு வேளை வீதம் சாப்பிடவும்.

**காலம்:**

ஆறு நாட்கள் சாப்பிடவும்.

**பத்தியம்;**

உப்பு, புளிப்பு, அசைவ உணவுகளை நீக்கவும். இதனைத் தவிர இந்தப் பற்பத்தை தினம் ஒரு பண எடை வீதம் (488 மில்லி கிராம்) தேன் கலந்து ஒரு மண்டலம் சாப்பிட்டுக்கொண்டு வந்தால் குட்டம், பவுத்திரம், சூலை, குன்ம ம், வாய்வு வகைகள் அனைத்தும் குணமாகும்.

**நான்காவது முறை:**

| | | |
|---|---|---|
| தாம்பூரத்தூள் (சுத்தி செய்தது) | 50 | கிராம் |
| இரசம் ,, | 25 | ,, |
| நெல்லிக்காய் கந்தகம் | 35 | ,, |
| தாளகம் | 35 | ,, |

இந்த நான்கு வகைகளையும் குறித்த அளவு எடுத்துக்கொண்டு வெள்ளை எருக்கன் பால் விட்டு 15 மணி நேரம் அரைத்து, வில்லை செய்து காயவைத்து, மண் ஓட்டில் வைத்துச் சீலைமண் செய்து, கெஜபுடம் போடவும். மறு முறை, மேற்படி புடம்போட்ட தாம்பூரத்தைக் கல்வத்தில் போட்டுச் சத்திச் சாரணைச்சாற்றில் ஒரு நாள் அரைத்து மண் ஓட்டில் வைத்துச் சீலைமண் செய்து முழுப்புடம் போட்டால் பற்பமாகும். முன்பு குறிப்பிட்டுள்ளபடி உட்கொள்ளும் அளவு, பத்தியம் இவைகளைக் கடைப்பிடிக்கவும்.

**சுவடி மருந்து முறை 7**

## குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு பண்டாரம் சொன்ன தேங்காய் எண்ணெய் மருந்தும் செய்முறையும்.

நேர்வாளம் எருமைச் சாணியில் வித்தும் மையிலை போக்கு பருப்பெடுத்துக்கொண்டு அதோட இந்துப்பு 21 சவுக்காரம்1 பெருங்காயம் 1/4 இந்த நாலு வகையும் வென்னீரை வார்த்து இறுக அரைத்து வில்லையாகத் தட்டி எட்டுத் தேங்காய் திருகு பெரிய சட்டியில் நாலுபடி தண்ணீர் விட்டு வேடு கட்டி அந்த எட்டின்

மேலே ஒரு பங்குத் தேங்காய்ப் பூவை பரப்பி உரித்த வெள்வெங்காயம் ஏழு பலமதுவும் பாதியாய்ப் பிரித்து அந்தப் பூவின் மேலே உரித்த வெள்ள வெங்காயம் வைத்து அதன் மேலே வில்லையை வைத்து அதன் மேலே வெள் வெங்காயம் போட்டு அதன் மேலே குரைப்பூவும் போட்டு ஒரு சட்டி கொண்டு மூடிச் சீலை மண் செய்து அடுப்பில் வைத்து எரித்து ஒரு படி தண்ணீராயிருக்க இறக்கி ஆற வைத்து மறு சட்டியிலே அந்த வெள்வெங்காயம் பூவும் அந்த வெந்நீரை வார்த்து பிசைந்து பிழிந்து வடிகட்டிக் கொண்டு முந்தின மருந்து போட்டு பசுவின் நெய் படி பசுவின் பால் படி 1/4 கூட விட்டுக் காய்ச்சி மெழுகு பதத்திலிருந்து கொள்ளவும். பிள்ளையில்லாதவர்களுக்கு முந்தின மறு நாளை அதிகாலமே ஒரு துட்டிடை வார்த்து இப்படியே மூணுநாள் கொடுக்கவும். ஆளப்பேலனுக்குத்தக்கது கொடுக்கவும். மெத்த வேதினைக்கண்டால் சேர்த்துப்போட்டுக் கடைந்து வென்னீர் விட்டுக் கொடுக்கவும். இதில் மிஞ்சினால் முருங்கையிலையை உருவிப்போட்டு அந்தக் காம்பு ஒரு பிடி எடு.

**விளக்கம்**:

குழந்தைப் பாக்கியம் இல்லாத தாய்மார்கள் இன்னும் நம் நாட்டில் இருக்கிறார்கள். குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களைப் பெண்மலடு என்றுச் சொல்லுவார்கள். இதற்கான காரணம் கருகுழி பாசுபற்றி விளக்கமற்றிருப்பதாலும், மதித்துக் கொழுத்திருப்பதாலும், கருங்குளியிற் சதை வளர்ந்திருப்பதாலும் (இரத்தம்) சோரி கட்டியிருந்தாலும்,பித்தத்தாலும் வாய்வினாலும் மேகலை சூரியனாலும் மற்ற நோய்களாலும், பெண்கள் மலடாகிறார்கள். இந்த மலட்டுத் தன்மைகள் பல உண்டு. அதில் சிலவகை மலட்டுக் குணங்களைப்பற்றிக் கீழே விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

**பித்த மலட்டுக் குணம்**:

உடல் தகுதி அடைந்திருந்தும் சிறுநீர் மஞ்சள் கரைத்ததுபோல் நீர் போகும். உடல் மெலிந்து இருக்கும். உடலில் அதிகமான சோர்வுகள் இருக்கும்.

**வாத மலட்டுக் குணம்:**

வாத மலட்டுக் குணமுள்ள தாய்மார்களுக்கு நீர் ரத்தம் போல் இருக்கும். உடல் எப்பொழுது பார்த்தாலும் கனத்த மாதிரியும் மனதில் பயம் இருந்துகொண்டே இருக்கும்.

**அலகை மலட்டுக் குணம்:**

அரிவையர்கள் பூத்தநாளில் இடதுபக்கம் வயிறு நோகும். நீர் கடுத்து வெளுத்ததுபோல் கருப்பு நிறமாகவும், சிகப்பு நிறமாகவும் மிதக்கும். கோபகுணம் உள்ளவர்களாகவும், தர்ம குணம் இல்லாதவர்களாகவும் இருப்பார்கள்.

**பெற்ற மலட்டுக் குணம்:**

உடல் பருத்து எப்பொழுதும் உஷ்ணமாகவும், உடல் முழுவதும் வலிக்கும். கால் எரியும். சிறுநீர் கழுதை நீரின் நிறமாகவும் அதிகமாகவும் இருக்கும்.

**வரட்டி மலட்டுக் குணம்:**

இவர்களுக்கு எவ்வளவு உணவு சாப்பிட்டாலும் உடல் பருத்துப்போய் அடிக்கடி கொட்டாவி உண்டாகும். இரவில் சொப்பனம் காண்பார்கள். திடீர், திடீர் என்று சந்தேகப்படக்கூடியவர்களாகவும் அதிகமான பயத்துடன் இருப்பார்கள். இத்துடன் யாரையும் நம்பாத அளவிற்கு இவர்களின் குணம் அமைந்திருக்கும்.

**புழு மேல் மலட்டுக் குணம்:**

தாய்மார்களுக்கு மாதவிடாய் எற்படும் காலத்தில் அடிவயிற்றில் சுருக்கு, சுருக்கு என்று வலி உண்டாகும். சிலசமயம் அவர்களுக்கு வாந்தி வருவது போலும், எதையும் சாப்பிட முடியாமல் இருப்பார்கள்.

**கெர்ப்பப் புழுக்குணம்:**

இந்தத் தாய்மார்களுக்குச் சில சமயங்களில் வாந்தி வரும். வயிறு வலிக்கும். இரண்டு மூன்று மாதம் மாதவிலக்கு நின்று, நின்று உண்டாகும், உடல் வெளுத்தும் மெலிந்தும் அதிகத் தினவுகள் உண்டாகும்.

**கெர்ப்பப் புழுக்குணம்:**

தாய்மார்களுக்கு மாதவிடாய்க் காலத்தில் அடிவயிற்றில் சுருக்கென்று வலிக்கும். சூதகம் இறைச்சி கழுவின தண்ணீர்போல் இருக்கும். கணவருடன் கூடுங்காலத்தில் இதுபோலவே யோனிவலி நீர் பொசித்து சீலையில் கறைபடும். இப்படிப்பட்ட அனைத்து மலட்டுக் குணத்திற்கும் கீழ்க்கண்ட மருந்துகளைச் செய்து உட்கொண்டால் பலனளிக்கும்.

**தேவையான மருந்துகள் விபரம்:**

| | |
|---|---|
| சுத்திசெய்யப்பட்ட நீர்வாளம் | 30 கிராம் |
| இந்துப்பு | 20 ,, |
| சவுக்காரம் (ஒரு வகை மருந்து) | 20 ,, |
| தேங்காய் | 1 மட்டும் |
| பெருங்காயம் | 20 கிராம் |
| வெள் வெங்காயம் (பூண்டு) | 30 ,, |

**மருந்து செய்யும் முறை:**

தேவைப்படும் நீர்வாளத்தில் கொட்டைகளை மேல்தோல் நீக்கி ஒரு பானையில் போட்டு அதில் எருமைச் சாணிப்பால் கரைத்து ஊற்றி இதில் புளியமரத்தின் இலை கைப்பிடி அளவு போட்டு இத்துடன் ஒரு கைப்பிடி அளவு பச்சரிசி போட்டு அடுப்பில் வைத்து நன்றாகக் கொதிக்க வைத்து அரிசியானது நன்றாக சாதம்போல் வரும் வரை கொதிக்க வைத்து ஆறிய பிறகு இந்த நீர்வாளத்தின் கொட்டைகளை உடைத்து உள்ளிருக்கும் பருப்புகளை இரண்டாகப் பிளந்து அதிலிருக்கும் முளைகளை நீக்கிப் பருப்புகளை மட்டும் தண்ணீரில் நன்றாகக் கழுவி விட்டு

காயவைத்துப் பிறகு நெய்யில் வறுத்துக்கொண்டால் இதுதான் சுத்திசெய்த நீர்வாளம் ஆகும். இந்தப் பருப்புகளுடன் சவுக்காரம் பெருங்காயம் இவைகளை வெந்நீர் விட்டு கெட்டியாக அரைத்து வில்லையாகத்தட்டி எடுத்துக் கொண்டு ஒரு சட்டியில் தேங்காய்ப் பூவையும், வெள்ளை வெங்காயம் இவைகளை அந்தச்சட்டியின் கீழ்ப்பரப்பிவிட்டு அதன்மேல் அரைத்து வைத்திருக்கும் வில்லையை மேல் வைத்து பிறகு மேல் சொன்னது மாதிரி மீதி உள்ள தேங்காய்ப்பூ, வெள்ளை வெங்காயம் (பூண்டு) இவைகளை வில்லையின் மேல் போட்டுப் பரப்பி மூடிவிட வேண்டும். இந்தச் சட்டியை மேல் மூடிபோட்டு நன்றாகச் சீலை மண் செய்து விடவும். பிறகு ஒரு பானையில் மேல் மேல் செய்து வைத்திருக்கும் சீலைமண் செய்த சட்டியை இந்தப்பானையின் மேல் வைத்து அடுப்பில் தீ மூட்டிக் காய்ச்சும்பொழுது நாலு படி தண்ணீர் ஒரு படியாக வற்றும்வரை காய்ச்சவிட வேண்டும். பிறகு அந்தச் சீலை மண் செய்த சட்டியை ஆறிய பிறகு அதிலிருக்கும் வெள்வெங்காயம் (பூண்டு) தேங்காய்ப்பூ இவைகளை வெந் நீர் விட்டு நன்றாகப் பிசைந்து புளிக்க வைத்துப் பிறகு எடுத்து அதனைத் துணிகொண்டு வடிகட்டிக்கொண்டு முன்பு செய்து வைத்திருக்கும் மருந்துகளைப் போட்டு பசுவின் நெய் பசுவின் பால்விட்டு நன்றாக மெழுகு பதத்திற்கு வரும் வரை காய்ச்சி இறக்கிக் கொள்ளவும். இதனை ஆற வைத்துப் பத்திரமாக வைத்துக்கொள்ளவும். குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு இந்த மருந்து எண்ணெயை 10 கிராம் எடைக்கு வீட்டு விலக்கு குளித்த மூன்றாம் நாள் விடியற்காலையில் ஒரு வேளைக்கு மட்டும் கொடுக்கவும். இதன்படி 3 நாள் விடியற்காலையில் ஒரு வேளை மட்டும் கொடுக்கவேண்டும், இந்த மருந்தினால் பேதி அதிகமாகப் போனால், மோர், முருங்கை இலைச்சாறு கொடுக்கலாம். பேதி நின்றுவிடும்.

**பத்தியம்**:

அரிசிக்கஞ்சி மட்டும் சாப்பிடவும்.

**குறிப்பு**:

மருந்து சாப்பிடும்போது வாந்தி எடுக்கக்கூடாது.

சுவடி மருந்து முறை 8

## ஒத்தைத் தலைவலிக்கு மருந்து செய்யும் முறையும் இந்த நோயின் குறி குணமும்

நாயுருவி அரிசி கொண்டு வந்து அரைத்து இரண்டு
நாசியிலும் நஸ்யம் பண்ணத் தீரும் அனைத்தர்க்கு
யெடுக்கும் யிளைப்புக்கு உளஞ் சவப்பட்டை
முத்தவாய்யிலுமிச்சங்காயளவு விளு விளித்தலையிலு
மிச்சங்காயளவு யீர வெங்காயம் பெரிநாயொன்னு
வெள்ள வெங்காயம் பருப்பு 2 கோழிக்குஞ்சு
பொரிச்ச முட்டையோடு கொஞ்சம் பச்ச
நெல்லுமிக் கொஞ்சம் சுட்டு நல்ல சீரகங்
காசளவு யிந்த மருந்து அம்மியில் வைத்து
நசிக்கி வுருசட்டி யில்ப் பிசைந்துரசம்
பிளிந்து பெரியவர்களுக்கு அரைப்படி குடுக்கவும்
சிறு பிள்ளைகளுக்கு மாகும் பத்தியம் பூச்சியம்.

**விளக்கம்**:

தலைவலி என்பது ஒரு நோய் அல்ல. இந்த தலைவலிகளில் பலவகை உண்டு. அதாவது மண்டையிடி, பொட்டு வலி, நெற்றி வலி, ஒத்தைத்தலைவலி என்ற வகைகள் உண்டு. இந்தத் தலைவலி பல காரணத்தால் வரக்கூடும். அதாவது கீழ்க்கண்ட காரணத்தினால் தலைவலி வரும். காய்ச்சல் ஏற்படும்போது தலைவலி வரும். அதிகப்பசி, சோர்வு, மலச்சிக்கல், கவலை, அதிகமான வேலையின் காரணமாகவும், வெயிலின் காரணமாகவும், நரம்புத்தளர்ச்சி, இருதய நோய், இனிப்பு நீர், உடல் சத்து இன்மை, கண் நோய்களினாலும், தலைவலி வரும். இப்படிச் சில காரணங்களினால் தலைவலி ஏற்படுகின்றது. இதில் ஒரு பக்கமாகவும் வலிக்கும். இதனை ஒரு பக்கத் தலைவலி என்று நாம் சொல்லுகிறோம். இந்தத் தலைவலி வருவதற்கான காரணம் உடலில் அதிகமான உஷ்ணம் ஏற்பட்டு, இதனால் இரத்த

நாளங்கள் சூடாகி இரத்த அழுத்தம் ஏற்படுவதின் காரணத்தால் இரத்த ஓட்டம் தடைப்பட்டு ஒத்தைத்தலைவலி ஏற்படலாம். இப்படிப்பட்ட ஒத்தைத் தலைவலிக்கு நிவர்த்தி கொதிநீர் ஆவியின் மூலமாகவும், தலையில் பற்றுப்போட்டும், மூக்கு வழியான நசியம் முறைகளிலும் செய்து குணப்படுத்தலாம். இதன் விவரத்தைக்கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

நாயுருவி என்ற செடியில் கிடைக்கும் அரிசியைச் சுத்தம் செய்து கொஞ்சம் எடுத்து அரைத்து மூக்கில் பொடி போடுவதைப்போல் போட்டால் தீரும். உளஞ்சவப்பட்டை முத்தலாய் விளித்தலையிலை பருப்பு, வெங்காயம் அண்டை ஓடு (முட்டை ஓடு) பச்சை நெல், சுட்ட சாம்பல் இதனை எல்லாம் சமன் எடை எடுத்து நன்றாகக் கல்வத்தில் எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு அரைத்து இதனை உணவுக்குச் (சாதம்) போட்டுக்கொள்ளும் ரசம் மாதிரி வைத்துக் கலக்கி, இதைப் பெரியவர்களுக்கு ஒரு நாளைக்கு (300) முந்நூறு மில்லி வீதம் மூன்று நாட்களுக்குக் கொடுக்கவும். சிறுவர்களுக்கு 100 மில்லி வீதம் மூன்று நாட்களுக்குக் கொடுக்கவும்.

**பத்தியம்:**

பத்தியம் ஒன்றும் கிடையாது

**இரண்டாவது முறை:**

**தேவையான மருந்துகளின் விவரம்:**

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 2 லிட்டர் |
| குப்பைமேனி இலைச்சாறு | 1 ,, |
| ஆதண்டை இலைச்சாறு | 1 ,, |
| கையாந்தகரை இலைச்சாறு | 1 ,, |
| நொச்சி இலைச்சாறு | 1 ,, |
| கழற்சிக்கொடி இலைச்சாறு | 1 ,, |

இதில் குறிப்பிட்டுள்ள அனைத்து இலைச்சாற்றையும் சம அளவு எடுத்துக்கொண்டு கையந்தகரை ஒரு லிட்டர் சாற்றில் நூறு

கிராம் நாட்டுச் சர்க்கரை கலந்த இதனைச் சற்றுநேரம் வைத்திருந்து, பிறகு வடித்து எடுத்துக்கொண்டு மேலே செய்து வைக்கப்பட்டுள்ள எண்ணெயில் கலந்து சாறுகளின் கலவையில் இந்த நீரையும் சேர்த்து ஒரு பெரியபானையில் ஊற்றி அடுப்பில் வைத்து எண்ணெய் பதம் வரும் வரை ,காய்ச்சி எண்ணெயை மட்டும் வடி கட்டி ஒரு பாட்டிலில் ஊற்றி இதில் இந்த எண்ணெய் பாட்டிலில் 5 கிராம் எடைக்கு அபின் தூளைப்போட்டு நன்றாகக் கலக்கி வைத்துக்கொண்டு மூன்று நாளைக்கு ஒரு முறை தலையில் தேய்த்துத் தலை மூழ்கி வரவும். இப்படி ஒரு மண்டலம் (நாற்பத்தி எட்டு நாட்கள்) தலை மூழ்கி வந்தால் மேற்சொன்ன தலைவலிகள் நிவர்த்தியாகும்.

**பத்தியம்**:

குளிர்ச்சியான உணவு வகைகளை நீக்கவும்.

**மூன்றாவது முறை**:

| | |
|---|---|
| மலைவேம்புச்சாறு | 1 லிட்டர் |
| வெள்ளலரிச்சாறு | 1 ,, |
| ஆதண்டைச்சாறு | 1 ,, |
| கருநொச்சிச்சாறு | 1 ,, |

இந்த நான்கு வகைகளின் சாற்றில் நல்லெண்ணெய் சேர்த்துக்கொள்ளவும். இத்துடன் கருஞ்சீரகம், வால்மிளகு, ஒருதலைப்பூண்டு இவைகளை வகைக்கு 50 கிராம் வீதம் கல்வத்தில் போட்டு அரைத்து மேல் தயார் செய்து வைத்திருக்கும் எண்ணெய்க் கலவையுடன் இதனையும் கலந்து அடுப்பில் வைத்து நன்றாக எண்ணெய் பதம் வரும்வரை காய்ச்சி, ஆறிய பிறகு இந்த எண்ணெயைத் தலை முழுகி வந்தால் மேல் சொன்ன வியாதிகள் தீரும்.

**நான்காவது முறை**:

இஞ்சிச்சாறும், நல்லெண்ணெயும் வகைக்கு அரை லிட்டர் வீதம் எடுத்துக்கொண்டு ஒரு பாத்திரத்தில் ஊற்றி அடுப்பில்

வைத்து எண்ணெய்ப் பதம் வரும் வரை காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு தலைக்குத் தேய்த்து ஸ்நானம் செய்துவந்தால் ஒத்தைத் தலைவலி தீரும். இந்த எண்ணெயில் பூண்டுப்பறகளைத் தட்டிப்போட்டு மறுபடியும் எண்ணெயைக் காய்ச்சி வடிகட்டிக்கொண்டு தலையில் தேய்த்துக் குளித்து வந்தால் மேற்குறிப்பிட்ட நோய் தீரும்.

**பத்தியம்**:

குளிர்ச்சியான உணவு வகைகளை நீக்கிவிட்டு வெந்நீரில் குளிக்கவும்.

சுவடி மருந்து முறை 9

## சூதக வாய்வு வலிக்கும் வயிறு வாய்வு வலிக்கும் சுர வீக்கத்திற்கும் மருந்தும் செய்யும் முறையும்

சுரவீக்கந்தீர கத்தாளஞ்சோறும் களிப்
பாக்குக் கடுக்காய் யிந்த மூன்று மரைத்து
வெள்ளாட்டுக் கோமியத்தில் கொடுக்கவும்
வயரெருக்கும் வீக்கம் வாடிப் போய் கை
கண்டது காட்ட வரை வடக்கேவோர்
வெரைக் கொண்டு வந்து வச்சுக் கொண்டு
முலைப்பாலில் லாகுதல் நீச்சுத் தண்ணீரி
லாகுதல் தும்பைச் சாற்றிலாகுதல் உரைத்துக்
கடிவாயில் பூச உடனே நிற்குங்கை கண்டது
வேறு சூதக வாய்வு வலிக்கு சுக்கு களச்சி
கொழுந்து இது வெல்லா மொன்றாய் சேர்த்து
வென்னீர் விட்டரைத்து மூன்றாகப் பண்ணி
நித்தமொரு பங்கு சாப்பிட்டு வா.

**விளக்கம்:**

உடலில் வீக்கம் என்பது கீழ்க்கண்ட காரணத்தால் வரும். அதாவது உடலில் வாய்வு என்ற காற்று அமுக்கம் உடலில் தங்கிக் கொள்வதன் காரணத்தினால் அந்த இடத்தில் கட்டியாக இருக்கும். இதனை வீக்கம் என்று சொல்வதுண்டு. இதில் பல வகையுண்டு. முக வீக்கம், குழி வீக்கம், சதை வீக்கம், சுர வீக்கம் ஆகியவையாகும். இதன் நிவர்த்திக்குத்

**தேவையான மருந்து முறை - ஒன்று**

| | |
|---|---|
| சோற்றுக்கற்றாழைச் சோறு | 100 கிராம் |
| களிப்பாக்கு | 20 கிராம் |
| கடுக்காய் (பிஞ்சு) | 50 கிராம் |

இந்த மூன்று வகைகளையும்வெள்ளாட்டு மூத்திரத்தில் (கோமியத்தில்) அரைத்துத் தினம் இரண்டு வேளை விதம் ஆறு நாட்களுக்குக் கொடுக்கவும்.

**மருந்து முறை - இரண்டு**

வடக்கே போகிற காட்டவரை வேரைக் கொண்டுவந்து முலைப்பாலில் அரைத்துக்கொண்டு நீச்சத் தண்ணீரில் கரைத்து, அதனைத் தும்பை இலைச்சாற்றில் சேர்த்து அரைத்துச் சுரவீக்கம், இருக்கும் இடத்தில் பூசினால் உடன் நிற்கும்.

**சூதக வாய்வுக்கும் வலிக்கும்**

**சுக்கு கழசி மரத்தின் கொழுந்**திலை இதனைச் சமன் எடை எடுத்து வெந்நீர் விட்டு அரைத்துத் தினம் ஒரு வேளை வீதம் மூன்று நாட்களுக்குச் சாப்பிட்டு வந்தால் குணமாகும்.

**பத்தியம்;**

வாய்வுப் பதார்த்தங்கள் நீக்கவும், உருளைக் கிழங்கு வாழைக்காய், மொச்சை, பூசணிக்காய் இவைகளை நீக்கவும்.

# குடலேற்ற நிவர்த்திக்கு

**சுவடி மருந்து முறை 10**

உறைவர் தஞ்சுக்கு நீர் உண்டு பித்தம்
வெந்திய நீர் பிறை ஐயம் இஞ்சி நீர்
பேசும் சுரமே குங்கண்டறிந்து செய்ய
பண்டமதற்கு சொன்னேன் படவே
குடலேற்றத்துக்கு பிரண்டை வேரை
பிடுங்கி விடுவதும் பிறயிறைந்தாலிடது
பிறங்கட்டவும் கைகண்டது.

**விளக்கம்**:

குடலேற்றம் என்பதை இக்காலத்து மக்கள் அதிகமாக நம்புகிறார்கள். காரணம் அக்காலத்திலிருந்து இந்தக் குடலேற்றம் என்ற சொல் திகழ்ந்து வருகிறது. மேலும் இதன் காரணத்தினால் வயிற்று ஓட்டம், வாந்தி இவைகள் இருந்தால் குடலேற்றம் என்று சொல்வதுண்டு. கிராமப்புறங்களில் "குடலேற்றத்திற்குக் கோடி ரூபாய் செலவு" என்ற பழமொழி வழங்கி வருகிறது. இந்தக் குடலேற்றம் சில சமயங்களில் திடீரென்று குடல் அசைவுகளினால் மாறுதல் அடைந்து குடல் சரியான முறையில் தனது பணிகளைச் செய்யத் தடைப்படுகிறது. இதனால் வயிற்று ஓட்டம், சிலசமயம் வாந்தி இவைகள் ஏற்படுகின்றன. பொதுவாகக் குடலேற்றம் அதிக அளவில் குழந்தைகளுக்குத்தான் வரும். பெரியவர்களுக்கும் சிலசமயங்களில் வரக்கூடும். இதற்குச் சிகிச்சை இல்லை. ஆனால் பரிகாரம் மூன்று வகையுண்டு. இதன் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**மருந்து முறை;**

வெந்தய நீர், இஞ்சி நீர் இவைகளைச் சமன் அளவு கொடுக்கலாம்.

**முதல் முறை**:

குடலேற்றம் உள்ளவர்களைச் சமதரையில் சமமாகப் படுக்கவைத்து தொப்புளின் நடுவில் ஆள்காட்டி விரலை வைத்து

அமுக்கிக்கொண்டு தலை, கால், முழுவதும் மூன்று தடவைச் சுற்றி வந்தால் நிவர்த்தியாகும்.

**இரண்டாம் முறை:**

குடலேற்றம் இருந்தால் வயிறு பக்கம் கீழே மெதுவாகக் கைகளினால் தட்டி வழித்துவிட்டால் நிவர்த்தியாகும். இப்படிச் செய்யும்பொழுது எந்தவிதமான உணவும் சாப்பிடாமல் இருக்கும் சமயத்தில்தான் இவ்வாறு செய்யவேண்டும்.

**மூன்றாம் முறை:**

பிரண்டை வேரை நீளமாகக் கொண்டு வந்து அந்த வேரினை வயிற்றைச் சுற்றிக்கட்டிக் கொண்டால் குடலேற்றம் நிவர்த்தியாகும். இந்தக் குடலேற்றத்தில் மூன்று வகையுண்டு.

மேல் குடலேற்றம்
கீழ்க் குடலேற்றம்
படுக்கைக் குடலேற்றம்

என்று மூன்று வகைப்படும். இதற்கு எந்த விதமான பத்தியமும் கிடையாது.

**சுவடி மருந்து முறை 11**

## செம்பு உலோகத்தைச் சுத்தி செய்யும் முறையும் அனைத்துச் சுரத்திற்கான மருந்து சஞ்சீவி மாத்திரை

காட்டுயீறுகள்ளிக் கிழங்கு கொண்டு வந்து
உலர்த்திப் பொடி செய்து வெண்ணீர் விட்டுப்
பிசைந்து வைத்துக் கொண்டு செம்புருக்கித்திலச்
சாய்க்கவும் யிப்படிப் பத்து விசையுறுக்கிச்
சாய்க்கவும் வெள்ளையாம் (வெ 2) சுரத்திற்கு
சஞ்சீவிக் கவி தேர் வளந்தானரை யாம் நேர்
வெள்ளை பாசானம் தாரமது லிங்கந்தான்

பலங்கால் சீரக நிம்ளச்சார் விட்டரைத்து நேர்
குளிகை பணவிடை தாள் உம்புகளைப் பார்க்குமுறை

**விளக்கம்;**

செம்பு என்ற உலோகத்தை மருந்துக் கென்று உபயோகிக்கும் முன்னரே சுத்தி செய்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்து கொண்டால் தான் செம்பில் இருக்கும் நச்சுக் களிம்புப் பொருட்களை அகற்ற இயலும்.

**சுத்தி செய்யும் முறை:**

காட்டுயிறுள்ளிக் கிழங்கைக் காயவைத்துப் பொடி செய்துகொண்டு வென்னீர் விட்டுப் பிசைந்துகொண்டு இதில் செம்புத்துண்டை நன்றாகப் பழுக்கக் காய்ச்சி 10 (பத்து) தடவைக் காய்ச்சிப்போட்டு எடுக்கவும். இப்படிச் செய்தால் சுத்தியாகும்.

**சுரத்திற்கு சஞ்சீவி மாத்திரை:**

சுத்தி செய்த நீர்வாளப் பருப்பு, வெள்ளைப் பாஷாணம் சுத்திசெய்த லிங்கம் இவைகளை விகிதப்படி எடுத்துக்கொண்டு கல்வத்தில் போட்டு எலுமிச்சம்பழச்சாற்றை விட்டரைத்துச் சின்னச் சின்ன மாத்திரைகளாகச் செய்து நிழலில் காயவைத்துக் கொண்டு உடலுக்குத் தகுந்த அளவுக்குக் கொடுக்கவும்.

**பத்தியம்;**

அரிசிக் கஞ்சி மூன்று தினங்களுக்குச் சாப்பிடவும்.

**தீரும் வியாதிகள்:**

அனைத்துச் சுரங்களும் போகும்.

**இரண்டாவது முறை:**

செம்பை நல்லெண்ணெயில், பசுவின் மோர், பசுவின் மூத்திரம் இவைகளில் சுத்தி செய்தால் வாந்தியை நிறுத்தும்.

கொள்ளு வேவித்த நீரில் இவைகளைச் சுத்தி செய்தால் விடாத வாந்தியை நிறுத்தலாம். கள்ளிப்பால் பசுவின்பால், இவைகளில் சுத்தி செய்தால் அலுப்பைப் போக்கும். புளி, எலுமிச்சம் பழச்சாற்றில் சுத்தி செய்தால் தாகத்தைப் போக்கும. காட்டு வாகைப் பட்டை, கற்றாழை இவைகளின் சாற்றில் சுத்தி செய்தால் சூலைகள் குணமாகும். பசு நெய், பசும் பாலில் சுத்தி செய்தால் தினவைப் போகும். திராட்சை ரசம், தேன் இவைகளில் சுத்தி செய்தால் இந்திரிய நாசத்தைச் சரிசெய்யும். தயிர் காட்டுக் கரணைக் கிழங்குகளின் சாற்றில் சுத்தி செய்தால் பேதியை நிறுத்தும்.

குறிப்பு:

செம்பைச் சிறு தகடுகளாகத் தட்டி எடுத்துக்கொண்டு மேற்கூறிய ஒவ்வொன்றுக்கும் சுத்திசெய்யவும்.

**சஞ்சீவிக் குளிகை உபயோகம்:**

| | |
|---|---|
| சுக்கு | 35 கிராம் |
| மிளகு | 35 ,, |
| திப்பிலி | 35 ,, |
| கடுக்காய் | 35 ,, |
| தான்றிக்காய் | 35 ,, |
| வசம்பு | 35 ,, |
| சித்திரமூலவேர்ப்பட்டை | 18 ,, |
| சீந்திற் கிழங்கு | 18 ,, |
| சேங்கொட்டை | 10 ,, |
| வாய்விளங்கம் | 35 ,, |
| நாள் பட்டை (நாவல் பட்டை) | 20 ,, |

இவைகளைச் சமன் எடை எடுத்துக்கொண்டு கல்வத்தில் கோசலம் விட்டு அரைத்து குன்றி அளவு மாத்திரைகள் செய்து நிழலில் காயவைத்துக்கொண்டு வயதுக்குத் தகுந்தாற்போல் இந்த மாத்திரையைக் கொடுக்கவும்.

**தீரும் வியாதிகள்:**

பாம்பு விஷம், ஜன்னிவாத சுரம் இவைகள் நிவர்த்தியாகும். சீதபேதிக்கும் கொடுக்கலாம்.

**அனுபானம்:**

இஞ்சிச் சாற்றில் கொடுக்கவும்.

**சுவடி மருந்து முறை 12**

## அரையாப்பு நோய்க்கும் இரத்த கிரந்தி நோய்க்கும் மருந்து

ரசகற்பூரம் கொண்டு வந்து பசுவின்
பாலில் லூறப்போட்டு மறு
நாளெடுத்துப் போட்டு பண்ணி வைத்துக்
கொண்டு அதன் பிறகு கொத்தமல்லிக்
கொப்பரைத் தேங்காய் போட்டு பண்ணி
கெந்தி காட்டுச் சீரகமுடனே தடவாய்
வகை யொன்றுக்குள கங்களஞ்சு முருகாமல்
முந்திக் கசாயத்தை விட்டரைத்து யெண்ணெய்க்குள்
சிந்தாமலே கரைத்து தீயெரித்து அந்தம்
காயதின் பதம் வந்து தென்றால் வாகுடனே
தான் வடித்து வயத்தமுடன் குந்தும் வகை
கேளாய் நயமாக நித்தங்கரண நீரை நீ
குழப்பாய் மண்டலந்தான் பத்தியங்களெ
தென்றால் பகரக் கேள் உத்தொரு உளரவரை
புடலங்காய் பசுவின் நெய்பாலாம் உளர்
முருங்கைக் காயிலையு முண்ணலாம் வேர் பரந்த
பாசிப் பயறாகும் பருங்கீரைத் தண்டாகும்
வாசிக் கொடிக் காலில் அமுதலங்காய் நேசி
பாயுப்பு வருத்துப் போட்டுண்ணு அரையும்
பாகும் கைப்புளிப்பாகாது கண்டுக்
கோதப்பா மல்ச் சொன்னபடி செய்தால்ச்

சுகமாகத்தீரும் நோய் யின்னதெவை
நாமுமியம்பக் கேள் கன்னானம் அத்திக்காய்ச்
சூலையாலாகாயக்கிறந் திரணம் சுத்திற்ற தாமரை
கிரந்தி அமிகிரந்தி சுத்தமில்லா வுட்டிய புன்
மேக மோடுயரவாயக் கிரந்திப் புணங்
கஸ்ட்டம் தாய்த் தண்டில் வெள்ளை கண்டாலும்
முட்டும் கை கால் கடுப்பு வெள்ளை கருங்
கிரந்தி மேக நோய் வய்யமதிலத் தீருமது
வல்லாமல் அய்யா மேள்வனேக் கிரந்தி
வனரு கள்ளிப்பூக் கிரந்தியின்னங்கிரந்தி
எல்லாம் போம் சொன்னார் கைகண்ட
வித்தையிது சுறரிந்த மாபெரியோர் செய்து
கண்டு ... .... .... ..... ருத்திரம்

**விளக்கம்**

அரையாப்பு என்ற நோய் பல மாதர்கள் (பெண்கள்) இடத்தில் சஞ்சாரத்தாலும், நரம்புப் பிசக்காலும், ரோகம் சம்பவத்தால் அரையாப்பு என்ற கட்டி வருகிறது இது உடைந்து புண்கள் கூட ஏற்படலாம்.

**இந்நோயின் நிவர்த்திக்கு:**

ரசகற்பூரத்தைத் தேவையான அளவு எடுத்துக் கொண்டவந்து அதனைப் பசுவின் பாலில் ஒரு நாள் முழுவதும் ஊறவைத்து அதனை மறுநாள் எடுத்துக் கொத்தமல்லி கொப்பரைத் தேங்காய் இவைகளை ஒன்று சேர்த்து இத்துடன் கந்தகம், காட்டுச்சீரகம், கடவாய்வகை ஒன்று இதனை மேற்படி சாற்றை விட்டரைத்து இதனை அளவுக்கேற்றவாறு நல்லெண்ணெயில் நன்றாகக்கலந்து அடுப்பில் வைத்துக் காய்ச்சி பதம் வந்தவுடன்

இறக்கி ஆற வைத்து வடிக்கட்டிப் பாட்டிலில் வைத்துக் கொள்ளவும். தினம் ஒரு சின்னக்கரண்டி வீதம் தண்ணீர் கலந்து குடிக்கவும். இப்படி (48) நாற்பத்தி எட்டு நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் அரையாப்புத் தீரும். இந்த மருந்தைக் கிரந்தி நோய்களுக்கும் கொடுக்கலாம். கிரந்தி என்ற நோய்க்கு இந்த நோய்களில் குணங்களைப்பற்றியும் எத்தனை விதங்கள் கொண்டது என்பதை இந்தப் புத்தகத்தின் மூன்றாவது பாடலில் மிக விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. வாசகர்கள் தெரிந்து கொள்ளவும். மேலும் அனைத்து விதமான கிரந்தி நோய்களுக்கும் இந்த மருந்தினைச் சாப்பிடலாம்.

**அளவு**:

ஒரு வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் உட்கொள்ளவும்.

**காலம்;**

நாற்பத்தி எட்டு நாட்கள் சாப்பிடவும்.

**பத்தியம்**:

புளி, உப்பு, கரப்பான் சம்பந்தப்பட்ட அனைத்து வகையான உணவுகளையும் நீக்கவும் மோர் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

**குறிப்பு;**

## அரையாப்புக் கட்டிக்கு மேல் தடவும் மருந்து

முடக்கொற்றானிலை, சுண்ணாம்பு, வெல்லம் இவைகளைச் சமன் எடை எடுத்துக் கொண்டு இதனை எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து அரையாப்பு இருக்கும் இடத்தில் தடவினால் நிவர்த்தியாகும். கட்டி கரையும்.

**சுவடி மருந்து முறை;13**

## பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வுக்கு லேகிய மருந்து

சீர் பரவு நாதாக்கள் தெரிந்துரைத்த திரமான
வடமொழி சாஷ்த்திரத்தில் ஆய்ந்து தார் பரவு
கர்ப்பத்தால்ப் பெண்களுக்குத் தசை நாடி மலரெழுத்தில்
சுருங்கு வழங்கிடுதல் கார் பெருகிப் புளவாகும்
சிதிசார் வேகம் காய வலியிருப்பு வலி தலைவில்
இரத்தம் நீர் பெருகி வந்தது போலக் கொ்ப்ப
ரோகம் நிலைத்துதே தலைவகை நிலையாலே
நிலையொடு கெற்பவுனை யின்னார் தாங்கள்
சூதசத்தாலேடுத்த பிணி எல்லாந் தீர வாலையுடன்
அரனுரைத்த ஆவிளந்தாது மாமுனிவர் வேழு
திரைந்து வடநூ லைபார்த்து நூலையெடுத்தே
தாறும் விருந்

தப்பாவாய் துவன்றிட்டேன் சிந்குதவுபாக்கிய சுரண்டி
நிலையடுப் பெரியிட்ட சருகைப்மேலே அழிந்துவிடும்
நோய்களைத் தான் சுட்டி செய்யே. கண்டியென்றால்
சவுபாக்கிய கண்டியாகும். சூதகத்தின் வினைகளெல்
லாம்.................போகும் பண்டியென்க கரடு விலை
மாற்றலாகும் பாடுகிறேன் மாந்தோட்டி வெப்பாலை
வித்து சுண்டியென்ற வாய் விளங்க மிளகு
திப்பிலிஆனவ

வகையான பொடியோ மாங்கிரும்பு கண்டியென்றால்
பாளம் நெய்யில்ச் சத்தி சமமாக யிது வகைக்குப்
பலங்காலாமே ஆமென்ற சதை குப்பை பலமொன்றே
கால் அடவான கொத்தமல்லி முக்காலாம் சீமென்றே
வேர்க்கொம்பு பலம் ரெண்டாகும் ஓகோ கோ
சரக் கெல்லாம் யிடித்துத் தூளாய்

தாமென்ற சிலை வடிகட்டிப் பின்பு காறில்லாக் கதிர் போலே வளர்ந்திருக்கும் பானெற்ற மண்புடா தெடுத்து வந்து படி நாலு அளந்துவொரு பாண்டத்திட்டு

இட்டுமே சல்லுப்பட்டை தொளிரண்டு விதமான கற கண்ணம் பட்டி தானிரண்டு விட்டு மேய்மூரி பட்டுயே இவாகு விசையான நல்லெண்ணை பட்டு தான் வாகு

அட்டுமே கலக்கியதை தெளிவிருந்து அடுப்பேற்றி யெரித்துமே யுப்புக் காச்சி பட்டுமே யிப்படியே பத்து முறை காச்சு பாங்கான சவுக்கார குருவிதாமே.

**விளக்கம்**;

பெண்களுக்கு வரும் சூதகத்தில் வாய்வும் அக்கினியும் சேர்த்து மாதவிடாய் கட்டிக் கருக்குழி வார்த்து தேகத்தில் உதிரம் தீரும். அடி மூலத்தில் வாய்வும் சேர்ந்து சூதவாய்வு தோன்றி ஆதகம்மாகும் போது அடிவயிறு வலிக்கும். ஆதகங்கள் தங்கிக்கொண்டு தலைவலிக்கும். வயிறும் உடலும் பெருத்திருக்கும்.

## இதன் நிவர்த்திக்குத் தேவையான மருந்துகளும் செய்யும் முறையும்

| | |
|---|---|
| வெட்பாலை அரிசி | 35 கிராம் |
| வாய் விளங்கம் | 35 ,, |
| மிளகு | 35 ,, |
| திப்பிலி | 35 ,, |
| கிராம்பு | 35 ,, |
| சதகுப்பை | 35 ,, |
| கொத்தமல்லி விதை | 35 ,, |
| வேர்க்கொம்பு | 35 ,, |
| நெய்யில் சுத்திசெய்த கரியாபாளம் | 35 ,, |

இதில் சொல்லப்பட்ட மருந்து வகைகளை விகிதப்படி எடுத்துக்கொண்டு கல் உரலில் போட்டு இடித்துத் தூள் செய்து

துணி கொண்டு வடிகட்டி, இந்தச் சூரணத்துடன் இரண்டு பாகம் நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து கொண்டு ஒரு இரும்புச் சட்டியை வைத்துக் கொஞ்சம் தண்ணீர் விட்டு இதில் சர்க்கரையாவது பனைவெல்லமாவது ஏதேனும் ஒன்றை மட்டும் போட்டுக் காய்ச்சிப் பாகு செய்து மேலே குறிப்பிட்ட சூரணத்தைப் போட்டுக் கிண்டி, தார் பதம் வந்தவுடன் இறக்கிவிட்டு இதனை நன்றாக ஆறவிட்டுப் பார்த்தால் லேகியம் மாதிரி இருக்கும். இதனை நல்ல சுத்தமான அகலமான பாட்டிலில் வைத்துக்கொள்ளவும்.

**அளவு;**

கடிச்சிக்காய் அளவுக்குத் தினம் இரண்டு வேளை வீதம் காலை, மாலை சாப்பிடவும். (5 கிராம் எடை)

**காலம்:**

24 (இருபத்தி நான்கு) நாட்கள் உட்கொள்ளவும். (1/2 மண்டலம்)

பத்தியம்:

இச்சாப்பத்தியம். (உப்பு, புளிப்பு) கரப்பான் சம்மந்தப் பட்ட உணவுப் பொருட்களை நீக்கவும்.

**தீரும் வியாதிகள்:**

குன்மம், மாதவிடாய், கெற்ப வாய்வு, சூலை

**சுவடி மருந்து முறை: 14**

## சவுக்கார வைப்பு

சூவான சவுக்கார முண்டை செய்யக்கூறு கிறேனகு
முட்டைச் சாம்பல் மேலை மிருதுவான மெல்லிய
சீலை போட்டு விட்டதின் மேற் சவுக்கார
குழம்புதன்னைக் கருவான வுண்டை செய்து
எண்ணைக் கை முறையாய்ச் சொல்லுகிறேனொரு

பாட்டத்தில் சருவாக நெல்லதனைப் பிசிறி
வைத்து சவுக்காரவுண்டதனை மேலே வைய்யே.

வைத்துமே மல்லிகையினிலை பரப்பி மறுபடயே நெல்லிட்டுச் சட்டிமூட யேய்த்துமே யடுப்பேற்றி வைத்து நன்றாம் ரவி கண்ட பதத்திலே யென்பினாக்கும் வைத்ததொரு சவுக்கார யெண்ணை காச்சு தைத்துமே யிப்படியே கை முறையாய்ப் பண்ணிற சவுக்கார வழலையென்ற குருவிதாச்சே.

குருவெண்ணை முப்பூவில் வழலையாச்சுக் கூறிடுமேற் போக்கரித்தால் வாதமாச்சுத் திருவென்ன வீரமுடன் பூரமிரணிஞ் சேரு நீயெற வென்ற கும்பிடுகற்சிப்பிப் பருவென்ன பச்சையோடெடுத்து நூறு பணம் போலே தமரிட்டுச் சிப்பிக்கெல்லா மருவென்ன பூநீறு குடனிரண்டுமிட்டு அகன்ற தொரு சட்டியிலே பாத்திவையே.

வைக்கவே பலபலெனத் தண்ணீராகும் வளமான நீருடனே நாதவிந்து ஜக்கவே சமனாக நிறுத்திக்கொண்டு அதிற்போடு குகுவெண்டு வுறமுஞ் ஆகமைக்கவெ கருநாள் புழுகு பூரம் மறுபுள்ளி வண்டனே முட்டை காரஞ் சாரஞ் செயிக்கவே வருக வகைக்குப் பணவிட தூள் மறு சொன்னம் போல் மகத்தான நோயெல்லாந் தீருமாமே.

**விளக்கம்**:

கல்லுப்பு இரண்டு லிட்டர் சுத்தமான சுண்ணாம்பு 2 லிட்டர், அமுரி லிட்டர் இரண்டு (சிறுநீர்) இவைகளை ஒரு பாத்திரத்தில் போட்டு அடுப்பில் வைத்து எரித்து ஒரு படி வரை சுண்டக்காய்ச்சி இப்படி பத்து முறை காய்ச்சி எடுத்தால், சுத்தமான சவுக்கார குருவிதாமே.

குருவான சவுக்காரவுண்டை காணிஎரு முட்டைச் சாம்பல் மேலே குழம்பு தன்னை கருவாக உண்டை செய்து எண்ணை கசியாத ஒரு பாண்டத்தில் அருவாக நெல்லதனைப் பிரதி வைத்து அதன் மேலே மல்லிகை பரப்பி

வைத்ததுதான் மேலும் அந்த இலை பரப்பி மறுபடி மேல் நெல்லிட்டு சட்டி மூடி அத்துமே அடுப்பேற்றி எரித்து நீராவி வந்தவுடன் எடுத்துக்கொள்ளு சவுக்காரமெண்ணை வாங்க மாட்டாமல் வாதிகெட்டார். வண்ணாரிக்காச்சு கைத்துமே இப்புகை முறையாய்ச் சொல்லி சவுக்கார கைத்துமே இப்படி கைமுறையாய்ச் சொல்லி சவுக்கார வழலையென்ற குருவிதாச்சே.

குருவென்ன முப்பூவில் வழலையாச்சு கூறிடு மேற் போக்கரித்தால் வாதமாச்சு திரு வெள்ள வீரமொடு பூரம் ரெண்டு சேரு நீயோ வென்ற குப்பிடு சிப்பிக்கெல்லாம் அடு வெள்ள கிப்பியெல்லாம் போட்டு அகண்டதொரு சட்டியிலே பரப்பி வைத்து

பலபலென தண்ணீராகும் வளமான தண்ணீரிலாத விந்தை வைக்கமவ சமனாகச் சேர்த்துக் கொண்டு அதில் போடு குருவண்டு உரமுஞ் சூதம் ஜக்கவே கருநாவி புனுகு பூரமே அறு புள்ளி வண்டின் ஒரு முட்டை காரக்காரம் செய்யவே வகை வகைக்குப் பணவிடை தான் போட்டு தெளிவிறுத்து சவுக்காரந் தண்ணீர் விட்டே ஊற்றி

சவுக்காரத்தைக் கல்வத்திலிட்டு ஒரு சாம மாட்மைபோல் வாட்டியே வில்லை தட்டி ரவியிற் காய்ந்து வளமாக அண்டஓடு ஓடித்துக் கீழ்மேல் நாட்டியே ஓட்டிவிட்டு சவுக்காரம் வைத்து நலமாக மேலோடு கொண்டு மூடி தீட்டியே சிலை செய்து புடத்தைப் போடு சிறப்பாகவெடுத்ததனைக் கல்வத்திட்டே.

ஓட்டில் வைத்து தீட்டியே முந்நீராலாட்டி வில்லை செய்துலர்த்தி புடத்தைப்போடு. மாட்டியே யேழு சீலை மண்ணுஞ் செய்து வளமான ரவியில் வைத்துக் காய்ந்த பின்பு பூட்டியே யிப்படித்தான் ஐந்து தரமப்பா புடமேன்னபத் தெருவில் போடு. போடு ஆட்டியே கடுங்காரமெத்தங் கொள்ளு அழகான முந்நீரா வரைத் திடாயே.

அளடுத்துமே வில்லை தட்டி ரவியில் காய்ந்து அஞ்சு கன்னக் குகையிலிட்டு மேலே மூடி நிரைத்துமே சுண்ணாம்பு சீலை செய்து. நிச்சயமாய்ப் பத்து விராட்டியில் புடத்தைப் போட்டு கரைத்துமே அஞ்சு சுண்ணக் குகையிற்குள்ளே கடுங்காரச்

சுன்னமதில் பூசிப்போடு, அரைத்துமே இப்படியே வழலை கூட்டி ஐந்து முறை புடம் போடச் சுண்ணமாகும்.

சுண்ணத்தால் பாஷாணம் அறுபத்தி நாலும் சொல் வசிய லவணவகை இருபத்தைந்தும் சுண்ணத்தால் நவலோகம் நவரத்னங்கள் சொல்லரியவரசங்கள் நூற்றிரண்டு பத்தும், சுண்ணத்தால் சொன்னதொரு சரக்கு வகையெல்லாம் தொடு முன்னே கட்டினமும் உருக்கினமுமாகும். மென் னொத்த சரக்கெல்லாம் சுண்ணமாகும். மெழுகோடு செந்தூரம் சளங்குமாமே.

கலங்கம் நவலோகந்த தனித் தனியே நீரும் கண்ணிமைக்கும் முன் துருசு சுண்ணமாகும். களங்கமென்ன ஆதமது மணி போலாகுங்கைக்குள்ளே வாதமது சிக்கப்போகும். பளிங்கிசையாய் முப் பூவின் ஆட்சந்த தன்னைப் பாடினேன் சித்திரென்மேல் பகைத்திட்டார்கள். பழங்கதை போ பேசினால் வருவதென்ன பார்த்திட்டு மனம் வைத்தால் சித்தியாமே.

மானிடர்க்கு அடுத்த ரோகம் அறைகிறேன் வாத பித்த சிலேற்பன முன் நேமப்பா விதி வெடுத்த மேகங்கேளு நிலையாத வாதத்தில் நாலாச்சு பித்தத்தாலான தாச்ச சண்டாள சமயத்திலே பதினொன்றாச்சு, நாமப்பால் வித்தை ளெயிவடுத்த ரோகம் கலந்து பார்க்கு பத்து ஒன்று மாச்சே.

**குறிப்பு:**

மேற்படி பாடலை சுவடியில் இருந்து நூல் பதிப்பு செய்யும் பொழுது வரிசையாகவும், தொகுப்பாகவும் பாடல்கள் இல்லாத காரணத்தினால் இந்தப் பாடல் குறித்து வேறு சில பழைய நூல்களை ஆராய்ந்து பிறகு வரிசைப்படி தொகுத்து எழுதியுள்ள காரணத்தினாலும் இதில் எல்லாவித விபரமும் இருக்கின்ற காரணத்தாலும் இதற்கு விளக்கம் தேவை இல்லை என்றாலும் இந்த மருந்தின் பயன் மருத்துவர்களுக்குத்தான் பயன்படும். இதனை செய்யும் முறையும் அனுபவ சித்த வைத்தியர்களுக்கு நன்றாகத் தெரியும். காரணம் சில முக்கியமான மருந்து வகைகளை செய்யும்போது விரைவில் செய்து முடிக்க இந்த மருந்தும்

உபயோகமாகும். சவுக்கார வைப்பு என்பதைச் செய்யும் முறையைக் குறிக்கிறது என்பதை வாசகர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நூலை பதிப்பு செய்த கருத்தாகும்.

**சுவடி மருந்து முறை 15**

## முக்கூட்டுத் தயிலம் செய்யும் முறை

பார்க்கவேமே கரா சாங்கஞ் சொன்னேன் பாடுகிறேன்
முக்காட்டுந்தயிலந்தன்னை யேறகவே நல்லெண்ணைபடி
கானெட்டு இயல்பான ஆவிணெய்படி கானலு, காறகவே
யோண்டத் தெண்ணைபடி தானாலு கலந்தொன்யப்
பாட்டைத் திளைந்து விட்டு ஆர்க்கவே ஆவின்பால்படி
தானாலு அப்பனே செவ்விள நீர்ப்படிதானலே (து சா)

படியான கரிசாலை பொன்னாங்காணி பசலையொடு கற்றாழை பிரமிகஞ்சா செடியான தழுதாழை, சிறுகீரை, நொச்சி, சிறுபூளை, வல்லாரை, முசுமுசுக்கை, நடியான ஆதண்டை, கற்பூரவள்ளி, கற்றாழை விழுது, முடக்கொத்தான் சின்னி, கொடியான கொழுஞ்சி கடார் நார்த்தம் பழமும், கொமட்டி மாதளையோடெலுமிச்சம் பழமே. (சய)

பழமான மல்லிகை செவ்வந்திப்பிச்சு பழம் பாசிவை வகைக்கிரண்டு படி நான்சாறு தழும்பாதே கென்னம்பூ முருங்கையிலுப்பை தனிப்பூவும் புங்கப்பூ செங்கழு நீரவுரி, கிலங்கல்லி க்ரூட், கிழங்காம்பல் நெய்தல் கிழங்கொடு கொட்டி மருளன் கிழங்கு, விளங் நெல்லிக்காய் பட்டையாமே (சக)

பட்டையொடு அருநெல்லிப் பூவந்திப்பழமும் பரிவாக வகைக் கிரண்டு படி தான் சாறு கெட்ட மிடுங்குரு, தோட்டி பாரிரி நன்னாரி குருந்தை வேர் பொன்முசுட்டை குமிழ் நீர்ப்பூலா, தட்டமிடுஞ் சித்தாமுட்டி பேராமுட்டி தூதுவளை குமரி சிரகாஞ்சோரி தோடை, சட்டமுடன் நிலைப்பனையும் தண்ணீர் மிட்டான் சங்கோம் காறணை வேர் சிவனார் வேம்பே.

வேம்பான தழுதைழை நொச்சி விரி வெள்ளெருக்கு காக்கிட்டான் கீழ்க்காய் நெல்லி கருண மருதோன்றி வாகவல்லி குழு மோடு புரசு முன்னை கோவைத்தண்டு பேரான புனல் முருங்கை முக்காவேளை புங்கோடு வாவலத்தி புனலிசிந்தி. கூறான கடலிருங்சீ வெட்டி விலாமிச்சி குருவிற்கு அழிஞ்சிப் பூவரசம் பட்டை (ச நு)

பட்டையாங் கிலுகிலுப்பை உள்ளுலர்த்தி பந்நீரினினம் பூறல் கிளுவைச் சுண்டி, வெட்டியே வகைக்குனாற் பலமே தூக்கு விதமாக யிடித்ததனைப் பாட்டத்திட்டு விட்டுமே பதினாறு மறக்காமல் நீர்தான் விட்டதனை யெட்டொன்றாய் யெரித்துக்காச்சு, இட்டதொரு கிஷாயத்தை யெண்ணெயிலே வாரு யியம்புகிறேன் கற்கவகையினி தாய்க்கேளே. (று று)

இனிதான சாதிக்காய் கிராம்பு பத்திரி யேலமொடு இலவங்கம், அதிமதுரம் கோஷ்டம் குணமான பெருங்காயம் அரத்தை சுக்கு குரோசாணி வால்மிளகு கொத்தமல்லி, வனிதமாங் கருஞ்சீரகம் கஸ்தூரி மஞ்சள் வாலுழுவை சிறுநாகப்புவோடிந்து வனிதமாஞ்சதகுப்பி சிவாசிப்பட்டை வந்தங்கி ஆகியோடு தேவதாரம் (லு று)

தாரமாங்காற் போகி கடுக்காய் தான்றி தாளிசபத்திரி ஓமம் குளவிந்தம் மஞ்சள், ஆரமாம் கண்டத்திப்பிலி அக்றிகாரம் அதிமதுரம், கியூரல் கருவாய்ப்பட்டை சோரமாம் நற்சீரகம் கூகை நீரும், குங்குமப் பூவலம் புரிக்காய் விளங்கம் மாஞ்சி தீரமாந்திப்பிலியும் திப்பிலிமூலம் சந்தனமும் நெல்லி முள்ளி சிறுதேக்காமே. (நு சா)

தேக்கான சண்பகப் பூகடுகு குரோசாணியும் - திரிபலையும சமுத்திராப்பழமும் கல்னார் தேக்கான கச் சொல் மாதளங்காய் பிஞ் சென்ன கரப்பட்டையொடு நெரிஞ்சிக்காயும், வாக்கான பெருங்குரும்பை சித்திரமூலம் - வகை வகைக்கொரு பலந்தான் வரிசையாக தாக்கான புங்கம் வேர் பாலாட்டி தவிராம வெண்ணெயிலே கரைத்திடாயே. (நு எ)

கரைத்துமே அடுப்பேற்றி கணேசன் பூசை கை முறையாய் செய்திட்டு எடுத்து வா நீ, நிரைத்துமே ஒரு விறகாய் நெருப்பை மூட்டி, நிலையான பதமாகக் கிண்டி கிண்டி முரைத்துமே யெண்ணெயுடன் பதத்தைப் பார்த்து முருங்கைப்பூ ஒரு பிடி தான் போட்டு கிண்டி, கரைத்துமே மயில்கொழுந்து பிடிதான் போடு - கருகாமல் பச்சை நிறங்கண்டு கொள்ளே. (ரு அ)

கொள்ளவே எளகு பதமிதுதானென்று குறிப்பான வடிகல சந்தன்னிற்கேளு, வெள்ளவே புனுகு கோரோசனை கஸ்தூரி விதமாக ஒரு வகைக்கு வாற்களஞ்சி தூக்கு வள்ளலே வடிகவசந் தன்னிற் போட்டு வளமாக எண்ணைதனை வழத்து வாங்கு, கள்ள மாயடியிலே கசடில்லாமல் கம்பிளியிலிட்டு நீ பிழிந்திடாயே.

பிழிந்து நீ வேடுகட்டி பூசை பண்ணி - புதைத்துமே நிலக்குமிழியிலிட்டெடுத்து நளினமாய் நாலு நாள் வட்டமுழ்கு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு நோயும் அமுந்தவேனாள் வட்டமுழுகும்போது ஆகாதவே யெல்லாம் கன்று போகும். குளுந்தண்ணீர் தள்ளியிள வெந்நீர் மூழ்கு குணமான பசும்பயறு சீக்காய்தேயே.(ரு ய)

நமுந்தவே புளியோடு புகையிலையுந்தள்ளு ,- நாற்பது நாள் மண்டலந்தான் முழுகும்போது, பழுதில்லா திரேகமது கஸ்தூரி வீசும் பாற்பதற்கு பசுந்தங்கம் போலேயாகும் சோதவாயுவகை பதார்த்தங்தள்ளு சிறப்பான மோர் தயிரும் புளியுந்தள்ளு சிறப்பான மோர் தயிரும் புளியுந்தள்ளு, சேரே நீ வெயில் தனிலே நடையுமாகா செப்புகிறேன் மற்றாவாள் யெல்லாமாமே. (ரு க)

**விளக்கம்:**

மேலே குறிப்பிட்டிருக்கும் முக்கூட்டு எண்ணெய் செய்யும் முறையை அக்காலத்து சித்தர்கள் மிக மிகச்சூசகமாகவும் பரிபாஷையுடனும் மருந்துகளின் பெயர்களைக் கோர்வை சொல்லுடன் அமைத்து பாடல் மூலமாக சுவடியில் எழுதி வைத்திருக்கிறார்கள். மேல்படி எண்ணெய் மருந்தில்சேரும் மருந்து வகைகள் அதிகமான மருந்துகளுடன் சேர்த்து செய்யப்பட்ட

எண்ணெய் மருந்தின் விவரத்தை, இதுவரையிலும் இந்த நூலைப் பதிப்பு செய்த ஆசிரியர் நினைப்பதுடன் இந்த எண்ணெய் மருந்தை செய்யும் முறைகளைப் பற்றி படிக்கும் அனைத்து வாசகர்களுக்கு அதிர்ச்சி ஏற்படுவதுடன் இவ்வுலகில் இத்தனை விதமான மருந்து வகைகள் உள்ளனவா? என்ற சந்தேகத்தில்தான் இந்த நூலை வாசிக்க வேண்டியிருக்கும். மேலும் இந்த எண்ணெயில் சேர்ந்திருக்கும் அனைத்து மருந்து வகைகள் யாவும் அனைத்து விதமான மருந்து வகைகளை சேர்க்கப்பட்டு, எவரும் உடன் புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு அமைந்த இந்தப் பாடலை பிரித்து மிக விளக்கமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**தேவையான மருந்துகள் விபரம்**:

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 1 லிட்டர் |
| பசுவின் நெய் | 1/2 லிட்டர் |
| அமணக்கு எண்ணெய் | 1/2 லிட்டர் |
| செவ்விளநீர் | 1 லிட்டர் |
| கரிசாலைச் சாறு | 2 லிட்டர் |
| பொன்னாங்கண்ணிச்சாறு | 2 லிட்டர் |
| பசலைச் சாறு | 2 லிட்டர் |
| கற்றாழைச் சாறு | 2 ,, |
| பசுவின் பால் | 1 ,, |
| கஞ்சாசெடி இலைச்சாறு | 2 ,, |
| தழுதா இலைச்சாறு | 2 ,, |
| முடக்கொத்தான் இலைச்சாறு | 2 ,, |
| சிறுகீரை இலைச்சாறு | 2 ,, |
| சீறுப்பூழை இலைச்சாறு | 2 ,, |
| நொச்சி இலைச்சாறு | 2 ,, |
| வல்லாரை இலைச்சாறு | 2 ,, |
| முசுமுசுக்கை இலை | 2 ,, |
| ஆதண்டைச் சமூலம் சாறு | 2 ,, |
| கற்பூரவல்லி இலைச்சாறு | 2 ,, |
| சிறு சின்னிச்சாறு | 2 ,, |
| கடாரம் (நார்த்தம்பழம்) சாறு | 2 ,, |

| | |
|---|---|
| கொமுட்டிப்பழச்சாறு | 2 ,, |
| மாதுளைப்பழச்சாறு | 1 ,, |
| எலுமிச்சம்பழச்சாறு | 2 ,, |
| மல்லிகை இலைச்சாறு | 2 ,, |
| செவ்வந்திபூச்சாறு | 2 ,, |
| பழம்பாசி | 2 ,, |
| கொன்னப்பூ | 2 ,, |
| முருங்கைப்பூ | 1 ,, |
| இலுப்பைப்பூ | 2 ,, |
| பூங்கம்பூ | 2 ,, |
| செங்கடிநீர் கிழங்கு | 35 கிராம் |
| நீல அவுரி | 35 ,, |
| கிழங்கல்லி | 2 ,, |
| அக்ரூட் கிழங்கு | 35 ,, |
| பல்நெய்தல் கிழங்கு | 25 ,, |
| கொட்டி மருளங்கிழங்கு | 35 ,, |
| வாய்விளங்கம் | 35 ,, |
| கோரைக்கிழங்கு | 35 ,, |
| நெல்லிக்காய்ப் பட்டைச்சாறு | 2 லிட்டர் |
| அருநெல்லிப்பூ | 2 லிட்டர் |
| அத்திப்பழம் | 2 ,, |
| பாதிரிவேர் | 35 ,, |
| கொட்டமிடும் குருத்தொட்டி வேர் | 35 ,, |
| நன்னாரி | 35 ,, |
| குருந்தை வேர் | 35 ,, |
| பொன் முசுட்டை | 35 ,, |
| நீர்ப்பூலா | 35 ,, |
| துட்டா முருஞ்சு | 35 ,, |
| சித்தாமுட்டி | 35 ,, |
| பேராமுட்டி | 35 ,, |
| தூதுவளை | 35 ,, |
| குமரிச்சாறு | 1/2 ,, |

| | |
|---|---|
| சிறுகாஞ்சோறி | 35 ,, |
| ஆடாதோடைச்சாறு | 1/2 ,, |
| நிலப்பனங்கிழங்கு | 35 கிராம் |
| தண்ணீர் விட்டான் கிழங்கு | 35 ,, |
| சங்கோடு | 25 ,, |
| சாறணை வேர் | 35 ,, |
| சிவனார் வேர் | 35 ,, |
| வெள்ளெருக்கு வேர் பட்டை | 35 ,, |
| காக்கிரட்டான் வேர் | 35 ,, |
| கீழ்க்காய் நெல்லி சமூலம் | 35 கிராம் |
| மருதோன்றி இலை (காய்ந்தது) | 35 ,, |
| நாகவல்லி இலைச்சாறு | 50 மில்லி |
| குமுழோடு | 35 கிராம் |
| புரசு | 35 ,, |
| கோவைத்தண்டுச்சாறு | 50 மில்லி |
| பிராயன் பட்டை | 35 கிராம் |
| புனல் | 35 ,, |
| முருங்கைப்பட்டைச்சாறு | 50 மில்லி |
| முக்குருவேளை இலைச்சாறு | 35 ,, |
| புங்கோடு | 35 ,, |
| புணலித்தண்டு | 35 ,, |
| சீந்தில்கொடிச்சாறு | 50 மில்லி |
| கடலிறாஞ்சி | 35 கிராம் |
| வெட்டிவேர் | 35 ,, |
| விலாமிச்சம் வேர் | 35 ,, |
| குருவிஞ்சி வேர் | 35 ,, |
| அழிஞ்சி வேர் | 35 ,, |
| பூவரசம் பட்டைச் சாறு | 100 மிலி |
| கிலுகிலுப்பைச் சமூலம் | 50 கிராம் |
| உள்ளுவர்த்திச் சமூலம் | 50 ,, |
| பதனீர் | 1 லிட்டர் |
| ஜாதிக்காய் | 35 கிராம் |
| கிராம்பு | 35 ,, |

| | | |
|---|---|---|
| இலவங்கப்பத்திரி | 35 | ,, |
| அதிமதுரம் | 35 | ,, |
| கோஷ்டம் | 35 | ,, |
| பெருங்காயம் | 35 | ,, |
| அரத்தை | 35 | ,, |
| சுக்கு | 35 | ,, |
| குரோசாணி | 35 | ,, |
| வாலுழுவை அரிசி | 35 | ,, |
| வால் மிளகு | 35 | ,, |
| கொத்தமல்லி விதை | 35 | ,, |
| கருஞ்சீரகம் | 35 | ,, |
| கஸ்தூரி மஞ்சள் | 35 | ,, |
| சிறுநாகப்பூ | 35 | ,, |
| சடாமாஞ்சில் | 35 | ,, |
| சதகுப்பை | 35 | ,, |
| சிவாசிப்பட்டை | 35 | ,, |
| அகிலோடு | 35 | ,, |
| தேவதாரம் | 35 | ,, |
| கடுக்காய்த்தோல் | 35 | ,, |
| தான்றிக்காய்த்தோல் | 35 | ,, |
| தாளிசபத்திரி | 35 | ,, |
| ஓமம் | 35 | ,, |
| குளவிந்தம்மஞ்சள் | 35 | ,, |
| கண்டத்திப்பிலி | 35 | ,, |
| அக்கரகாரம் | 35 | ,, |
| கிளியூரல்பட்டை | 35 | ,, |
| சோம்பு | 35 | ,, |
| நற்சீரகம் | 35 | ,, |
| குகைநீர் | 35 | ,, |
| குங்குமப்பூ | 10 | ,, |
| வலம்புரிக்காய் | 35 | ,, |
| வாய்விளங்கம் | 35 | ,, |
| மாஞ்சிட்டி | 35 | ,, |

| | | |
|---|---|---|
| திப்பிலி | 35 | ,, |
| திப்பிலிமூலம் | 35 | ,, |
| சந்தனத்தூள் | 35 | ,, |
| நெல்லிமுள்ளி | 35 | ,, |
| சிறுத்தேக்கு | 35 | ,, |
| சண்பகப்பூ | 35 | ,, |
| சமுத்திராப்பழம் | 35 | ,, |
| கல்நார் | 35 | ,, |
| மாதுளம்பிஞ்சுத்தோல் | 35 | ,, |
| சென்னகரைப்பட்டை | 35 | ,, |
| நெரிஞ்சிக்காய் | 35 | ,, |
| பெரும்குரும்பை | 35 | ,, |
| புங்கம்வேர்ப்பட்டை | 35 | ,, |
| வெற்பாலையரிசி | 35 | ,, |
| முன்னை வேர் | 35 | ,, |
| செந்தொட்டி வேர் | 35 | ,, |
| நிலக்குமிழ் வேர் | 35 | ,, |
| சித்திரமூலம் (வேர்ப்பட்டை) | 35 | ,, |
| கருவாய்ப்பட்டை | 25 | ,, |

மேற்குறிப்பிட்டு இருக்கும் கடைச்சரக்குகளை நன்றாக இடித்து ஒரு பானையில் போட்டுச் சாறு வகைகளையும் சேர்த்து! இத்துடன் இதன் பட்டை வகைகளின் சாறுகளையும் ஒன்று சேர்த்து அடுப்பில் வைத்து நன்கு காய்ச்சிப் பதம் வந்தவுடன் இறக்கி வைத்து இதில் ஒரு கைப்பிடியளவு முருங்கைப் பூவைப் போட்டு நன்றாகக் கிண்டி விட வேண்டும். ஆறிய பிறகு துணி கொண்டு வடிக்கட்டிட வேண்டும். வடிகட்டிய இந்த எண்ணெயின் அளவுக்குத் தகுந்தபடி புனுகு, கோரோசனை, கஸ்தூரி இவைகளை அரைத்து எண்ணெயில் சேர்த்துக் கொள்ளவும்.

**கால அளவு:**

இந்த எண்ணெயை நான்கு நாட்களுக்கு ஒரு நாள் வீதம் ஒரு மண்டலம் அதாவது 48 நாட்கள் 20 மிலி அளவு தேய்த்துக் குளிக்கவும்.

**குறிப்பு:**

வெந்நீரில் குளிக்க வேண்டும். சீயக்காய்த்தூளுக்குப் பதிலாகப் பாசிப்பருப்பு மாவை உபயோகிக்கவும்.

**பத்தியம்:**

புளி, புகையிலை நீக்கவும்.

**தீரும் வியாதிகள்:**

அனைத்து வியாதிகள், கரப்பான், சூலை, குட்டம், மேகம் போன்றவையும் ஏற்கனவே உடம்பில் நெடுநாள் தீராமல் இருந்து வரும் பழைய நோய்களும் தீரும். இது கைகண்ட மருந்து

**குறிப்பு: (பதிப்பாசிரியர் கருத்து)**

இதில் குறிப்பிடப்பட்டு இருக்கும் கடைச் சரக்குகளும் மூலிகைகளும் மிகவும் சரியானவைதானா? என்பதை நன்றாக உறுதி செய்து கொண்ட பின்னரே இந்த முக்கூட்டு எண்ணெயைத் தயாரிக்க முயல வேண்டும் என்று இந்நூலின் பதிப்பாசிரியர் அன்புடன் கேட்டுக்கொள்கிறார். காரணம் இதில் அதிகமான மருந்துகள் சேர்க்கப்பட்டிருப்பதால் அவைகள் ஒன்றுக்கொன்று மாறுதல் அடைந்து விடக்கூடாது என்பதனால் மேற்படி மருந்து வகைகளைத் தனித்தனியாக நன்றாகக் காயவைத்துக் கொண்டு இதில் இருக்கும் குப்பைத் தூசுகளை நீக்கிவிட்டுச் சுத்தமான கல் உரலில் போட்டு நன்றாக இடித்துத் தூள் செய்து கொண்டு சீலை வடிக்கொண்டு வடிகட்டிய சூரணத்தைப் பத்திரமாக மூடியுடன் கூடிய பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும். மற்றச் சாறு வகைகள் குறிப்பிட்ட வகைகளைச் சார்ந்தனவா என்பதைச் சரிபார்த்து இலை, பட்டை, கொடி இவ்வகைகளையெல்லாம் கல் உரலில் போட்டு நன்றாக இடித்துத் துணி கொண்டு வடிக்கட்டிக் கொள்ளவும். இந்த இலை பட்டை இவைகளையெல்லாம் கல் உரலில் போட்டு இடிக்கும்போது மிக கவனமாகப் பார்த்துச் செய்ய வேண்டும். காரணம் பட்டைகளை, இலைகளை கல் உரலில் இடிக்கும்போது கவனக் குறைவினால் கல் உரலில் வேறு ஏதாவது விஷப்பூச்சிகள்

பல்லி இவைகள் விழுந்து இவைகளையும் சேர்த்துச்ச சாறு பிழியும் நிலை ஏற்படும். இவ்வாறு கவனக் குறைவுடன் செய்தால் உட்கொள்ளும் மருந்து உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தி விடும். எனவே மருந்து வகைகளைச் செய்யும்போதும், மற்ற இலை பட்டை வகைகளை இடிக்கும்போதும் மிக மிகக்கவனமாகக் செய்ய வேண்டும்.

**சுவடி மருந்து முறை 16**

## மேகம் பிறக்கும் வகை (கா அ)

### (மேக நோய் வருவதற்கான காரணங்கள்)

அன்னம் பிறந்தது வல்லா விதையிலை மன்னிப்ப
வெட்டைமகா சீத மிரண்ட னேற்பன்ன விரிந்
திதைப் பரப்பார் பெரியோர்கள் கன்னி
மயக்கத்தாற் கண்டிடுமேகமேவு மேகம்
பிரதே விதஞ் சொன்னா ரேன் நதியாக
மிழந்தைப் பருவத்தால் போகந்தினஞ் செய்யிர் புகழ.

**விளக்கம்:**

இந்த வியாதி வருவதற்கான காரணம், அதிகமான அளவிற்கு உடல் உறவு விரும்புவதால் மூலத்தில் அனல் மிஞ்சி மேகஞ்சலித்துச் சிரம்வரை வெந்துருகித் தாது கெட்டு அதனால் நரம்பு எல்லாம் பலம் குறைந்து மேகநீர் நீரழிவு உண்டாகிது. இந்த மாதிரி இருக்கும் சமயத்தில் கொழுப்புச் சத்துள்ள மீன், இறைச்சி, நெய், பால் இவைகளை அதிகம் விரும்பி உட்கொள்வதன் மூலம் இந்த வியாதி அதிகமாக இருக்கக்கூடும்.

**மேற்படி வியாதிகளின் முக்கிய குணங்கள்:**

உடல் மெலியும், வெளுக்கும், முறுகும், வியக்கும், நோகும், முகம், கை, கால் காந்தும் நகம் பிரியும். கண் வெளுக்கும். நாக்கு உலரும். தாகம் அதிகமாக இருக்கும். ஆயாசம் களைப்புண்டாகும்.

இரவும், பகலும் நித்திரை அதிகமாக காணப்படும். உணவு சாப்பிடப் பிடிக்காமல் இருக்கும். இந்த மேகத்தில் சில வகையின் குறிகுணங்களைப் பற்றிக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**1. வாத, பிரமேகநீர் குணத்தின் அறிகுறிகள்:**

இந்த வியாதி உள்ளவர்களின் சிறுநீரில் முளைப்போலும், பனைமரத்தின் நொங்கு சுவை போலவும், கொழுப்புப் போலவும் கட்டியான சளி போலவும், சுக்கிலம் போலவும், நீளமான நரம்புத் துண்டு போலவும், நல்லெண்ணெய் போலவும், வெண்ணெய் உருக்கிய நெய் மாதிரியும், பனை மரத்தின் கள், தென்னை மரத்தின் கள் மாதிரியும் மிக வழுவழுப்பாக நீர் போகும். இந்தச் சிறுநீர் கழித்த இடத்தில் அதிகமான ஈக்கள் உட்காரும்.

**2. பித்தபிரமேக நீர் குணத்தின் அறிகுறிகள்;**

உடல் கறுத்து, மஞ்சனிக்கும் நாவு புளி புளிக்கும். துவர்க்கும், கிறுகிறுத்து வரும். மயக்கம் வரும். நீர் மஞ்சள் நிறம், நீலம் நிறம், அடுப்புக்கரி நிறம் போலவும், சாம்பல் நிறம் மாதிரியும் இறைச்சி கழுவிய தண்ணீர் மாதிரியும் இருக்கும். இவ்வாறு நீர் கழிவார்கள், இந்த நீரைக் காய்ச்சிப் பார்த்தால் மஞ்சள் நிறமாக இருக்கும்.

**3. சிலேத்தும பிரமேகநீர் குணத்தின் அறிகுறிகள்:**

இந்த வியாதி உள்ளவர்களின் சிறுநீர் அடிக்கரும்புச் சாறு போலும், அரும் புனல் போலும், மாவைக் கரைத்த நிறம் போலவும் சர்க்கரைப்பாகு போலவும், தேன்பாகு போலவும் நீர் கழிவார்கள். சிறுநீர் கழித்த இடத்தில் எறும்புகள் அதிகமாக மேயும். சிறுநீர் மேல் ரசம் போலவும் நெய் மிதப்பது போலவும் காணப்படும். இந்த நீரைக் காய்ச்சிப் பார்த்தால் வெண்மையாகவும், நுரையாகவும் இருக்கும்.

**இதன் நிவர்த்திக்கு மருந்து:**

**தேவை**யான மருந்துகளின் விபரம்;

1. சுக்கு, 2 மிளகு, 3 சீரகம், 4 லவங்கப்பட்டை, 5 கோரோசனை, 6 தாமரை வளையம், 7 சாதிப்பத்திரி, 8 தீபாலை

9 சீனி, 10 கருஞ்சீரகம், 11 நற்சீரகம், 12 ஏலம், 13 தாளிசபத்திரி, 14 கூகைநீர், 15 லவங்கப்பத்திரி, 16 கிராம்பு, 17 குரோசாணி 18 முந்திரிப்பழம், 19 அதிமதுரம், 20 கோஷ்டம், 21 சண்பகப்பூ, 22 சிறு நாகப்பூ, 23 கல்நார், 24 சாதிக்காய், 25 வாய்விளங்கம், 26 ஓமம், 27 பேரீச்சம்பழம் இந்த மருந்துச் சாமான்களை வகைப்படி எடுத்துக்கொண்டு நன்றாக இடித்து சூரணம் மாதிரி செய்து கொண்டு சுத்தமான பாட்டிலில் வைத்துக்கொள்ளவும்.

**உட்கொள்ளும் அளவு:**

வேளைக்கு மூன்று கிராம் எடை வீதம் தினம் இரண்டு வேளை

**காலம்:**

நாற்பத்தி எட்டு நாட்கள் சாப்பிடவும்.

**அனுமானம்;**

இந்தச் சூரணத்துடன் வங்க பற்பம் 130 மில்லி கிராம் எடை கலந்து சாப்பிடவும்.

**பத்தியம்:**

கொழுத்த மீன் உணவு, நெய், கொழுப்புச் சத்துள்ள பொருட்களை நீக்கவும்.

**குறிப்பு;**

மேற்குறிப்பிட்டிருக்கும் மருந்து வகைகளில் வகைக்கு 35 கிராம் எடை வீதம் எடுத்து உபயோகப்படுத்திக் கொள்ளவும்.

**சுவடி மருந்து முறை 17**

## ரச (இரத்த) செந்தூரம் செய்யும் முறையும் உபயோகமும்

...வளரும் உளமாங்காய் வெதுவெதுப் புண்டா மாங்கி
ஷவாத மனுசா... கண்ணுக் கொளியுண்டாம் இரத்த
மலகமுத்துக் கண் சார் விட்டு அஞ்சு சாமமரைத்து
வில்ல

தட்டிக் காய வைத்து முளப்புடத்தில் ஓட்டிலே
வைத்துமே
லோடு மூடி சீலைமண் செய்து காய்ந்த பிறகு புடத்திற்
போடச் செந்தூ ரமாம் சகலமான வியாதிகளுக்கு
அனுப்பானத்தில் பணவிடை செந்தூரங் கொடுக்க
சயம்பவுத்
திரம் கிரந்தி பரங்கி பத்துக்கள் சூலை, கண்டமாலை
முதலான வியாதிகள் தீரும். யெழுபொழுது சாப்பிடவும்.

**விளக்கம்**:

சுத்திசெய்த வாலை ரசத்தைப் பத்துக் கிராம் அளவோடு எடுத்துக்கொண்டு இரத்த மலகமுழத்துருக்கன் இலைச்சாறு விட்டு ஐந்து சாமம் (பதினைந்து **மணி** நேரம்)அரைத்து வில்லை தட்டிக் கொண்டு இதனை மண் ஓட்டில் வைத்து நன்றாகக் காயவைத்து இந்த ஓட்டின் மேல் மண் ஓடு மூடிபோட்டு நன்றாக மூடிச் சீலை மண் செய்து இதனைக் காய வைத்து முப்புடம் போட்டால் இரத்த செந்தூரம் ஆகும்.

**தீரும் வியாதிகள்**:

பவுத்திரம், கிரந்தி, பரங்கிப் பத்துகள், சூலை, கண்ட மாலை இவைகள் தீரும்.

**உட்கொள்ளும் காலம்**:

ஒரு பண எடை (நானூற்று எண்பத்தெட்டு மில்லி கிராம்) வீதம்

**காலம்**:

ஏழு நாட்கள் சாப்பிடவும்

**பத்தியம்**:

மேற்படி வியாதிகளுக்கு ஏற்றபடி பத்தியத்தைக் கடைப்பிடிக்கவும்.

**இரண்டாவது முறை**:

| | |
|---|---|
| இரசம் | 10 கிராம் |
| கந்தகம் (சுத்தி செய்தது) | 10 ,, |

இந்த இரண்டு மருந்து வகைகளையும் சமன் எடை எடுத்துக் கொண்டு பேச்செம்பி கிழங்குச் சாற்றில் மூன்று நாட்கள் ஊறவைத்துப் பிறகு காய வைத்து நன்றாகப் பொடி (தூள்) செய்து ஒரு குப்பியில் போட்டு நன்றாக மூடி விட வேண்டும். மணல் மேல் இந்தக் குப்பியை வைத்து விராட்டி கொண்டு பதினைந்து மணி நேரம் வரை நன்றாக எரிக்க வேண்டும். இந்தக் குப்பி ஆறிய பிறகு இதனை உடைத்து உள்ளிருக்கும் மருந்தை எடுத்துக் கல்வத்தில் போட்டு இத்துடன் கந்தகத்தை மறுபடியும் 5 (ஐந்து) கிராம் எடைக்கு பேய்ச் சேம்பின் கிழங்குச் சாற்றை விட்டு அரைத்துக் காயவைத்துக் குப்பியில் போட்டு மூடி மேற்சொன்ன மாதிரி (மண் குவியல்) உள் வைத்து விராட்டி கொண்டு பதினைந்துமணி நேரம் எரிக்கவும். இப்படி ஐந்து முறை எரிக்க வேண்டும். இது ஆறிய பிறகு குப்பியை உடைத்து உள்ளிருக்கும் மருந்தைச் (செந்தூரத்தை) எடுத்துப் பாட்டிலில் வைத்துக் கொண்டு முன்பு சொன்ன அளவுப்படியும் அனுமானப்படியும் உட்கொள்ள வேண்டும். வியாதிகளுக்குத் தகுந்தாற் போல் உணவுப் பண்டங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டியதும் நீக்க வேண்டியவற்றை நீக்க வேண்டியதும் நோயாளியின் கடமையாகும்.

**குறிப்பு:**

மேற்குறிப்பிட்டு இருக்கும் இரச செந்தூரம் மருந்து செய்யும் முறையில் கவனிக்க வேண்டியது. மருந்துகளைக் குப்பியில் வைத்து மூடிப் போட்டு மணல் குவியலின் மேல் வைத்து விராட்டி கொண்டு எரிய விடுவது பற்றிச் சற்றுப் புரியும்படி கீழே விபரமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. குப்பி என்பது ஒரு உலோகத்தால் செய்யப்பட்டது. அக்காலத்தில சின்னபடிகம் மாதிரி ஒரு பாத்திரம் ஆகும். மரக்கட்டை அல்லது மண் ஓடு போட்ட மூடி போட்டு மூடலாம். மண் குவி.யல் என்பது ஆற்று மணலில் ஆறு அங்குலம்

உயரத்திற்கு மணல் குவியல் மாதிரி செய்து இந்தக் குவியலில் நான்கு விரல் ஆழத்திற்கு குழி செய்து இந்தக் குப்பியை வைத்துச் சுற்றிலும் விராட்டி வைத்து எரிக்க வேண்டும். இதனைத் தான் குப்பியில் வைத்துப் புடம் போடுவது என்று கூறுவர்.

**சுவடி மருந்து முறை 18**

## தாளக பற்பம் பவளக் குழம்பு செய்யும் முறையும் உபயோகமும்

தாளகத்தை சிவகரத்தைச் சார் விட்டு அஞ்சு சாமமரைத்து அதிற் புகையடங்காவிடில் புகை அடங்கும்படி நன்றாயரைத்து வில்லை தட்டிக் கூடுபுடம்போட பற்பமாகும். மேற்கண்ட வியாதிகள் தீரும். அனுபான விசேஷங்களிற் கொடுக்கவும். லிங்கம் - க பொரிகாலம் கா-2 இந்துப்புச்சாறு தித்திரமணக்கம் பருப்பு சாறு நேர்வாள பருப்புச் சாறு இவ்வளவும் சேர்த்து ஒரு சாமமரைத்துப் பேதிக்குச் சாப்பிட உடனே போஞ்சி சாப்பிட்ட போஞ்சிக்கு விவரம் சீனியிலுமிச்சம்பழஞ் செலத்திர் போட்டு சாப்பிடவும். ........ அனுப்பானு வெண்ணை நெல்லிக்காய் சுக்கு சீனி வாழைப்பழம் பேதியாகாமர் போனால் குழுந்த சலம் பேதியதி கப்பட்டால், வென்னீர் சாப்பிட நிற்குமில்லை யென்றால் வசம்பு சட்டியிற் போட்டுச் சாம மொரு யரைப்படி செலம் விட்டு நாலோ ....காச்சிக் கொட்டைப் பாக்களவு வென்னீர் .....போட்டுச் சாப்பிட நிற்கும்.

**விளக்கம்** : **தாளகப்பற்பம் செய்யும் முறை:**

சுத்தி செய்த தாளகத்தைப் பத்துக் கிராம் எடை வீதம் எடுத்துக்கொண்டு இதனைக் கல்வத்தில் போட்டுச் சிவ கரந்தைச் சாறு விட்டுப் பதினைந்து மணி நேரம் நன்றாக அரைக்கவும். இப்படி அரைக்கும்போது சற்றுப் புகை மாதிரி இருக்கும். இப்படி புகை இல்லாத அளவிற்குக் கட்டியாக அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து இதனை மண் ஓட்டில் வைத்து நன்றாக மூடிச் சீலைமண் செய்து காயவைத்து ஐம்பது எருவில் புடம்போட்டு ஆறிய பிறகு மறுபடியும் கல்வத்தில் நன்றாக அரைத்துச் சுத்தமான பாட்டிலில் அடைத்து வைத்துக்கொள்ளவும்.

**தீரும் வியாதிகள்**:

சிலேத்தும நோய்கள், சுரம், அரையாப்பு, கிரந்தி, சூலை, குட்டம்

**அளவு**:

ஒரு பண எடை வீதம் (488 மில்லி கிராம் எடை)

**உட்கொள்ளும் காலம்**:

(24) இருபத்தி நான்கு நாட்கள் (அரை மண்டலம்)

**அனுமானம்**:

தேன் கலந்து சாப்பிடவும்.

**பத்தியம்**:

வியாதிகளுக்கு ஏற்றபடி உணவு வகைகளைச் சேர்த்துக் கொள்ளவும். அல்லது நீக்கவும்.

## தாளகத்தை சுத்தி செய்யும் முறை

**குறிப்பு**:

தாளகத்தைக் கொள்ளுத் தண்ணீரில் ஊறவைத்து இந்தத் தாளகக் கட்டியைத் தோலாயந்திரமாக எரித்துக் கொண்டால் சுத்தியாகும்.

## பவளக் குழம்பு செய்யும் முறை

| | |
|---|---|
| லிங்கம் (சுத்தி செய்தது) | 18 கிராம் |
| பொரிகாரம் | 12 ,, |
| இந்துப்பு | 12 ,, |
| சித்தாமணக்குக் கொட்டை | 20 ,, |
| நீர்வாளப்பருப்பு (சுத்தி செய்தது) | 12 ,, |

இந்த ஐந்து சரக்குகளை விகிதப்படி எடுத்துக் கொண்டு கல்வத்தில் போட்டு நன்றாக மூன்று மணி நேரம் அரைத்துச்

சுத்தமான பாட்டிலில் வைத்துக்கொள்ளவும். இந்த மருந்து சாப்பிட்டால் பேதி ஆகும். அப்படிப் பேதி ஆகவில்லையென்றால் இந்த மருந்தை 1 கிராம் எடைக்கு எடுத்துக் கொண்டு எலுமிச்சம் பழச்சாற்றில் தண்ணீர் ஊற்றி சர்க்கரை கலந்து சாப்பிட்டால் பேதி ஆகும். பேதி அதிகம் போனால் அதற்குக் கீழ்க்கண்ட முறையில் மாற்று செய்து பேதியை நிறுத்தி விடவும்.

வெண்ணெய், நெல்லிக்காய், சுக்கு, சீனி, வாழைப்பழம் இவைகளை ஒரு அளவாகத் தண்ணீர் விட்டரைத்துச் சாப்பிட்டால் பேதி நிற்கும். அப்படி நிற்கவில்லை என்றால் வசம்பைச் சுட்டு அந்தக் கரியை 5 கிராம் எடைக்கு எடுத்துத் தேன் கலந்து சாப்பிட்டால் பேதி நிற்கும்.

**தீரும் வியாதிகள்** :

சூலைப்பிடிப்பு, முடக்கு வாய்வு, உடல் கடுப்பு, வாய்வு குடைச்சல், வாய்வுக்காய்ச்சல், குடல் வாய்வு இவைகள் தீரும்.

**உட்கொள்ளும் அளவு:**

ஒரு வேளைக்கு ஒரு கிராம் முதல் இரண்டு கிராம் எடை வீதம் உட்கொள்ளவும்.

**உட்கொள்ளும் காலம்:**

ஐந்து நாட்கள் விட்டு ஒரு வேளை வீதம் இப்படிக் கொட்டைப் பாக்களவு எடுத்துக் கொண்டு வெந்நீர் கலந்து சாப்பிடவும்.

குறிப்பு:

மேல் குறிப்பிட்டிருக்கும் மருந்தில் நீர்வாளம் சேர்க்கப்பட்டிருப்பதால் இந்த நீர்வாளம் சுத்தி செய்யப்பட்ட பருப்புகளை மட்டும் சேர்க்க வேண்டும் என்பது இந்தப் பாடலில்

குறிப்பிடப்பட்டு உள்ளது. ஆகவே மேற்படி நீர்வாளக் கொட்டைகளின் தோலை நீக்கி ஒரு பானையில் போட்டு இதில் சாணிப்பால் விட்டுக் கொஞ்சம் பச்சை அரிசியைப் போட்டு இத்துடன் புளியும் இலையும் போட்டு அடுப்பில் வைத்து நன்றாக எரித்து அரிசிச் சாதம் பதம் வரும் வரை வேக வைத்து ஆறிய பிறகு இதனைத் தண்ணீர் விட்டுக் கழுவி இந்த முழுப் பருப்புகளை இரண்டாகப் பிளந்து உள்ளிருக்கும் முளைகளை நீக்கிவிட்டு இதளைக் காயவைத்துப் பிறகு ஒரு சட்டியில் கொஞ்சம் நெய்விட்டு அடுப்பில் வைத்து இந்தப் பருப்புகளை அதில் போட்டு பொன் நிறமாக வறுத்து எடுத்துக் கொண்டால் இதுதான் சுத்தி செய்த நீர்வாளம் என்பதாகும்.

**சுவடி மருந்து முறை; 19**

## சன்னி மாத்திரை (ஜன்னி நோயின் அறிகுறிகளும் அதன் நிவர்த்திக்கு மருந்து செய்யும் முறையும்)

கெந்தாம்னைக் தாளகம் கைரசம்னைக் நாயினைகயே
மகேசீலைனைக் பொரிகாரம்னைக் லிங்கம் னைஅ
இந்தயேழு
சரக்கு மிஞ்சி ரசத்தினிரண்டு நாளரைத்து நிழலுரத்தி
விழுந்துப்
பிரமாண மாத்திரைப் பண்ணி இஞ்சிரத்தில் மாத்திரை
கொடுத்தால் சன்னி தீருமிப் படி கியந்தி சாந்தி
கொடுக்கிறது.

**விளக்கம்;**

ஜன்னி என்ற சொல்லே மிக ஆபத்துள்ள நோய். இந்த நோய் அதிகமாகக் குழந்தைகளுக்குத்தான் வரும். மேலும் இதன் அறிகுறிகள் அதிக சுரம், மயக்கம், தாகம் அதிகமாக இருக்கும். நாக்கு முள்ளுப் போல் இருக்கும். கண் தாமும், புத்தி (நினைவுகள்)

கலங்கிக் குழப்பம் அடையும். இதில் பல வகையுண்டு. சில வகை ஜன்னி சுரங்களைப் பற்றி கீழே விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

### 1. குழந்தைகளுக்கு வரும் ஜன்னியின் குறிகுணங்கள்:

குழந்தை அதிகமான அழுகையுடனும், வாய்பிதற்றும் ஒரு கண் திறந்து ஒரு கண்ணை உருட்டி விழித்துப் பார்த்து அழும். ஊசி போல் கழுத்து நோந்து உடம்பு எல்லாம் நரம்பு தெரியும். பாசி போல் விழி பசக்கும்.

### 2. ஆம ஜன்னியின் குறிகுணங்கள்:

குழந்தை தாய்ப்பால் குடிக்காது. கண் விழிக்காது. (கண் திறக்க முடியாது.) மயங்கும் முகம் வேறுபடும். சில வகையான வலிப்பு (இழுப்பு) உண்டாகும். குரல் கம்மும். மலம் கட்டி விடும். சுரம் அதிகமாக இருக்கும். தாகம் அதிகமாக இருக்கும். நெற்றி கழிக்கும். மயக்கம் காணும்.

### 3. கோராம ஜன்னியின் குறி குணங்கள்:

வாய்வு அதிகமாகி உடம்பு தீப்போல் சூடாக இருக்கும். சதை குலுக்கி வலிக்கும். கண், விழி, கை, கால் பதைக்கும். வாயில் இருந்து நீர் வடியும்.

### 4. தாந்திரிக ஜன்னியின் குறி குணங்கள்;

குழந்தை தாய்ப்பால் குடிக்காது. அதிகமான காய்ச்சல் இருக்கும். தாகம் அதிகம் இருக்கும். மேனி பதைக்கும். அரை குளிர்ந்து இருக்கும். மூச்சு அதிகம் காணும்.

### 5. தீராத ஜன்னியின் குறிகுணங்கள்;

உடல் மஞ்சனிக்கும், குழந்தை தாய்ப்பால் குடிக்காது. பெருமூச்சு விடும். கண், நாக்கு, புருவம், கை, கால்கள் கோண வழிக்கும். விழி மேல் நோக்கும்.

**இதன் நிவர்த்திக்குத் தேவையான மருந்துகளின் விவரம்**

கந்தகம், தாளகம், சுத்தி செய்த ரசம், நாபினை மனோசிலை, பொரிகாரம், லிங்கம் இந்த ஏழு மருந்துகளையும் சமன் எடை எடுத்துக்கொண்டு கல்வத்தில் போட்டு இஞ்சிச்சாற்றில் இரண்டு நாளைக்கு அரைத்துக் கெட்டியாக இருக்கும். பதம் வரும் வரை அரைத்து முழு உளுந்து அளவிற்கு மாத்திரைகள் செய்து நிழலில் காய வைத்துச் சுத்தமான பாட்டிலில் வைத்துக்கொள்ளவும்.

**தீரும் வியாதிகள்**:

அனைத்து ஜன்னி வகை நோய்களும் தீரும்.

**அளவு**:

ஒரு வேளைக்கு உளுந்து அளவுள்ள மாத்திரை ஒன்று மட்டும் உட்கொள்ளவும்.

**காலம்:**

மூன்று நாளைக்குக் கொடுக்க வேண்டும்.

**அனுபானம்**:

இஞ்சிச் சாற்றில் கலந்து கொடுக்கவும்.

**பத்தியம்**:

கடுமையான (இச்சா பத்தியம்) புளி, உப்பு, புகையிலை, கரப்பான் வகை உணவுப் பண்டங்கள், வாய்வுப் பண்டங்கள் நீக்கவும்.

**சுவடி மருந்து முறை: 20**

## கிறாணி பாடம் (கண்களின் மூலமாக மருந்து போடும் முறை. கலிக்கம்)

கண்ணு துக்க வீக்கம் போடுகிறது மாத்திரைதான்
கண்ணுக்குப் போட அனுபானு முலைப்பாலாலே
பெண்ணை தேன் வெற்றிலைச் சார்பங்கல்லைச்
சாரி வளவி லொன்றினுரைத்துப் போட சன்னி
தீரும் புளி புகையிலை மந்த பதார்த்த ரகளை
பத்தியம் சாதிக்காய் சாதிபத்திரி சுக்கு திப்பிலி
மிளகு சீரகம் அதிவிடையம் கிராம்பு அடான்
வெந்தயம் சாதிலிங்கம் களச்சிப்பருப்பு மேகம்
மேகவாயு சாத்திய குட்டலை களித்துக்
லெல்லான் தீரு மிச்சாபத்தியம்.

**விளக்கம்**:

மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கும் போது பல விதமான முறைகளில் செய்து இருக்கிறார்கள். அதாவது மாத்திரை, குடிநீர், லேகியம், பற்பம், செந்தூரம், எண்ணெய் வகைகள். இந்த வகைகளைப் போலக் கண் விழிகளின் மூலமாக வியாதியைச் சீக்கிரம் குணம் அடைய அக்காலத்தில் அதிகமாகக் கலிக்கம் என்ற முறைகளைப் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்பதை அக்காலத்துச் சித்தர்கள் ஓலைச்சுவடிகளின் மூலமாக எழுதி வைத்திருக்கிறார்கள். இந்தக் கலிக்கம் மூலமாக சிகிச்சைகள் செய்தால் நோய்கள் உடன் நிவர்த்தி, மேலும் விஷம் சம்மந்தப்பட்ட நிலையில் உள்ள நோயாளிகளுக்கு இந்த முறை மிகவும் சிறந்தது. இந்தக் கலிக்கத்தைக் கண்களில் போட்டவுடன் இறந்தவன் மாதிரி இருக்கும் உடல்நிலை கூட சற்று நேரத்திற்கு எல்லாம் சில உறுப்புகள் அசைய ஆரம்பித்து விடும். ஆனால் கண்களில் போடும் கலிக்கம் வேகு விரைவில் உடல் முழுதும் மருந்து பரவி உடல் வியாதிகளைக் கண்டிக்கச்செய்கிறது.

இதன் காரணத்தால் தான் அக்காலத்தில் இந்த முறைகளைக் குறிப்பிட்ட சில வியாதிகளுக்கு மட்டும் சிகிச்சை செய்யப் பயன்படுத்தி இருக்கிறார்கள். இதில் நல்ல பயன் உள்ளது என்றும், மனிதன் உடம்பில் விஷப்பாம்பு கடித்து அவனது உடம்பில் விஷம் பரவி உயிருக்கு மன்றாடிக்கொண்டிருக்கும்போது அவனது உடல் மிக மிக அமைதியாக எந்த உறுப்புகளும் இயங்காது. இறந்தவன் போல இருப்பான். அச்சமயத்தில் இந்தக் கலிக்கம் மருந்தின் மூலம் சிகிச்சை செய்யலாம். இந்தக் கலிக்கம் செய்ய வேண்டிய மருந்துகளும், செய்யும் முறைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**தேவையான மருந்துகள் விபரம்;**

| | | | |
|---|---|---|---|
| ஜாதிக்காய் | 10 கிராம் | கிராம்பு | 10 கிராம் |
| ஜாதிப்பத்திரி | 10 ,, | அபின் | 10 ,, |
| சுக்கு | 10 ,, | வெந்தயம் | 10 ,, |
| மிளகு | 10 ,, | ஜாதிலிங்கம் | 10 ,, |
| சீரகம் | 10 ,, | களஞ்சிப்பருப்பு | 10 ,, |
| அதிவிடயம் | 10 ,, | | |

இந்த மருந்து வகைகளைக் கல்வத்தில் போட்டு நான்கு நாட்கள் நன்றாக அரைத்து மாத்திரைகளைப் போல் செய்து கொண்டு நிழலில் காய வைத்துக்கொண்டு கீழ்க்கண்ட வியாதிகளுக்கு இந்த மாத்திரைகளை வெந்நீர் அல்லது முலைப்பால் வெற்றிலைச்சாறு விட்டு உறைத்து மூன்று சொட்டு வீதம் கலிக்கம் போடவும். (கண்களைத் திறந்து மூன்று சொட்டு போடவும்.)

**பத்தி.யம்:**

புளி, உப்பு, புகையிலை, வாய்வுப் பதார்த்தம், மந்திக்கும் எண்ணெய்ப் பண்டங்கள் நீக்கவும். (இச்சா பத்தியம்) இருப்பது நல்லது.

**தீரும் வியாதிகள்;**

மேகம், மேகவாய்வு, சாத்திய குட்டலை, ஜன்னி, உடல் விஷம் இவைகள் யாவும் தீரும்.

**குறிப்பு:**

மேற்சொன்ன மருந்து வகைகளைக் கல்வத்தில் போட்டு அரைக்கும் முன்னர் இந்த மருந்துகள் எல்லாம் சுத்தி செய்யப்பட்டது மட்டும் அரைக்கவும். காரணம் மேற்படி மருந்துப் பொருள்களில் சில குப்பை, மண்,குச்சி, கல் இவைகள் இருக்கும். எனவே இதனைச் சுத்தி செய்த பின்னர் உபயோகிக்கவும்.

**சுவடிமருந்து முறை; 21**

## பாலாச மொடு கிளிப்பாய(சுவடிமருந்து முறை;)

லிங்கமலைக் கடலையளவுகளாயத்திட்திடி கொண்டு
ஒரு புதுச் சட்டியிற் கோடிக்கு கொண்டு ஒரு புதுச்
சட்டியிற் கொடுவேலி வோங்க ஒன்று ரெண்டாய்த்
தட்டிக் கொண்டு சட்டியில் பாதிடை தட்டின் வேரிகை
போட்டு வேரின் பேரில் தட்டின் லிங்கமது துண்டுகளைப்
பரப்பி கூடு லிங்கத்தின் பேரில் பாதி தட்டின் கொடு
வேலி வேரைப் போட்டு மேலை மூட வேண்டிய புதுச்
சட்டிக்கு வுளப்பகர்ந்துத் தீயிலையைத் தேய்த்து லிங்கம்
பரப்பியிருக்கிற சட்டிக்குள் துத்தியிலையுளப் பிறந்தடவில்
சட்டியை மேலே மூடிச் சந்து வாய் சீலை மண் செய்து
அடுப்பில் வைத்து பத்து நாழிகை யெரித்து அடுப்போடே
யாறவிட்டு ஆறின பிறகு சீலை மண்ணைக்கடிட்டி மேலே
சட்டியிற் பதங்கியிருக்கிற தசத்தைத் துணியாலே துடைத்து
வனிச்சாலரசம் வரும் ரெசத்தை துணியில் வடிகட்டி வைத்துக்
கொண்டால் ........ ரசமாகும் குழந்தைகள் முதல்
வெண்ணெயிற் கொடுக்கலா மிச்சாபத்தியம்.

**விளக்கம்;**

தேவையான அளவுக்கு லிங்கக் கட்டியை எடுத்து இதனைக் கடலை வித்துக்கள் அளவுக்கு உடைத்து எடுத்துக் கொள்ளவும்.

தேவையான அளவுக்குக் கொடி வேலி வேரை ஒன்று இரண்டாக இடித்துத் தூள் செய்து இந்தப் பட்டைகளை ஒரு புதுச் சட்டியில் பாதி அளவிற்குப் போட்டு இதன் மேல் செய்து வைத்திருக்கும் லிங்கக் கட்டிகளை அதன் மேல் பரப்பி, இதன் மேல் மீதியிருக்கும் கொடிவேலி வேர்ப்பட்டைகளைப் பரப்பவும்.இந்தச் சட்டியின் மேல் வேறொரு புதுச்சட்டியை மூடுவதற்கு முன்பு துத்தியிலையை அரைத்து மேல் மூடும் சட்டியில் உள்பக்கத்தில் பூசி மேற்குறிப்பிட்ட சட்டியின் மீது இதனை மூடி சீலை மண் செய்து அடுப்பில் வைத்து (10 நிமிடம்) வரை எரிய விட்டு ஆறிய பிறகு இதனைப் பிரித்து மேல் சட்டியின் உள்பக்கம் படிந்திருக்கும் இரசத்தை வழித்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும். குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை இந்த மருந்தை விகிதப்படி உட்கொண்டால் தீராத பழைய நோய்கள் குணமாகும். இந்த மருந்தைச் சாப்பிடும் பொழுது இச்சாப்பத்தியம் இருக்கவும்.

**குறிப்பு:**

மேற்குறிப்பிட்டிருக்கும் மருந்தைச் செய்யும் முறையைப் பற்றியும், மருந்து வகைகளைப் பற்றியும், இச்சுவடியில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் எந்தெந்த வியாதிகளுக்கு கொடுக்கப்படவேண்டும் என்பதைப்பற்றியும் மருந்து உட்கொள்ளும் அளவு, காலம், அனுமானம் இவைகளைப்பற்றி குறிப்பிடவில்லை. இருந்தாலும் மேற்குறிப்பிட்டிருக்கும் மருந்து வகைகளைப் பார்க்கும்போது, மருத்துவ அனுபவத்தில் மேற்குறிப்பிட்டிருக்கும் மருந்து கீழ்க்கண்ட வியாதிகளுக்குக் கொடுக்கலாம். இந்த மருந்தில் லிங்கமும் கொடிவேலிவேர் இவை இரண்டும் சேர்ந்துள்ள காரணத்தினால் கீழ்க்கண்ட வியாதிகளுக்குக் குறிப்பிட்ட அளவிற்குக் கொடுக்கவும்.

1. சன்னிதோஷம்
2. சகல சுரத்திற்கும்
3. குன்மம்
4. மூட்டு வாதம்
5. வாத சூலை
6. குசிக வாய்வு

**உட்கொள்ளும் அளவு:**

ஒரு நாளைக்கு ஒரு வேளை வீதம் 130 மில்லி கிராம் எடை

**காலம்:**

7 நாட்கள் கொடுக்கவும்.

**அனுபானம்;**

தேன், இஞ்சிச் சாற்றில் கலந்து கொடுக்கவும்.

**பத்தியம்;**

இச்சா பத்தியம்.

**சுவடி மருந்து முறை; 22**

## லிங்கக் கட்டு மருந்து செய்யும் முறையும் அதன் உபயோகமும்

கற்பூரம் கூட சாமிபிராணி கூட குமட்டு பியில் முதலாவது சாமிபிறாணியைப் போட்டு அரைத்துக் கொண்டு சூடனை சேர்த்தரைத்து நல்ல மெழுகு பதமாயரைத் தெடுத்துக் கொண்டு சிறு துண்டு துணிகளிற்றடவி ஒரு பலலிங்கக்கட்டிக்கு துண்டுத்துணி களில் ஒரு துண்டைச் சுற்றி விணைக்கிறகொழுந்தினால் ரசம் நன்றாயிருவி கூட்டும் லிங்கத்தைமுலைப்பாலாவது தேனாலாவது இங்கும் சுரசமாவது காஷாயங்களிலாவது

இந்த அனுபான விசேஷங்களின் கொடுத்தால் சுரங்கள் ஜன்னிகள் முதலான தெல்லாந் தீரும்.

**விளக்கம்:**

சாதிலிங்கம் என்பது ஒரு விஷத் தன்மையுள்ள மருந்து ஆகும். அக்காலத்துச் சித்தர்கள் "நவபாஷாணம்" என்று அழைத்து வந்தவற்றுள் இதுவும் ஒன்றாகும். இது ரச சம்பந்தப்பட்ட மருந்துக்கட்டி ஆகும். இது சிவந்த நிறமாக இருக்கும். இந்த மருந்தினை அதிகமாகச் சித்த வைத்திய மருந்துகள் செய்ய

உபயோகப்படுத்துவார்கள். இந்த மருந்தினைச் செந்தூரமாகவும், பற்பமாகவும், மெழுகு வகையாகவும், தயார் செய்யலாம். இந்த சாதிலிங்கத்தின் குணம் அதன் வீரியத்தன்மை, அது செயல்படும் விதம், அதன் சக்தி ஆகியவை ஒரு கட்டுக்குள் இருக்குமாறு செய்து பயன்படுத்தி வந்து இருக்கின்றார்கள். இப்படித் தயார் செய்யும் முறையும் உபயோகம் கீழே விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

பத்துக் கிராம் எடையளவு லிங்கத்தை ஒரு மண் ஓட்டில் வைத்து முலைப்பால் எலுமிச்சம்பழச்சாறு, மாவிளங்கம்பழச்சாறு, இஞ்சிச்சாறு, தேன் இவைகளில் வகைக்கு மூன்று நேரம் சொட்டுச் சொட்டாக விட்டுச் சுருக்கிக் கடுத்து ஐந்து கிராம் சூடத்தையும் ஐந்து கிராம் சாம்பிராணியையும் இவை இரண்டையும் மெழுகு போல் அரைத்து இதைப் பத்துச் சம பாகங்களாகச் செய்து ஒவ்வொரு பாகத்தையும் ஒரு சிறு துணியில் தடவி மேற் குறிப்பிட்ட லிங்கக் கட்டினை இந்தத் துணியில் சுற்றித் தீயில் கொளுத்தி இந்தக் கரியெல்லாம் சுரண்டி பத்திரமாக ஒரு தூய்மையான பாட்டிலில் வைத்துக்கொள்ளவும்,

**உட்கொள்ளும் அளவு:**

100 மில்லி கிராம் வீதம் ஒரு நாளைக்கு ஒரு வேளை வீதம் பத்து நாட்களுக்குச் சாப்பிட்டு வரவும்.

**தீரும் வியாதிகள்:**

சுரங்கள், ஜன்னிகள், சூலை, வயிற்றுவலி, குன்மம், சோகை, நெஞ்சடைப்பு, வாய்வு, பித்தபாண்டு ஆகியவை தீரும்.

**அனுபானம்:**

இந்த மருந்தினை மேற்சொன்ன விகிதப்படி எடுத்துத் தேனில் கலந்து சாப்பிட்டால் வாய்வு சம்மந்தப் பட்ட வியாதிகள் தீரும்.

1) இஞ்சிச் சாற்றில் கலந்து சாப்பிட்டால் நெஞ்சடைப்பு, வயிற்று வலி பொருமல் தீரும்

2) இஞ்சிச் சாற்றில் கலந்து சாப்பிட்டால் நெஞ்சடைப்பு, திரிகடுகு சூரணத்தில் கலந்து சாப்பிட்டால் சன்னிசுரம் நிவர்த்தியாகும்.

3) கொடிவேலி கிஷாயத்தில் கலந்து சாப்பிட்டால் விஷபாகம் வயிற்றுவலி, குன்மம், சோகை, சூலை, பித்தபாண்டு இவைகள் நிவர்த்தியாகும்.

**பத்தியம்;**

இச்சாபத்தியம். (புளி, உப்பு, புகையிலை, கரப்பான், வாய்வு பதார்த்தம் நீக்கவும்.

**குறிப்பு:**

மேற்சொன்ன மருந்தினைக் கலந்து முலைப்பாலில் கலந்து சாப்பிடலாம். இந்த கூட்டுவகை மருந்தினை 100 ஆண்டு காலம் வரை வைத்திருந்து உபயோகிக்கலாம்.

**கீழ்க்கண்ட முறையிலும் லிங்கத்தைக் கட்டலாம்**

**குறிப்பு:**

பத்துக் கிராம் எடை லிங்கத்தை ஒரு மண் ஓட்டில் வைத்து, இதனை அடுப்பில் வைத்து ஒரு லிட்டர் ஈசுர மூலிச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டுச் சுருக்கிக் கொடுக்கவும். பிறகு செங்காரத்தைப் பொரித்து இதனை ஈசுர மூலிச்சாற்றில் அரைத்து மேற்படிசுருக்கிக் கொடுத்த லிங்கத்தின் மீது பூசி கவசம் செய்து மண் ஓட்டில் வைத்து மூடிப்போட்டு ஏழு சீலை மண் செய்து குக்குபுடம் போட்டால் கட்டு ஆகும்.

**சுவடி மருந்து முறை: 23**

## ரசக்கற்பூரக்கட்டு சவுக்காரலிங்கம்

லிங்கமலைக்கு நெல்லிக்காய் கெந்தகமங்ககரண்டியில்
கெந்தகத்தையுருக்கி லிங்கக்கட்டியையுருக்கிற
கெந்தகத்

தில் ஒருச்சாமம் பிரட்டினால் கட்டு கட்டனுப்பானை
விசேஷங்களில் கொடுத்தால் வியாதிகள் தீரும்
பூமரங்க ஆலம்பால் நாலு சாமஞ்சுருக்குக்
கொடுத்தால்
கட்டும், சுரஞ்சன்னி வாய்வு முதலான றோகங்
களுக்கனுப்பானு
விசேஷங்களில் கொடுக்கத் தீரும். தீரேககூற்றி ........
சவுக்காரத்தை குளியம்மியிற் போட்டு வேப்பெண்ணை
விட்டு ஒரு

**விளக்கம் முதல் முறை;**

லிங்கம், நெல்லிக்காய், கந்தகம், இந்த இரண்டையும் சமன் எடை எடுத்துக்கொண்டு கந்தகத்தை மட்டும் ஒரு இரும்புக் கரண்டியில் போட்டு அடுப்பில் வைத்து உருக்கிக் கொண்டு இதில் லிங்கக்கட்டியைப் போட்டு மூன்று மணி நேரம் பிரட்டினால் ரசக் கற்பூரக்கட்டு ஆகும்.

**இரண்டாவது முறை:**

மேற்சொன்ன கந்தகத்தை ஒரு மண் ஓட்டில் வைத்து அடுப்பில் இதனை உருக்கி இதில் லிங்கக்கட்டியைப் போட்டு ஆலம்பாலை சிறுகச் சிறுக விட்டு பன்னிரண்டு (12) மணி நேரம் சுருக்குக் கொடுத்தால் ரசக் கற்பூரக் கட்டு ஆகும்.

**மூன்றாவது முறை:**

பத்து கிராம் ரசக்கற்பூரத்தை மண் ஓட்டில் வைத்து முலைப்பால், பால் நண்டு இடித்தச் சாறு, முசு முசுக்கை இலைச்சாறு இவைகளை வகைக்கு ஆறு (6) மணி நேரம் சுருக்குக்கொடுத்தால் ரசக்கற்பூரக் கட்டு ஆகும்.

**உட்கொள்ளும் அளவு:**

நூறு மில்லி கிராம் அல்லது இருநூறு மில்லி கிராம்.

**காலம்:**

ஐந்து (5) நாட்கள் மட்டும் சாப்பிடவும்.

**அனுபானம்;**

இஞ்சிச்சாறு அல்லது தேன் கலந்து சாப்பிடவும்.

**தீரும் வியாதிகள்:**

சன்னிசுரம், வாய்வு, நாவறட்சி, குன்மம், மலச்சிக்கல் இவை தீரும்.

**சுவடி மருந்து முறை: 24**

## இஃதுபிரமுனி அருளிச்செய்த கருக்கடை சூத்திரம்

சீரருவான சோதி சின்மயமான சோதி ஆரணி கொன்றைசூடி
யரவணிந்தவனைப் போற்றி வாரணிரிஷிகள் பாதம் வணங்கியே
வயித்திய நூலைக் காரணமாகப் பாடக் கணபதி காப்புத்தானே
தாவான வயித்தியத் விருபத்தி நூறு சாற்றி னேனதைக் குறுக
கிப்பத்து நூறு தேனான விதைக் குறுக்கி முந்நூற்றறுபது
திறங்டியே கருசெல்லாந் திறந்து சொன்னேன் வானான
கருவையெல்லாம் வெளியாய்க் பானான மானிடர்கள்
பிழைக்க வேண்டிப் பரிபாஷை யில்லாம் பாடினேனே (உ)

பாடியதேரெந் நுலைப் பதினெண்பெரும் பார்த்திட்டு
மனமகிழ்ந்தார் சித்தரெல்லாம் பாடியதோர்
வாதமொடு வயித்தியம் நன்யாப் பாடினார் கருக்
குருவும் வெளியாய்ச் சொல்லி தேடியே சித்தரெல்லா
மெய்ச்சிக் கொண்டு செப்பினார் பிரமரிஷி ஆகையா
லேயூடியதோர் கருவெல்லாம் வெளியதாக உரைத்திட்டா
ரென்று சித்த ரொளித்திட்டாரே (ரு)
ஒளித்திட்ட சாஸ்திரத்தை வாங்கியாலும் உலகிலுள்ளோர்
மயங்காமல் வெளிறிற் போட்டேன் அளித்திட்ட அழும்

பருக்கு இந்நூ வியார் ஆகருத சிஷருக்கு யிந்நூ வியார் களித்திடிடு மனதிலே கசடில்லாமல் கவடற்றி சிஷருக்குக் கை முறையைக் காட்டு பளித்திட்டுப் பேசாமல் சாத்திரத்தைப் பார்த்து பதறா தேகை முறை செய் முறையும் பாரே (று)
முறையோடே பார்த்தாக்கா லெல்லாஞ்சித்தி முறைதப்பா செய்திடிலோ மோசம் மோசம் முறையோடே லேகியங்கள் தயிலங்கறகம் மொழுகோடு களங்கு மாத்திரை செந்தூரம் நிறையான நலவோக பாஷ்ணங்கள் நீற்றனமும் உருக்கினமும் நிறைத்திட்டேனே. (று)

நிறைத்திட்டார் தெட்சணாமூர்த்தி பால் நிகரில்லா வயித்தி யத்தி லிரண்டுலட்சம் உரைத்திட்டால் செந்கூ முந்நூர் சொன் ளார் உத்தமனே வாத முதல் வயித்தியந் தோறும் அறைத்திட் டார் வயித்தியத்திலாறு நூறு அப்பனே வெளிதிறந்து சொல்லி விட்டார் கதைத்திட்ட வயித்தியத்துச் செந்நூலாதி கண்ணாடி முகம் பார்த்தாற் போலே காணே. (சா)

காணப்பா நோயாளி தாதுமார்க்கம் கண் பார்த்து முகம் பயத்து கைப்பாரு தோணப்பாதத்துவ நூ லாய்ந்துப்பாரு சொல்லுடம் பிலெழுபத் தீராயிர நரம்பு ஆணப்பா நரம் பெல்லாம் நாடியோடும் உத்தமனே யுயிர் நிலையை யூனிப்பாரு தேனென்ற வால்மீகர் நாடி சூத்திரம் தெளிவாக வெழு பத்திரண்டும் பாரே.

பாரே நீ முந்நூல் தாவாயிரத்தில் பாடினேன் பசலைக்கும் நாடிதோண பாரே நீல கொங்கணர் தத்துவ நூல் பாங்கான சட்டைமுனை நூறும் பாரு பாரே நீ திருமூலர் நூலும் பாரு பாத்திட்டால் பல நாலு மதிலே தோணும் ஆரே நீ நானென்ற ஆணுவத்தை நீக்கி ஆங்காரக் கோபத்கு அடித்துத் தள்ளே. (அ)

தள்ளுவது பொய்கொலைகட் களவுகாயம் சண்டா லிங்க குருத்து
ரோகம் சேர்த்துத்தள்ளு விள்ளாதே வெளிகுவிட்டு யோகம்பகு வேதாந்தசற்குருவை நித்தம் பூசித் தள்ளாதேவயித்யந்தால்

ஒறித்தார் சித்தர் துள்ளாதேவாத மென்ன வயித்தியந்தா
வென்ன சொல்லாத முப்பூவின் குருவிதாமே (சா)

குருவென்ன உவர்ச்சரம் உவர்ப்பூ வென்று கூறினார் பூநீறு
முப்பூ வென்றுந்த தருவென்ன ஆகாசப் பருதியென்றும்
சந்திரணோடிந்து வென்றுஞ் சாற்றினார்கள் பருவமென்னமார்கழி
தையுமாசி பனிப்பெய்யுங் காலமப்போ பருவமாகி பொரு
வெள்ள பூமியிட நாமாகிப் பூப்போலே வளர்ந்துவூபூநீருச்சே
பூவான நீரின் மகிமைதன்னை புகழுடனே கண்டவர்க்கு
எல்லாஞ்சித்தி பூவான வாதத்துக் காதியாச்சு புகலு கிறேன்
வெள்ளைக்க பிரமகற்பம் ஆவென்னப் பாறையுப்பு
மூன்றுஞ்சேரில் அரகரா முப்பூவா மறிந்து பாரு தெனென்ன
சவுக்கார வழலையென்று செப்பினார் கருமறைவாச் சித்தர்
தானே. (யக)

தானென்ற முப்பூவின் முறையைக்கேளு சாற்றினார் கும்பமுனி
பூரணத்தில் வனென்ற பூநீர் வெள்ளைக்கல்லுப்பும் விளைவிட
முஞ்சுத்திமுறை விளம்பினார் யார் கானெற்ற பங்குனி மாதம்
பார்த்தால் காற்றில்லாக் கதிர் போல வளர்ந்திருக்கும்
பானென்ற மண்படா தெடுத்து வந்து படிநாலு அளந்து
ஒரு பாண்டத் திட்டே. (ய உ)

**விளக்கம்**:

அக்காலத்துச் சித்தர்கள் அவர்களது சிஷ்யர்களுக்கு அவர்கள் ............... கற்றறிந்த உண்மைகளையும், சில நூல்களின் வாயிலாகத் தாம் தெரிந்து கொண்டவற்றையும், மிக மிக ரகசியமாகச் சொல்லிக் கொடுத்து இருக்கின்றார்கள் என்பதை இந்தப் பாடல்கள் மூலமாக நாம் அறிகின்றோம். மேலும் சித்தர்கள் தமக்குத் தெரிந்த ரகசியங்களை மற்றவர்கள் எளிதில் தெரிந்து கொள்ளக்கூடாது என்று நினைத்துத் தங்களின் சிஷ்யர்களுக்குப் பாடல் நடைவாயிலாகச் சொல்லிக் கொடுத்தும் வந்து இருக்கின்றார்கள்.

சித்தர்கள் தங்களின் வைத்திய அனுபவத்தையும் அவர்களுக்குத் தெரிந்த மருந்து வகைகள் பற்றியும் மிகக் கடுமையான விஷ மருந்தை எப்படிச் சுத்தி செய்வது என்பதைப்

பற்றியும், சில மருந்துகளின் குணம், வீரியம் தன்மை ஆகியவைகள் வீணாகாது எப்படி வைத்திருப்பது என்பது பற்றியும் கட்டுமுறைகளையும், சீக்கிரம் சில மருந்துகளைச் செய்ய வேண்டும் என்பதற்காகப் பூநீர் செய்யும் முறைகளையும் அதன் ரகசியத்தையும் சொல்லி இருக்கின்றார்கள்.

உலகத்தில் அவர்கள் கற்றுத் தெரிந்த அனுபவங்களையும் எத்தனை வகை மருந்துகள் செய்யும் முறைகள் உள்ளன என்று கூட மற்றவர்களுக்குத் தெரியாது கற்றுக் கொடுத்து இருப்பதுடன் நோயாளிகளை எப்படிப் பரிசோதனை செய்வது, நாடி எப்படிப் பார்க்க வேண்டும், எந்த நேரத்தில் நாடியின் குறி குணங்கள் மாறும் என்பதைப் பற்றியும், மனிதனின் பிறப்பில் இருந்து இறக்கும் வரையுள்ள நாடி வகைகளை மிகவும் நூதனமான முறைகளில் சொல்லிக் கொடுத்து இருக்கிறார்கள்.

மேலும் மிக முக்கியமாக எந்த மாதத்தில் செயநீர் (பூநீர்) உப்புக் கரைந்த மணல் பகுதிகளில் அதிகமாகக் கிடைக்கும் என்பதையும் வியாதிகள் இல்லாது நெடுங்காலம் எப்படி உயிர் வாழ்வது என்பதையும், வியாதிகள் தங்களைத் தாக்காவண்ணம் எப்படித் தற்காத்துக் கொள்வது என்பதைப் பற்றியும் மிக மிக நன்றாகவும் ஆழ்ந்தும் ஆராய்ந்து அவற்றைத் தங்களின் சிஷ்யர்களுக்குச் சொல்லிக் கொடுத்து இருக்கிறார்கள்.

மனித வர்க்கம் கடவுள் என்ற சொற்களைப் பயன்படுத்தி அக்காலத்தில் சித்தர்கள் மருந்துகள் செய்ய ஆரம்பித்துக் கடவுளைச் சாட்சியாக வைத்துப் புடம் வைக்க வேண்டிக் கொண்டு இருந்திருக்கிறார்கள். இப்படி அவர்கள் செய்யும் தொழிலை விடக் கடவுளை நினைத்து, அக்காலத்துச் சித்தர்கள் அதிக நம்பிக்கையுடனும், புகழுடனும் இருந்து வாழ்ந்து இருக்கின்றார்கள் என்பது நமக்கு ஆச்சரியம் வரும் அளவிற்கு உணவு வகைகளிலும் கட்டுப்பாட்டுடன் இருந்து இருக்கின்றார்கள். இவ்வளவு விஷயங்களையும் மிக மிக இரகசியமாகச் சொல்லிக் கொடுத்து இருக்கின்றார்கள் என்பதுதான் இந்தப் பாடலின் கருத்து ஆகும். இருப்பினும் இந்தப் பாடல் குறிப்பு மருத்துவ அறிஞர்களுக்கு மிக அவசியமான பகுதியாகும்.

**சுவடி மருந்து முறை: 25**

## வாதத்திற்குத் தயிலம்
## வாதம் எண்பதுக்குந் தயிலம்

எருக்கிச்சம்பூச் சாருபடி-இ காயச்சாரு படி-ரு
யிலைச்சாரு படி-இ கம்புச்சாரு படி வேர்விதச்
சாருபடி-இ வேப்பெண்ணை படி-இ யிது
வெல்லாங் கலந்து சித்தரத்தை பேரரத்தை சுக்கு
வசம்பு வெள்ளுள்ளி யிந்துப்பு பெருங்காயம் யாவை
வகைக்கு ரு வீதங்கூட்டி சாரு விட்டரைத்துக்
கலக்குக் காச்சி மெழுகு பதத்தில் வடித்து
உள்ளுக்கு மூன்றுனாள் கொடுத்து ஆறுனாளாய்
பத்தியங்காத்து மறுபடி எட்டுனாளைக்
கொருகரந் தலை மேலெங்குந் தேய்த்துக்
கண்ணில் விழாமல் அரைத்துத் தேய்த்து முழுகவும்
யெண்பது வாதமுந் தீரும். நல்லெண்ணை படி-க
மெருதிங்கிழங்கு-ய தண்ணீர்-யசா ஒரு படி
யாயிரக்கி கொண்டு அதிமதுரம் கோஷ்டம்
இலாமிச்சம் வேர் மிளகு சீரகம் இஞ்சி வெள்ளைபூடு
மரமஞ்சள் கஸ்தூரி மஞ்சள் கருஞ்சீரகம் கார்
கோலரிசீரு சா ஒரு படி பசுவின் பாலில் மேற்படி
மருந்துகளை மை போலரைத்து யெண்ணையிர் கலக்கி
கிஷாயத்தையும் விட்டு காச்சி மணற்பருவத்தில்
தயிலமிரக்கி கொள்ளவும் தயிலத்தை நனுறுநாளைக்
கொருதடவை முழுகவுசிய நாய் பாசிப்பயறு
அரைத்து தேய்த்து கண்சலு செண்டுசியோடல்
இரைச்சலிது முதலான வியாதியெல்லாந் தீரும்.

விளக்கம்:

வாதம் என்பது மிகக் கொடுமையான வியாதிதான். இந்த வியாதி வரக் காரணம், வாதம் எத்தனை வகைப்படும். ஆனால் தற்காலத்தில் நடைமுறையில் கண்டு பிடிக்கப்பட்ட வாத

நோய்களில் சில குறிகுணங்களைப் பற்றியும் மிக விளக்கமாகக கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இதற்குச் சிகிச்சை செய்ய வேண்டிய மருந்துகளும் செய்யும் முறையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

வாதநோய் என்பது ஒரு வாய்வு வகைகளில் இதுவும் ஒன்றுதான். ஆனால் வாய்வு சில சமயம் நமது உடலில் தங்கிக் கொண்டு சில தினங்களில் தானாகச் சென்று விடும். சில வாய்வுகள் தங்கிய இடத்தில் நிரந்தரமாக இருக்கும். ஆனால் இந்த வாத நோய்களிள் வாய்வுகள் அதிகரித்து மனிதன் உடம்பில் இருக்கும் அனைத்து நரம்புத் தசைகளுக்கும் பரவி வாய்வு அதிகரித்து வலி, அசதி உடல் முழுவதும் இந்த வாத நோயைப் பரவச் செய்கிறது. இந்த வாத நோய்களில் பல வகையுண்டு. அதில் சிலவற்றின் குறி குணங்களுடன் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1) மனிதன் உடம்பில் பல இடங்களில் துடித்தடங்கினால் இதற்கு துடிவாதம் என்று பெயர்.

2) உடல் வெதும்பி, வளைந்து, கிறுகிறுத்து கடும் நாவறண்டால் இதற்கு நடுக்கு வாதம் என்று பெயர்.

3) ஒரு விரை வீங்கி வலித்து மேல் நோக்கி ஏறினால் இதற்கு அஷ்டாவாதம் என்று பெயர்.

4) சந்துக்களில் விடாமல் வலித்து, உளைந்து இது மாலை நேரத்தில் அதிகமான அளவிற்கு இருந்து, உடல் மெலிந்து தாது கெட்டால் இதனைச் சந்து வாதம் என்று சொல்லலாம்.

5) தேகம் மெலிந்து உளைந்து பல இடங்களில் ஓடி குத்தி, பலம் குறைந்து நாவும் பல்லும் வறண்டால் ஓடு வாதம் என்று பெயர்.

6) மனிதன் தோள் வீங்கிக் கண்டம், பிடரி வலித்து எடுத்தால் தோல் வாதம் என்று பெயர்.

7) மனிதன் கழுத்தைத் திருப்பிப் பார்க்க முடியாமல் பிடித்துக் கொண்டு இருந்தால் இதற்குக் கழுத்து வாதம் என்று பெயர்.

8) மனிதன் உடம்பில் ஒரு பக்கமாகக் கையும், காலும் விளங்காது இருந்தால் இதற்குப் பக்கவாதம் என்று பெயர்.

9) மனிதன் உடம்பில் இரவும் பகலும் தொடர்ந்து சிரசு வலித்துக்கொண்டு இருந்தால் இதற்குச் சிரசு வாதம் என்று பெயர்.

10) மனிதன் வாயினால் திருத்தமாகப் பேசமுடியாது நாவை இழுத்துக் கொண்டால் இதற்குத் தம்பனவாதம் என்று பெயர்.

11) மனிதன் பல்லசைந்து அதிகம் வலித்துக் கொண்டு இருந்தால் இதற்குத் தந்தவாதம் என்று பெயர்.

12) மனிதனுடைய இரண்டு காதுகள் சரியாகக் கேட்காவிட்டால் இதற்குக் கரணிவாதம் என்று பெயர்.

13) மனிதனுடைய கைவிரல்கள் விறைத்து எதையும் பிடிக்க முடியாமல் இருந்தால் இதற்கு அங்குவாதம் என்று பெயர்.

14) மனிதன் முன் கை இரண்டும் அதிகம் வீங்கி வலித்தால் இதற்கு முன்கை வாதம் என்று பெயர்.

15) மனிதனுடைய முகம் ஊதிக் கடுத்தால் இதற்கு வதனவாதம் என்று பெயர்.

16) மனிதனுடைய இடுப்பு நைந்து கழுத்து குனிய நிமிர முடியாதிருந்தால் இதற்கு இடுப்பு வாதம் என்று பெயர்.

17) மனிதனுடைய ஆசனத்துளை நொந்து கடத்தால் உருளை வாதம் என்று பெயர்.

18) மனிதனுடைய துடை கடுத்து நடக்க முடியாமல் இருந்தால் இதற்குத் துடை வாதம் என்று பெயர்.

19) மனிதனின் முழங்கால் வீங்கிக் கடுத்தால் இதற்கு முழங்கால் வாதம் என்று பெயர்.

20) மனிதனின் கெண்டைக்கால் கடுத்து வலித்தால் இதனைக் கெண்டை வாதம் என்று சொல்வர்.

21) மனிதனின் குதி வீங்கிக் கடுத்தால் இதனைக் குதிவாதம் என்று கூறுவர்.

22) மனிதன் தன் அலகு கிட்டி வியர்த்துப் பேச முடியாமல் இருந்தால் இதனை வாய் வாதம் என்று கூறுவர்.

23) மனிதனின் கை, கால்களைச் சுருக்கி வாங்கி இழுத்துக் கடித்தால் இதனை வரணவாதம் என்று கூறுவர்.

24) மனிதனின் முதுகுத் தண்டு பெருமித் தடித்தால் இதனைத் தண்டுவாதம் என்று சொல்வர்.

25) மனிதன் தன் தேகத்தை அடிக்கடி வில்போல் வளைத்து வியர்த்து நாக்குழறிப் பற்கிட்டி மேல் மூச்சு விட்டால் இதற்குத் தனுவாதம் என்று பெயர்.

26) மனிதன் கொஞ்ச தூரம் கூட நடக்க முடியாமலும் சாப்பிட்ட உணவு ஜீரணம் ஆகாது. ஏப்பம் அடிக்கடி வந்து கொண்டு இருந்தால் இதனை அஜீரண வாதம் என்று கூறுவர்.

27) மனிதனின் இரு கால்களிலும் இரத்தம் கட்டி வலித்துக் கொண்டு இருந்தால் இதனை சுரோணி வாதம் என்று சொல்வர்.

28) மனிதன் உடம்பில் உதிரத்தின் மேல் நரம்பு பசுமையாய்த் தோன்றி மூலாக்கினி மந்தித்து உடல் வெறுத்தால் கபவாதம் என்று இதனைச் சொல்லலாம்.

29) மனித குடல் புரண்டு குமுறி இரைத்து வலித்து மந்தித்துப் பரந்தோடி வலித்தால் காதுளைத்தால் இதனைக் குடல் வாதம் என்பர்.

இத்தகைய வாதத்தில் இன்னும் பல வகைகள் உண்டு. இவற்றின் நிவர்த்திக்கு மருந்தும், மருந்து செய்யும் முறைகளைப் பற்றி பல நூல்களில் வெளிவந்திருக்கின்றன. ஆனால் அந்த மருந்து வகைகளிலும், இந்தச் சுவடிகளில் குறிப்பிட்டு இருக்கும் மருந்து வகைகளிலும் சில மாற்றங்கள் உள்ளன. பொதுவாக வாத ரோகங்களுக்குச் செய்யப்படும் மருந்து வகைகளில் எருக்கன் பால்

சேர்க்கப்பட்டுள்ளது. இந்த முறைகளில் எருக்கன் செடியின் சமூலத்தை இடித்துச் சாறு எடுத்து இந்த மருந்துகளில் சேர்க்கப்பட வேண்டும் என இந்தச் சுவடியின் முறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மருந்துகளின் முறையைப் பற்றிக் கீழே விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

தேவையான மருந்துகளின் விபரம்:

| | |
|---|---|
| எருக்கன் செடியின் பூவின் சாறு | 1 லிட்டர் |
| எருக்கன் செடியின் காய்ச்சாறு | 1 ,, |
| எருக்கன் இலைச்சாறு | 1 ,, |
| கம்புச்சாறு | 1 ,, |
| கொடிவேலி வேர்ச்சாறு | 1 ,, |
| பேரரத்தை | 100 கிராம் |
| சித்தரத்தை | 100 ,, |
| சுக்கு | 100 ,, |
| வசம்பு | 100 ,, |
| வெள்ளுள்ளி (பூண்டு) | 100 ,, |
| இந்துப்பு | 100 ,, |
| பெருங்காயம் | 100 ,, |
| வேப்ப எண்ணெய் | 500 மி. லி. |

இந்த வகைகளை மேற்சொன்ன சாற்றை விட்டு நன்றாக அரைத்து மீதி உள்ள இலைச்சாறு வேப்ப எண்ணெய் இவைகளுடன் கலந்து பெரிய பானையில் ஊற்றி அடுப்பில் வைத்து மெழுகு பதம் வரும் வரை நன்கு காய்ச்சி இதனைத் துணி கொண்டு வடிகட்டி சுத்தமான பாட்டிலில் வைத்துக் கொள்ளவும்.

**உட்கொள்ளும் அளவு:**

ஒரு நாளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் மூன்று நாட்கள் கொடுக்கவும். பிறகு ஆறாம் நாள் பத்தியத்தை நிறுத்திவிட்டு மறுபடியும் எட்டாம் நாள் கொடுக்கவும். இப்படி ஆறு தடவை உள்ளுக்குக் கொடுத்து விட்டு இந்த மருந்தைத் தலையில் தேய்த்துக் குளிக்கவும். மேலும் இந்த எண்ணெய் மருந்தைத்

தலைக்குத் தேய்க்கும் பொழுது கண்களில் படாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

**தீரும் வியாதிகள்**:

எண்பது வகை வாதமும் நிவர்த்தியாகும்.

**பத்தியம்**;

உப்பு, புளி, வாய்வு, உணவுப் பண்டங்கள் நீக்கவும்.

**குறிப்பு**:

அனைத்து வகை வாத நோய்களின் நிவர்த்திக்கு மேற்கண்ட மருந்துகளை சுத்தம் செய்து குறிப்பிட்ட அளவுகளை எடுத்து நன்றாகக் காயவைத்தும் இலைச்சாறு வகைகளைச் சுத்தமான செடிகளின் இலை, காய், பூ இவைகள் அனைத்தையும் அளவுப்படி சேர்த்துக் குறிப்பிட்ட முறைகளின்படி மருந்தைத் தயார் செய்யவும்.

## காது குத்தல் வலியுடன் செவிடு ரோகம் காது இரைச்சல் இவைகள் நிவர்த்திக்கு

மேற்கண்ட வியாதிகள் வாய்வு சம்மந்தப்பட்ட வியாதிகள் ஆகும். இவைகளின் நிவர்த்திக்குக் கீழ்க்கண்ட மருந்துகளும், செய்யும் முறையும் விவரமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

**தேவையான மருந்துகளின் விபரம்**:

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | 1 லிட்டர் |
| மெருதிங்கிழங்குச்சாறு | 250 கிராம் |
| தண்ணீர்விட்டான் கிழங்கு | 250 ,, |
| அதிமதுரம் | 50 ,, |
| கோஷ்டம் | 50 ,, |
| விலாமிச்சம்வேர் | 50 ,, |
| மிளகு | 50 ,, |
| சீரகம் | 50 ,, |

| | |
|---|---|
| இஞ்சிச்சாறு | 250 மில்லி |
| வெள்ளைப்பூண்டு | 100 கிராம் |
| மரமஞ்சள் | 50 ,, |
| கஸ்தூரி மஞ்சள் | 50 ,, |
| கருஞ்சீரகம் | 50 ,, |
| கார்கோலயரிசி | 50 ,, |
| பசுவின் பால் | 1 லிட்டர் |

மேற்சொன்ன மருந்து வகைகளை விகிதப்படி எடுத்து நன்றாகக் காயவைத்துப் பிறகு இவைகளையெல்லாம் பசும்பால் விட்டு நன்றாக அரைத்துக்கொண்டு இத்துடன் மெருதின் கிழங்கின் கஷாயத்தை எடுத்து இத்துடன் நல்லெண்ணெய் ஊற்றி நன்றாகக் கலக்கிப் பாலில் அரைத்து வைத்திருக்கும் மருந்துக் கலவையையும் சேர்த்து ஒரு பானையில் ஊற்றி அடுப்பில் மெழுகு பதம் வரும் வரை நன்கு காய்ச்சி வடிகட்டி எடுத்துக்கொண்டு நான்கு நாளைக்கு ஒரு முறை தலை முழுகி வந்தால் மேற்சொன்ன வியாதிகள் நிவர்த்தியாகும். தலைக்கு மேற்படி எண்ணெய் தேய்த்துத் தலை முழுகும்போது எண்ணெய் போக பாசிப்பயறு மாவை உபயோகிக்கவும்.

**பத்தியம்**:

குளிர்ச்சியான உணவு வகைகளை நீக்கவும்.

**காதில் வரும் சீழ் நிற்க எண்ணெய் மருந்து**:

20 மில்லி வேப்ப எண்ணெயில் வசம்பு, வெள்ளைப் பூண்டு, பெருங்காயம் வகைக்கு 35 கிராம் எடை எடுத்துக் கொண்டு இவைகளை நன்றாக இடித்துச் சூரணம் செய்து கொண்டு ஒரு சட்டியில் வேப்ப எண்ணெயை ஊற்றி இதில் மேற்படி சூரணத்தைப் போட்டுக் கலக்கி அடுப்பில் வைத்து எரித்து வடிகட்டிக்கொண்டு காதுகளில் தினம் 5 சொட்டு வீதம் விட்டு வந்தால் காது சீழ் நிற்கும். இப்படி ஏழு நாட்கள் போடவும்.

**காது மந்தம் தீர இஞ்சிச்சாறு:**

30 கிராம் எடைக்கு இஞ்சிச் சாற்றை எடுத்து இத்துடன் 15 கிராம் எடைக்கு குதிரை லத்தி கரைத்த சாற்றைக் கலந்து தினம் மூன்று சொட்டு வீதம் காதுகளில் போட்டு வந்தால் காது மந்தம் தீரும்.

**காதுக்குள் இருக்கும் புழு விழ:**

முருங்கையிலைச்சாறு, நல்லெண்ணெய் இவைகளை வகைக்கு 25 மில்லி எடுத்துக்கொண்டு சட்டியில் ஊற்றி அடுப்பில் வைத்து எண்ணெய் பதம் வரும் வரை காய்ச்சி 5 சொட்டு வீதம் காதில் ஊற்றி வந்தால் காது புழுகு தீரும்.

**சுவடி மருந்து செய்யும் முறை 26**

## கந்தக ரசாயணம் செய்யும் முறை

லிங்கதிலேருத் சீரு குற விரசமன்-க பரங்கிப்
பேட்டை-ரு நெல்லிக்காய்-க கெந்தகம் சாதிக்காய் பலம்-
க சாதிபத்திரி பலம்-க கிராம்பு பலம்-க சன்னில்
வெங்கப்பட்டை பலம்-க இலவங்கப்பத்திரி-க
சிறுநாகப்பூ கெந்தகமு மிரச முந் தவிர சரக்கெளால்லாம்
பொடிசெய்து வடிகட்டி வைத்துக்கொண்டு
எட்டு நெய்யை விட்டு கெந்தகத்தை
யரைத்துத் துணிக்குத் தடவி திரி செய்து
விளக்கிர கொழுத்தி தயிலமிரக்கி தயிலத்தினால்
இரசத்தை யெருச்சல மாது பிறகு இந்தச்
சூரணத்தை போலரைத்து உதையம் சாயந்திர
மிரண்டு போதுங் களச்சி காயளவு சாப்பிட்டால்
தீரும் வியாதி கிராணி கணிசம் நீரிழிவு

வயிற்றுவலி துஷ்ட்டானங்கள் மேகம் சூலைகள் முதலான வியாதி யெல்லாம் தீரும் இச்சாதி பத்தியமாகாது.

விளக்கம்:

தேவையான மருந்துகளின் விபரம்;

| | |
|---|---|
| ரசம் | 35 கிராம் |
| பரங்கிப்பட்டை | 35 ,, |
| சாதிக்காய் | 35 ,, |
| சாதிப்பத்திரி | 35 ,, |
| நெல்லிக்காய், கந்தகம் | 35 ,, |
| கிராம்பு | 35 ,, |
| சன்னலவங்கப்பட்டை | 35 ,, |
| இலவங்கப்பத்திரி | 35 ,, |
| சிறுநாகப்பூ | 35 ,, |

கந்தகம், ரசத்தைத் தவிர மற்ற மருந்து வகைகளைக் கல் உரலில் போட்டு நன்கு இடித்துப் பொடி செய்து இந்தப் பொடியைச் சீலை வடிகொண்டு வடிகட்டிய சூரணத்தைத் தயார் செய்து கொள்ளவும்.

கல்வத்தில் கந்தகத்தையும், ரசத்தையும் போட்டு நெய்யைக் கொண்டு நன்றாக அரைத்து ஒரு சிறு துணியில் தடவி விளக்குத் திரிமாதிரி செய்து இதனை விளக்கில் போட்டு எரிய விட்டால் தயிலம் மாதிரி இளகி வடியும். இந்தத் தயிலத்துடன் (ரசம்) போல் இருக்கும். இதனைச் சூரணத்தில் சீனாக்கற்கண்டு, தேன் இவைகளைச் சேர்த்து லேகியம் போல் அரைத்து ஒரு பாட்டிலில் வைத்துக் கொள்ளவும்.

**அளவு**:

ஒரு கழற்சிக்காயளவு (5 கிராம் எடை) வீதம் சாப்பிடவும்.

**பத்தியம்:**

இச்சாபத்தியம், புளி, உப்பு, கரப்பான் வகைப் பதார்த்தங்கள், வாய்வுப் பண்டங்களை நீக்கவும்.

**தீரும் வியாதிகள்:**

கிராணி, களிசம், நீரிழிவு, சூலை பதினெட்டு வகை தீரும்.

**இரண்டாவது முறை;**

| | |
|---|---|
| சுக்கு | 35 கிராம் |
| மிளகு | 35 ,, |
| திப்பிலி | 35 ,, |
| ஏலம் | 35 ,, |
| லவங்கப்பட்டை | 35 ,, |
| லவங்கப்பத்திரி | 35 ,, |
| சாதிக்காய் | 35 ,, |
| தாளிசபத்திரி | 35 ,, |
| சிறுநாகப்பூ | 35 ,, |
| விலாமிச்சம் வேர் | 35 ,, |
| ஓமம் | 35 ,, |
| சீரகம் | 35 ,, |
| குறுசாணி ஓமம் | 35 ,, |
| சித்தரத்தை | 35 ,, |
| திப்பிலிமூலம் | 35 ,, |
| பூலான்கிழங்கு | 35 ,, |
| ஆனைத்திப்பிலி | 35 ,, |
| கருஞ்சீரகம் | 35 ,, |
| குகைநீர் | 35 ,, |
| முந்திரி | 35 ,, |
| சந்தனம் | 35 ,, |
| தக்கோலம் | 35 ,, |
| அதிமதுரம் | 35 ,, |
| முத்துக்காசு | 35 ,, |

| | | |
|---|---|---|
| சடாமாஞ்சில் | 35 | ,, |
| மல்லி | 35 | ,, |
| பேரீச்சம்பழம் | 35 | ,, |
| கடுக்காய் | 35 | ,, |
| தான்றிக்காய் | 35 | ,, |
| நெல்லிக்காய் | 35 | ,, |
| சாதிபத்திரி | 35 | ,, |
| வெட்டிவேர் | 35 | ,, |
| குங்குமப்பூ | 35 | ,, |
| நிலப்பனைக்கிழங்கு | 35 | ,, |
| அசுவகெந்திக்கிழங்கு | 35 | ,, |
| நெருஞ்சி | 35 | ,, |
| நீர்முள்ளி | 35 | ,, |
| பூனைக்காலி விதை | 35 | ,, |
| பரங்கிப்பட்டை | 35 | ,, |
| சித்திரமூலம் | 35 | ,, |

இவைகள் அனைத்தையும் வகைக்கு 35 கிராம் எடுத்து இடித்துத்தூள் செய்து சூரணம் செய்துகொண்டு இதனைப் புட்டு அவிப்பது போல் அவித்துக் கொள்ள வேண்டும். பிறகு ஒரு சட்டியில் 500 கிராம் சர்க்கரையைக் கலந்து பாகு போல் வரும்போது சுத்தி செய்த 70 கிராம் கந்தகத்தூளைப் போட்டு கிண்டிக் கொண்டு பதம் வரும்போது மேல் செய்து வைத்திருக்கும் சூரணத்தைப் போட்டு நன்றாகக் கிண்டி தேன் விட்டுப் பிசைந்து ஒரு பாத்திரத்தில் வைத்து நெல் புடம் போட்டு வைத்துக்கொள்ளவும்.

**அளவு:**

5 கிராம் எடை வீதம் தினம் ஒரு வேளை சாப்பிடவும்.

**காலம்:**

48 நாட்கள் சாப்பிடவும் (ஒரு மண்டலம்)

பலதிரட்டு-11

**தீரும் வியாதிகள்:**

வாதம் எண்பது, பித்தம் நாற்பது, கிருச்சணம் ஆறு, சூலை பதினெட்டு, குன்மம், பாண்டுரோகம், விஷம், மேகம், அக்கினி இவைகள் தீரும்.

**சுவடி மருந்து முறை ; 27**

## வாயுவுக்கு வச்சிரவல்லி உருண்டை மருந்து;

திப்பிலி அரைபொடித்திச்சாதிக்காய் கிராம்பு சுவாசிக்
காய் திப்பிலி மூலம் கார்கோல ரிசி இந்துப்பு சுக்கு
மிளகு வெள்ளுள்ளி பெருங்காயம் நற்சீரகம் சுத்தி
செய்து
கருஞ்சீரகம் ஓமம் கடுக்காய் விளவரிசி வசம்பு யேலம்
நேர்பாளம் சுத்தி செய்து மருந்து - யகருணை க.
இம்மருந்தைப் பிரண்டைச் சார்விட்டு ஒருச்
சாமமரைத்து
சுண்டைக்காய்ப் பிரமாணு உண்டை செய்து அஞ்சு
நாட்கொள்ளவும். தீரும் வியாதி வாதி வாத குன்மம்
கெற்பக வாயுவு வாய் நீரூரல் பெவயறு நீராம்பல்
பேராம்பல் சுயெணித வாயவு உதிரவாயவு பித்த
பாண்டு காமாலை சோகை மகோதர வீக்கம்
இழைப்பு பிள்ளை பெற்றதில் வந்த வியாதி
வாதத்திலும் பித்தத்திலும் வந்த வியாதி பதினாறுந்த
தீரும்.

விளக்கம்:

மனிதன் உடம்பில் வாய்வு என்று சொல்வது நாம் சுவாசிக்கும்காற்றில் ஒரு பகுதி வாய்வாக மாறி நம் உடலில் சில பாகங்களில் தங்கிக்கொள்வதின் காரணமாக இந்தக் காற்றுத் தங்கிய இடத்தில் வலி வீக்கம், அசைவு ஏற்பட்டால் வலியுடன் இப்படி இருப்பதை நாம் வாய்வு என்று சொல்வது உண்டு. இதன் காரணமாக நமது உடம்பில் இயல்பாக நடைபெறும் செயல்களில்

சில மாறுதல்கள் ஏற்பட்டு இதனால் கீழ்க்கண்ட வியாதிகள் ஏற்படுகின்றது. குன்மம், கெற்ப வாய்வு, வாய் நீரூறல், பித்தபாண்டு, பெருவயிறு, நீராம்பல், சுறோணித வாய்வு உதிரவாய்வு, காமாலை, சோகை, மகோதர வீக்கம், இழைப்பு, குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு வரும் வியாதிகள், வாதத்தாலும், பித்தத்தாலும் வரும் அனைத்து வியாதிகள் ஆகியவை ஆகும். இக்குறிப்பிட்ட வியாதிகளுக்கு மருந்துகளும், செய்யும் முறைகளும் கீழே விபரமாகக் கொடுக்கப்பட்டு உள்ளது.

**தேவையான மருந்துகள் விபரம்:**

| | | |
|---|---|---|
| திப்பிலி பொடி | 35 | கிராம் |
| சாதிக்காய் | 35 | ,, |
| கிராம்பு | 35 | ,, |
| சுவாசிக்காய் | 35 | ,, |
| திப்பிலிமூலம் | 35 | ,, |
| கார்கோலயரிசி | 35 | ,, |
| இந்துப்பு | 35 | ,, |
| சுக்கு | 35 | ,, |
| மிளகு | 35 | ,, |
| வெள்ளுள்ளி | 35 | ,, |
| பெருங்காயம் | 35 | ,, |
| நற்சீரகம் | 35 | ,, |
| கருஞ்சீரகம் (சுத்தி செய்தது) | 35 | ,, |
| ஓமம் | 35 | ,, |
| கடுக்காய் | 35 | ,, |
| வாலுவை அரிசி | 35 | ,, |
| வசம்பு | 35 | ,, |
| ஏலக்காய் | 35 | ,, |
| நீர்வாளப்பருப்பு (சுத்தி செய்தது) | 20 | ,, |
| கருணை | 20 | ,, |

இந்த மருந்துகளைச் சமன் எடை எடுத்துக்கொண்டு கலுவத்தில் போட்டு பிரண்டைச்சாறு விட்டு ஒரு சாமம் (மூன்று

மணி நேரம்) நன்றாக அரைத்து மெழுகு பதத்தில் வந்தவுடன் சுண்டைக்காய் அளவு (மூனறு கிராம் எடை) உருண்டையாகச் செய்து நிழலில் காய வைத்துக் கொள்ளவும்.

**உட்கொள்ளும் அளவு**:

மூன்று கிராம் எடையளவு எடுத்துக்கொண்டு தினம் ஒரு வேளை சாப்பிடவும்.

**காலம்**;

ஐந்து நாட்கள் சாப்பிடவும்.

**தீரும் வியாதிகள்**;

மேலே சொல்லப்பட்டுள்ள பித்தபாண்டு, உதிர வாய்வு, கெற்ப வாய்வு, குன்மம், சோகை, மகோதரம், வீக்கம், இளைப்பு இவைகள் தீரும்.

பத்தியம்:

இச்சாப்பத்தியம்

அனுபானம்:

தேன், நெய், பால் இவைகளில் இந்த உருண்டையைக் கரைத்துச் சாப்பிடவும்.

**சுவடி மருந்து முறை**: **28**

## சயரோக இருமலுக்கும், இளைப்புக்கும் லேகிய மருந்து

கண்டங்கத்திரிச்சார் தூதுவளைச்சார் மிளகுதக்காளிச் சார் கிண்டுச்சார் துளசிச்சார் கரிப்பான் சார்

பொன்னாவாரைச்சார் நொச்சிச்சார் நல்ல முள்ளிச்
சார் ஆடாதொடைச்சார் .............. சார் படவே
சுக்குத் திப்பிலி மிளகு கடுக்காய் சித்தரத்தை அக்கிரா
காரம் தேசாபுரம் ஓமம் சீரகம் கிராம்பு ஏலம்
தாளிசபத்திரி கருஞ்சீரகம் வகைக்குப் பலம் - வ
கண்டங்கத்திரிப்பழம் காய்ந்தது போட்டு செலது
பலம் - க இது நீங்கலாக மற்ற மருந்துகளெல்லாம்
நாளொன்றுக் கொருபச்சிலைச்சாரிலூறப் போட்டு
இரவியிலுலர்த்தி யெடுத்து வஸ்திர காயஞ் செய்து
கொண்டு இஞ்சிச்சார் படவே சீனி பலம் - க
இராம .... கரை பலம் - உ சாற்றி போட்டுக் கிண்டி
விட்டு மெழுகு பதத்தில் தேன் படவே விட்டு
நன்றாய்ப் பிறழக் கிண்டச் சட்டியில் வைத்துக்
கொண்டு அந்தி சந்தியொரு புன்னை காயளவு சாப்
பிடவே கண்ட வியாதி யெல்லாந் தீரும் இச்சா பத்தியம்
சீனா கற்கண்டு - உ சேர்த்துக் கொள்ளவும்.

விளக்கம்:

சயரோகம் என்றால் மிகக் கொடிய வியாதி ஆகும். இந்த வியாதி மற்றவர்களுக்கும் பரவக் கூடியது. இதில் பல வகைகள் உண்டு. இவற்றில் சில வகையின் குறி குணங்கள் கீழே விபரமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

**க்ஷயரோகத்தின் குணம்**:

அஸ்தியில் அனல் ஏற்பட்டு இரத்தம் வற்றிப் பித்தம் அதிகமாகி நெஞ்சிற் கபம் (சளி) உண்டாகி இருமல் இளைப்புக் காணும். தேகம் வற்றும், முகம் வெளுக்கும், வாய் நீரூறும், அசாசிங் காணும் விரல் நரம்பைச் சுருங்க வாங்கும். உடம்பில் உஷ்ணம் இருந்து கொண்டு இருக்கும்.

**பித்தகாசத்தின் குணம்**:

உடலில் பித்தம் அதிகரித்து அக்கினி கொண்டுடல் உள்ளங்கால் உள்ளங்கை யெரிந்து கடுக்கும், வெதும்பும். மார்பு

கபம் உண்டாகி இருமல் இளைப்புக் காணும். கபம் விசந்து விழும். வாந்தி பண்ணும். வயிறு கழியும். நீர் சுருங்கும். அரோசியம் அன்னத்துவேஷம் உண்டாகும். (பசி இருக்காது)

**காசரோகக் குணம்;**

உடலில் அக்கினி அதிகரித்து மார்பு புண்ணாகி அடிக்கடி புகைத்த இருமல் வரும். கபத்தோடு இரத்தம் வரும். தொண்டை புண் போல் வலிக்கும். குரல் கம்மும். வாந்தி பண்ணும். களைப்புண்டாகும். நாசி அனல்போல் எரியும். தேகம் வெதும்பும். வற்றும், கருக்கும், இறுகும், தலை வலிக்கும், வாய்வு அதிகரிக்கும். வயிறு நோகும்.

**மந்த காசத்தின் குணம்:**

முகம், காது, ஊதும், நாசி கரகரத்துத் தும்மல் உண்டாகும். நீர் வடியும். மார்பு கபங்கட்டி இருமல் இளைக்கும். மார்பும் விலாவும் வலிக்கும். மந்தாரக் காசங்களின் நோய் அதிகப்படும்பொழுது பசி எடுக்காது. மந்திக்கும். வயிறு பொருமும். தேகம் அதைக்கும். கிறுகிறுப்பு இருக்கும்.

**விஷப்பித்தக் காசக் குணம்:**

உடலில் பித்தம் அதிகரித்து, நுரைத்துப்பொங்கிக் கபம் உண்டாகி, நினைவு தெரியாமல் இருமல், இளைப்பு வரும் பித்தம் குறைவு ஏற்படும்போது நிற்கும். மயக்கம் சில சமயங்களில் இருக்கும். காய்ச்சல் இருக்கும். தொண்டை, மார்பு, விலா புண் போல் வலிக்கும். உணவு சாப்பிட முடியாது. பசிக்காது.

**இரத்த காசம் குணம்:**

இருமல் அதிகம் ஏற்பட்டு வாயில் இருந்து இருமும் பொழுது அடிக்கடி ரத்தம் வரும். உடல் வற்றும். நாவுலரும். வழுவழுக்கும். அன்னம் செல்லாது.

**சுவாச காசத்தின் குணம்;**

தேகமிளைத்து வரும். சுரம், குளிர், இருமல், இரைப்பு, சுவாசம், தலைவலி காணும். வயிறு பொருமி வாந்தி பண்ணும். மலம் கட்டும். வியர்வை, தாகம் அதிகம் இருக்கும். புறந்தாடை அதைக்கும்.

## இவைகள் நிவர்த்திக்கு லேகிய மருந்தும் செய்யும் முறையும்.

**தேவையான மருந்துகளின் விபரம்:**

| | |
|---|---|
| கண்டங்கத்திரிச்சாறு | 200 மில்லி |
| தூதுவளைச்சாறு | 200 ,, |
| மிளகு | 35 கிராம் |
| தக்காளிச்சாறு | 200 மில்லி |
| தண்டுச்சாறு | 200 ,, |
| துளசிச்சாறு | 200 ,, |
| கரிப்பான் சாறு | 200 ,, |
| பொன்னாவரைச்சாறு | 200 ,, |
| நொச்சிச்சாறு | 200 ,, |
| நல்ல முள்ளங்கிச்சாறு | 200 ,, |
| ஆடாதொடைச்சாறு | 200 ,, |
| வெள்ளெருக்குச்சாறு | 200 ,, |
| சுக்கு | 35 கிராம் |
| மிளகு | 35 ,, |
| கடுக்காய் | 35 ,, |
| சித்தரத்தை | 35 ,, |
| அக்கரக்காரம் | 35 ,, |
| தேசாரவசம் | 35 ,, |
| ஓமம் | 35 ,, |
| சீரகம் | 35 ,, |
| கிராம்பு | 35 ,, |
| தாளிசபத்திரி | 35 ,, |
| கருஞ்சீரகம் | 35 ,, |

இவைகளை வகைக்குக் குறிப்பிட்ட எடைக்கு எடுத்துக்கொண்டு கண்டங்கத்திரிப்பழம் காய்ந்தது நூற்று ஐம்பது கிராம் எடை இந்த மருந்துகளை எல்லாம் ஒரு நாளைக்கு ஒரு பச்சை இலைச்சாற்றில் ஊறப் போட்டு இரவில் நன்றாகக் காயவைத்து எடுத்துக் கொண்டு இதனை எல்லாம் இடித்துச் சூரணம் மாதிரி செய்து ஒரு புதுச் சட்டியில் இந்தச் சூரணத்தில் சம பாக அளவுக்குச் சர்க்கரை போட்டு அடுப்பில் வைத்துப் பாகுசெய்து இந்தச் சூரணத்தைப் போட்டு நன்றாக் கிண்டி மெழுகுபதம் வரும்போது தேன் நெய் விட்டுக் கிண்டி வைத்துக்கொள்ளவும்.

**அளவு**:

பத்து கிராம் எடையளவு காலை, மாலை, என இரு வேளைகளில் இரண்டு மண்டலம் சாப்பிடவும். (96 நாட்கள்)

**அனுபானம்**:

சீனி, கற்கண்டு கலந்து சாப்பிடவும்.

**பத்தியம்**:

இச்சா பத்தியம், புளி, உப்பு, புகையிலை கரப்பான், உணவு வகைகள் வாய்வுப் பண்டங்கள் நீக்கவும்.

குறிப்பு; இருமல், இளைப்பு வரக் காரணம் மூலத்தில் அக்கினி அதிகரித்துக் கபாலத்தில் பற்றி இரத்தம் வற்றித் தாது கெட்டு நீரேறி மார்புச்சளி ஏற்பட்டு இருமல் இளைப்பு உண்டாகிறது. இந்த வியாதிக்கு மட்டும் கீழ்க்குறிப்பிட்ட மருந்துகளைத் தயார் செய்து சாப்பிடவும், கற்கடகச்சிங்கி, திரிகடுகு, திரிபலை, அரத்தை, கண்டங்கத்திரி வேர் இவைகளைச் சமண் எடை வீதம் எடுத்துக் கொண்டு நன்றாக இடித்துப் பொடிசெய்து திரிகடியளவு வெந்நீர் அல்லது தேன் கலந்து தினம் இரண்டு வேளை வீதம் அரை மண்டலம் சாப்பிடவும். மேற்சொன்ன இச்சாபத்தியம் இந்த மருந்து கொடுக்கும்பொழுது கடைப்பிடிக்கவும்.

சுவடி மருந்து முறை: 29

## சகல கண் வியாதிகளுக்கும் மருந்து

துரிசு - சா இ கடல் நுரை - சா இ யிரண்டும் நன்றாய் போட்டு செய்து வென்கலவட்டினிற் போட்டு செப்பு செம்பாவது வெண்கலச் செம்பாவது கொண்டு பேசு வின்வெண்ணை சேர்த்து சொரு சாமமரைக்குமை நிறமாய் வரும் வழித்துச் சிமிழில் வைத்துக்கொண்டு குழந்தைகள் பெரிய மனுஷாளுக்கும் வெந்தயப் பிரமாலும் கண்ணிற் போடவும் தீரும் படலம் கண் எரிச்சல் நீரோடல் வலி முதலாவதுந் தீரும்.

**விளக்கம்**:

உலகில் வாழும் அனைத்து உயிர் ஜீவராசிகளுக்கும் கண் விழிகள் மிக முக்கியமான உறுப்பு ஆகும். எனவே கண் விழிகளை நாம் மற்ற உறுப்புகளை விட மிக மிகக் கவனமாகப் பாதுகாத்துக்கொள்வது நமது கடமையாகும். அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் கண்பார்வை, கண் நோய் இவைகளில்லாது வாழ்ந்து இருக்கின்றார்கள். காரணம் கண் விழிப்பார்வை நன்றாக இருக்க வேண்டும், என்பதற்காக அவர்கள் தினம் ஒரு பச்சைக்கீரை வகையினை உணவில் சேர்த்துச் சாப்பிட்டு இருக்கிறார்கள். இத்துடன் அவர்கள் கண் விழிகளுக்கு உஷ்ணம், கண்விழிச் சதை வளர்ச்சி, கண் விழிக்கட்டி, கண் விழி எரிச்சல், கண்ணிமைகளில் நீர் கட்டுதல் இவைகள் வராமலும் அவர்கள் பாதுகாத்து இருக்கின்றார்கள் என்பதைச் சில பழைய நூல் குறிப்புகளில் இருந்து நாம் தெரிந்துகொள்கிறோம். இத்துடன் இப்படிப்பட்ட கண் விழி நோய்கள் வந்தால் கீழ்க்கண்ட மருந்துகளைத் தயார்செய்து உபயோகிக்கவும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மருந்துகள் செய்யும் முறை கீழே விவரிக்கப்பட்டு உள்ளது.

**தேவையான மருந்துகளின் விபரம்;**

| | |
|---|---|
| துரிசு | 5 கிராம் |
| கடல் நுரை | 5 ,, |

இந்த இரண்டு வகைகளையும் சமன் எடை எடுத்துக்கொண்டு வெண்கலப் பாத்திரத்திலாவது அல்லது செம்புப் பாத்திரத்திலாவது போட்டு இதில் தேவையான அளவுப் பசுவின் வெண்ணெயைப் போட்டு நன்கு ஒரு ஜாமம் (அதாவது மூன்று மணி நேரம்) அரைக்கவும். இப்படி அரைக்கும்போது மை நிறமாக வரும் இதனை அந்தப் பாத்திரத்தில் இருந்து வழித்து எடுத்துக்கொண்டு சிமிழ் அல்லது ஒரு கண்ணாடிப் பாட்டிலில் வைத்துக்கொண்டு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இந்த மருந்தை ஒரு வெந்தய அளவுக்கு எடுத்துக் கண் விழிகளில் தினம் இரண்டு வேளை வீதம் ஏழு நாட்களுக்குப் போட்டு வந்தால் மேற்சொன்ன கண்விழி நோய்கள் தீரும். இது கை கண்ட மருந்து ஆகும்.

**கண் வியாதிகளுக்குக் குழம்பு மருந்து செய்யும் முறை**

| | |
|---|---|
| சவுக்கார துருசு | ஒரு பண எடை (488 மில்லி கிராம்) |
| மடல் துத்தம் | ஒரு பண எடை (488 மில்லி கிராம்) |

இந்த மருந்து வகைகளை வகைக்கு ஒரு பண எடை வீதம் எடுத்துக்கொண்டு சற்றுத்தீயில் வெதுப்பி இதனையெல்லாம் தண்ணீர் விட்டுக் குழம்பு போல் அரைத்துச் சிமிழில் அடைத்து வைத்துக்கொண்டு மேற்சொன்ன கண்விழி வியாதிகளுக்கு மூன்று சொட்டு வீதம் இரண்டு வேளை வீதம் மூன்று நாட்களுக்குப் போடவும்.

**கண் வலிக்கு மருந்து:**

கரியுப்பைப் பொடி செய்து இதனை நல்ல சுத்தமான துணியில் பொட்டணங்கட்டி இதனை நீராகார ஜலத்தில் இரண்டு நாழிகை நனைத்து கண் விழிகளில் மூன்று சொட்டு விட்டால் கண் வலி உடனே மாறும்.

**கண் சிவப்பு கடுப்பு நிவர்த்திக்கு மருந்து:**

தேக்கு விரை, கடுக்காய்த்தோல், புளிய விரைத்தோல் இவைகளை மைப் போல் இடித்துப் பொடிசெய்து நல்ல துணியில் முடிந்து முலைப்பாலில் ஊற வைத்து மூன்று சொட்டு பிழிந்து வந்தால் குணமாகும்.

**குறிப்பு:**

பண எடை என்பது 488 மில்லி கிராம் எடைக்குச் சமம்.

**சுவடி மருந்து முறை; 30**

## பேதி நிவர்த்திக்கு மருந்து
### (வயிற்றுப் போக்கிற்கு மருந்து)

உப்பு ஓமக் குப்பை மேனி தைவேளை
நாயுருவிச மூலம் பிரண்டை மஞ்சனாத்தி
இவ்வளவு சுருக்கிக் கொட்டபே போட்டுப்
பசுவின் மோர் பிடவேலை விட்டு ஆறின பிறகு
ஓமங்கருக்கின்றதைப் போட்டு செய்து போட்டு
சாப்பிடவும் பேதிகட்டுப்ப சாதிக்காயை
யுடையது கிளி கட்டும் போட்டுக் கிஷாயங்
செய்து அதிற்றேக மரங் குழிதயில மிர
கிடைக்கும் கிஷாயத்தில் விட்டுச் சாப்பிடவும்.
பேதி கட்டுப்படும்

**விளக்கம்;**

பேதி என்பது ஒரு வகை வயிற்றுப் போக்கு, இந்த வயிற்றுப் போக்கில் பல வகையுண்டு. ஆனால் வாந்தி பேதி என்று சொல்லும் வகை வேறு. ஆனால் கூடுமான வரை பேதி சிறு குழந்தைகளுக்கு அதிகமாக வரும். இது வரும் காரணம் உணவு வகைகள் சரியாகச் சீரணம் ஆகாமலும் கெட்டுப்போன உணவு இவைகளின் காரணத்தால் பேதி வருவதுண்டு. மேற்படி பேதி பெரியவர்களுக்கும் வரும். உடம்பில் அதிகம் மூலத்தில் உஷ்ண வாய்வு ஏற்பட்டாலும், மேற்சொன்ன கெட்டுப்போன உணவு

வகைகளில் சில மாற்றம் ஏற்பட்டுச் சீரணம் ஆகாமல் இருந்தாலும் பேதியாவதுண்டு. இத்துடன் சில விஷ மருந்து களிம்பு சம்பந்தப்பட்ட உணவு வகைகளினாலும் பேதி வரலாம். இதன் நிவர்த்திக்கு மருந்தும், செய்யும் முறையும், தேவையான மருந்துகளின் விபரமும்.

| | |
|---|---|
| உப்பு | 50 கிராம் |
| ஓமம் | 50 ,, |
| குப்பைமேனி | 50 ,, |
| தைவேளை | 50 ,, |
| பிரண்டைக்காய் | 50 ,, |
| மஞ்சணாத்தி | 50 ,, |
| நாயுருவிச்சமூலம் | 50 ,, |

இவைகளைச் சுத்தமான சட்டியில் போட்டு லேசான சூட்டில் கருக்கிக்கொண்டு இதில் கொஞ்சம் ஓமத்தின் கருக்கலையும் போட்டு நல்ல சுத்தமான பசுவின் மோர் விட்டு நன்கு கலக்கி இதனை வடிகட்டித் தினம் மூன்று வேளை வயதுக்குத் தகுந்தாற்போல் கொடுக்கவும். இந்த மருந்தைத் தேவைப்படும்போது மட்டும் புதிதாகத் தயார் செய்துகொண்டு சாப்பிடவும். மேலும் இந்தப் பேதி நிவர்த்திக்குச் சாதிக்காயை உடைத்துப் போட்டுக் கிஷாயம் செய்து சாப்பிட்டாலும் பேதி நிற்கும். இது கை கண்ட மருந்தாகும்.

**குறிப்பு;**

சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்கும் பேதி வருவதன் காரணங்கள் சிலவற்றைப் பற்றிக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. குழந்தைகளின் வளர்ச்சிக் காலத்தில் மாறுதல் ஏற்படும்பொழுது கூட வயிற்றுப் போக்கு ஏற்படலாம்.

2. பால் குடிக்கும் குழந்தைகளுக்கு ஏற்படும் பேதி குறிப்பாக " மாந்தம்" என்று சொல்வதுண்டு. இதில் பல வகையுண்டு. இதில்

மாந்தம் வருவதன் காரணம் குழந்தையின் பால், உணவு வகைகள் மாறுதல் அடைவதன் காரணமாகவும் குழந்தைக்கு ஜீரணம் ஆகாமல் இருப்பதால் பேதி உண்டாகிறது.

3. குடலேற்றம், குடல் முருக்கல் இவைகளின் காரணமாகவும். வயிற்றுப்போக்கு ஏற்படலாம்.

4. குழந்தைகளுக்கு வயிற்றில் ஏதாவது சிக்கல்கள் இருந்தாலும் வயிற்றுப்போக்கு ஏற்படலாம்.

5. சயக் கிருமிகள் உடம்பில் இருந்தாலும் குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு ஏற்படலாம்.

6. வயிற்றில் சில புழு வகைகள் இருந்தாலும் வயிற்றுப்போக்கு ஏற்படலாம்.

7. குடல், வயிறு இவைகளில் ஏதாவது கட்டிமாதிரி ஏற்பட்டு இருந்தாலும் வயிற்றுப்போக்கு ஏற்படலாம்.

8. உடல் சில மருந்துகளை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் வயிற்றுப்போக்கு ஏற்படலாம்.

9. பாத்திரங்களில் இருக்கும் களிம்பு, விஷத்தன்மையான மருந்து வகைகளினாலும், கெட்டுப்போன காய்கறி, பழம் இவைகளைச் சாப்பிடுவதினாலும் பேதி ஏற்படலாம்.

10. மனித உடலில் உள்ள இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல் இவைகளில் ஏதாவது ஒரு உறுப்பு தன் வேலையைச் சரிவரச் செய்யாவிடினும் பேதி வரக்கூடும்.

11. மனிதனின் குடல்பகுதியில் ஏதாவது தூது, மீன் முள், எலும்புத்துண்டு இவைகள் குத்திக்கொண்டிருந்தாலும் பேதி வரக்கூடும். அதிர்ச்சி செய்தி கேட்டாலும் பேதியாகும். இப்படியாக இன்னும் பலவகைக் காரணங்களினாலும் பேதி வரக்கூடும். எனவே, பேதி என்பது வயிற்றுப்போக்கு சிலருக்கு நீண்ட நாட்களாக வயிற்றுப்போக்கு போகும். சிலருக்கு வாரம் இரண்டு முறை அல்லது ஒரு தடவை அல்லது திடீர் என்று கூடப்

பேதியாகும். இவைகள் எல்லாம் வருவதற்கான காரணம் உணவு மாறுதல் இரத்த சோகை, இலுப்பு, நீர் இவைகளின் காரணமாக ஏற்பட வாய்ப்புண்டு என்பதை வாசகர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். பெரியவர்களுக்கு ஏற்படும் பேதியை அலட்சியம் செய்யாமல் உடன் கவனித்துத் தக்க சிகிச்சை செய்துகொள்ள வேண்டும் என்பதை இந்த நூலைப் பதிப்பு செய்த ஆசிரியர் அன்புடன் கேட்டுக்கொள்கிறார்.

**பேதி நிற்க மருந்து:**

கரியுப்பு, நாட்டுச்சர்க்கரை இவைகளைச் சமன் எடைக்கு எடுத்துக்கொண்டு வெந்நீரில் கரைத்துச் சுத்தமான துணியில் வடிகட்டி ஒரு நாளைக்கு ஆறு தடவை 20 மில்லி வீதம் கொடுக்கவும்.

**குறிப்பு:**

பேதி போகும்போது, பேதி நிற்கும் வரை உணவு வகைகளைச் சாப்பிடக்கூடாது.

**சுவடி மருந்து முறை: 31**

## சிவன் வேம்புச் சூரணம்

சொல்லுகிறேன் சிவன் வேம்பு சூரணமே செய்து
சுகமாக
பலம்பத்து நிறுத்துக்கொண்டு மல்லுகிறேன் சிவன்
வேம்புத்தயிலந்தானும் வாங்கியே படியொன்று வேறே
வைத்து அல்லுகிறேவாலுமுவை தாளிசபத்தியும்
அழகான கிறாம்பேலம் அதிமதுரங்கோஷ்டம்
கல்லுகிறேன் சாதிக்காய் சாதிபத்திரியும் - கருஞ்சீரக
மிளகு கடுக்காய் திப்பிலியே.

திப்பிலியும் அதிவிடையம் பறங்கிப்பட்டை
சிறுநாகப்பூவோடு
வால்மிளகு சிங்கி இப்படியே வகை வகைக்கு கால்

பலமே தூக்கு இடித்து நவ நீ சிவன் வேம்பு சூரணத்தோ
டொக்க, தப்பாதேசமபாகம் பாதி சீனி சாரித்து
ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு, செப்பாதே தினமொன்று
வெறுகடி தூளப்பா-சீவன் வேம்புதயிலத்திற்குழைத்துக்
கொள்ளே (கஅறு)

கொள்ளவே பதினெட்டு குஷ்டரோகங் குலைந்தோடும்
மேகமொடு சுவாலை வாய்வு, களங்கமாங்கறப் பனொடு
சொறிசிரங்கு வெட்டை கடிவிஷங்கள் விரணகாந்தி
துன்னியே
நோயெல்லா மோடிப்போகும் சொல்லரிது காய சிந்தி
களுக்கு மெத்தகள்ளமில்லை சொல்லிவிட்டேன்
விளார்வேம்பு
கற்பத்துக்காதியாங்கண்டு பாரே. (ளஅரு)

கண்டு பார் ஆதகத்தின் திரம் போகா - காலோடு
கைலுங்கடுத்துக்குத்தி செனக்று பார் வயிற்றிலே
சோரெதன்
தங்கி-திரட்சி குன்மம் வாய்வா கிசுவாலையாச்சு
அன்றுபார்
ஆசிகவாயுவாச்சு அபானமாங்கருக்குழியிலுதிரங்
கட்டி உண்டு
தாதனுரத்தில் வாய்வு சேர்ந்துள்ளங்கால் நகக்கண்கள்
குத்தலாச்சே (ளஅரு)

**விளக்கம்**:

இந்தப் பாடலில் சொல்லப்பட்டுள்ள சிவன் வேம்பு என்பது மிகமிக உயர்ந்த வேம்பு. மற்ற நாட்டு வேம்பு மலை வேம்பு இவைகள் எல்லாம் மரத்தின் இனத்தைச் சேர்ந்தது. இந்தச் சிவன் வேம்பு மட்டும் செடி இனத்தைச் சார்ந்தது. இந்தச் செடியில் சிறு குச்சிகளைப்போன்று கிளைகள் இருக்கும். இதன் இலைகளைக் கிள்ளி வாயில் போட்டுச் சுவைத்துப் பார்த்தால் மற்ற வேம்புகளைவிட அதிகம் கசப்பாக இருக்கும். இந்தச் செடியை வடலூர், கடலூர் பகுதிகளில் அதிகமாக காணலாம். தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள செஞ்சி வட ஆர்க்காடு மாவட்டம் போன்ற

மற்ற இடங்களிலும் கிடைக்கக் கூடியது. இந்தச் சிவன் வேம்புச் சமூலத்தை வாத சம்மந்தப்பட்ட வியாதிகள், கிரந்தி நோய், மலக்கட்டு, சொரி சிரங்கு, மூல வியாதிகளுக்குப் பலவிதமான மருந்துகள் செய்ய இவை அதிகமாகப் பயன்படுத்தப்படும் இந்தச் சிவன் வேம்புச் சூரணம் எப்படித் தயார் செய்யப்படுகின்றது என்ற விவரம் கீழே விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

**தேவையான மருந்துகளின் விபரம்;**

| | | |
|---|---|---|
| சிவனார் வேம்புச் சூரணம் | 350 | கிராம் |
| வாலுவை அரிசி | 20 | ,, |
| தாளிச பத்திரி | 20 | ,, |
| கோஷ்டம் | 20 | ,, |
| ஜாதிக்காய் | 20 | ,, |
| கருஞ்சீரகம் | 20 | ,, |
| ஜாதிப்பத்திரி | 20 | ,, |
| வால்மிளகு | 20 | ,, |
| மிளகு | 20 | ,, |
| கடுக்காய் | 20 | ,, |
| திப்பிலி | 20 | ,, |
| அதிவிடயம் | 20 | ,, |
| பரங்கிப்பட்டை | 20 | ,, |
| சிறுநாகப்பூ | 20 | ,, |
| கிராம்பு | 20 | ,, |
| கற்கடசிங்கி | 20 | ,, |
| சிவனார் வேம்புத் தைலம் | 20 | ,, |

**விளக்கம்:**

இந்தப் பதினாறு வகை மருந்துகளை நன்றாகப் பொடி செய்து இதனைத் துணிகொண்டு சலித்து இத்துடன் சிவன் வேம்புச் சூரணத்தைச் சேர்த்து நன்கு கலந்து இதனுடன் இந்த சூரணத்தைச் சேர்த்து நன்கு கலந்து இந்தச் சூரணத்தின் சம அளவுக்கு ஜீனியைக் கலந்து தைலத்தைக் கொண்டு நல்ல சுத்தமான கண்ணாடி பாட்டிலில் வைத்துக்கொள்ளவும்.

**உட்கொள்ளும் விதம்:**

பத்து கிராம் சூரணத்தை எடுத்துக்கொண்டு தினம் ஒரு வேளை வீதம் சாப்பிடவும்.

**காலம்:**

ஒரு மண்டலம் அதாவது நாற்பத்தெட்டு நாட்கள் சாப்பிடவும்.

**தீரும் வியாதிகள்:**

பித்த மேகம், கிரந்தி, சூலை, சொரி சிரங்கு, மூல வாய்வு, மூலக்கடுப்பு, வாய்வு, வாய்நீர், மலக்கட்டு ஆகியவை தீரும்.

**பத்தியம்:**

வியாதிக்குத் தகுந்தாற்போல் உணவு வகைகளைச் சேர்க்கலாம் அல்லது நீக்கலாம்.

**இரண்டாவது முறை:**

| | |
|---|---|
| சிவனார் வேம்புச் சூரணம் | 25 கிராம் |
| வாலுவை அரிசி | 25 ,, |
| தாளிச பத்திரி | 25 ,, |
| கிராம்பு | 25 ,, |
| ஏலம் | 25 ,, |
| அதிமதுரம் | 25 ,, |
| கோஷ்டம் | 25 ,, |
| சாதிக்காய் | 25 ,, |
| சாதிப்பத்திரி | 25 ,, |
| கருஞ்சீரகம் | 25 ,, |
| மிளகு | 25 ,, |
| கடுக்காய் | 25 ,, |
| திப்பிலி | 25 ,, |
| அதிவிடயம் | 25 ,, |
| பரங்கிப்பட்டை | 25 ,, |
| சிறுநாகப்பூ | 25 ,, |
| வால்மிளகு | 25 ,, |

இவைகளை வகைக்கு 25 கிராம் எடுத்துக் கல் உரலில் போட்டு நன்றாக இடித்துத் தூள் செய்துகொண்டு வடிகட்டி இந்தச் சிவனார் வேம்புச் சூரணத்துடன் சமன் அளவு சர்க்கரை கலந்து வைத்துக்கொள்ளவும்.

**உட்கொள்ளும் அளவு:**

ஐந்து கிராம் வீதம் ஒரு நாளைக்கு இரண்டு வேளை சாப்பிடவும்.

**பத்தியம்:**

வியாதிக்குத் தகுந்தாற்போல் உணவு வகைகளைச் சேர்க்கலாம் அல்லது நீக்கலாம்.

**தீரும் வியாதிகள்:**

பித்தமேகம், சூலை, கிரந்தி, மலக்கட்டு, வாய்நீர், வாய்வு, மூலக்கடுப்பு, மூலவாய்வு, சொறிசிரங்கு ஆகியவை தீரும்.

**சுவடி மருந்து முறை: 32**

## சூசிக வாய்வுக்கு லேகியம்

ஆச்சென்ன குசிகா வாய்வு பொல்ல தாகுந்தான்
தீர்க்கறியப்பா கேளு, பேச்சென்ற பொடுவேலி அமுக்கிற
வேர்-பெருமருந்து கோப்பிரண்டை நொச்சி சங்கு
வெச்சென்ற மாலிங்கு மிளகருணை கொருஞ்சி வெள்ளைச்
சாரணை அடம்பு கண்ணுப்பூனை ஆச்சென்ற நிலையாவாற
பினோடு அப்பனே வகை வகைக்கு கலந்தால் தூக்கே
தூக்கியே யிடித்ததனை சிலை வடி கொண்டு-சூரணம்
செய்துநீ சொல்லக் கோளு, ஆச் சென்ற வால் மிளகு
கடுக்காளீய தாணி ஆனைத்திப்பிலி ஓமம் அரத்தை சுக்குத்
தாக்கிஞ்சிப் பெருங்காயம் கண்ட திப்பிலி - சதகுப்பிகுறுச

சானி தப்பிலிமூலம், தாக்கியே சாதிக்காய், கிராம்பு
பத்திரி-தாளிச்ச பத்திரியொடு சிறுநாகப் பூவே. (எஅஎ)

பூவோடு திப்பிலியும் விடைமாஞ்சி
புகழான செங்கோட்டை ரசகற்பூரம்
கோவோடு வகை வகைக்குக் கால் பலமே தூக்கு
கொள்ளிச்சார் தேங்காய் பால்விட்டு ஆட்டு
ஆவோடு முன் மருந்ததோ டொக்கச் சேரு
அடுப்பேற்றி சட்டிகளைக் காயவைத்து
கோவோடு நல்லெண்ணை படிதான் வாரு
கொதிக்கையிலே வெள்ளுள்ளி ரெண்டு பலம் போடே
(எஅஅ)

போடவே தோல் போக்கி நிறுத்திப் போட்டு
புகழான பனவெல்லம் நாலு பலம் போடு,
ஆடவே ஆவின் பால் படி தான் வாரு
அப்பனே மூங்கிலிலை அரைத்து நன்றாய்த்
தேடவே கெச் சகயாளவு போடு
சேகதிர்த்து கிண்டிடிலோ பாகு போலாம்
சாடியே சூரணத்தைக்
கொட்டிக்கிண்டி சம்பா

சேரையே தான் போட்டுக் கிண்டி நன்றாய்
சேத்து மேலேகியம்போல் பண்கி கொண்டு
ஆரேநீ நாளோன்றுக் கந்தி சந்தி
அப்பனே கொட்டைப் பாக்களவு கொள்ளு
சேரேநீ வயிற்றிலே உதிரமேது
திரட்சியொடு வாய்வேது குன்மமேது
சோரையென்ற உதிரமெங்கே கட்டியெங்கே
சூதகவாய்வுகுத்தல் குலைந்து போச்சே. (எகய)

போச்சென்ற பத்தியந்தான் சொல்லக்கேளு
புளியோடு புகையிலையுங் கைப்புந் தள்ளு
ஆச் சென்ற சுறாவற்றல் வெள்ளாட்டு வற்றல்
அப்பனே விரால் வற்றல் அன்பாய்க் கூட்டு

கூச்சென்ற அரைக்கீரை முருங்கைப் பிஞ்சு
கொள்ளகச்சக் கருவாடு கோழிச்சாறு
ஆச்சென்ற புளியில்லாத வித்துக் கூட்டு
அப்பனே வுப்பதனை வறுத்துக் கூட்டே. (எகூக)

கூட்டுவது மருந்து கொள்ளும் போது தள்ளிக்
கொண்டு மறுபத்தியத் தில் கூட்டிக்கே நீ
நாட்டியே யின்னமொன்று சொல்லக்கேளு
நலமான வாதமொடு சூலை ரேகம்
காட்டியே யிவ்வுலகிற் பறந்துபோகும்
தயவாக வென்முறை போலாகுந்த சொல்லார்
பாட்டியே ரோக மெல்லாம் ஓடிப் போக
பறங்கிப்பட்டை ரசாயனத்தைப் பாடுவேனே.(எகூஉ)

**விளக்கம்**:

மேற்சொல்லி இருக்கும் ஆசிக வாய்வுக்குத் தேவைப்படும் மருந்து வகைகளையும், செய்யும் முறையையும் மற்றவர்கள் புரிந்துகொண்டு உடன் செய்யக்கூடாது. என்றும் ஒவ்வொரு மருந்துகளின் குணத்தின் பெயர்களுடன் சூசகமான பாடல் வாயிலாக அக்காலத்துச் சித்தர்கள் சுவடிகளில் எழுதி வைத்திருக்கிறார்கள். ஆனால் இந்த மருந்து செய்யும் விதத்தையும், பத்தியம் விபரத்தையும் எந்நெந்த உணவுகளை நீக்கி, கூட்டிக் கொள்ள வேண்டும் என்பதையும் பாடல் வாயிலாக மிக அழகாக எழுதி வைத்திருக்கிறார்கள். இதனை மிகச் சிறப்பாக எளிதில் புரியும் அளவிற்கு விளக்கமாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**தேவையான மருந்துகளின் விபரம்**:

| | |
|---|---|
| பெரும் மருந்து இலை | 35 கிராம் |
| கொடிவேலி வேர்ப்பட்டை | 35 ,, |
| அமுக்கிராக்கிழங்கு | 35 ,, |
| பிரண்டைச்சாறு | 35 ,, |
| நொச்சி இலைச்சாறு | 35 ,, |
| சங்கு வேர் | 35 ,, |

| | |
|---|---|
| மாவிலங்குப் பட்டை | 35 ,, |
| மிளகரணை | 35 ,, |
| கொழுஞ்சி இலைச்சாறு | 35 ,, |
| வெள்ளைச்சாரணை | 35 ,, |
| இரச கற்பூரம் | 35 ,, |
| நில ஆவரையிலைச்சாறு | 35 ,, |
| **வால் மிளகு** | **35** ,, |
| கடுக்காய் | 35 ,, |
| இலவங்கப் பத்திரி | 35 ,, |
| யானைத் திப்பிலி | 35 ,, |
| ஓமம் | 35 ,, |
| அரத்தை | 35 ,, |
| சுக்கு | 35 ,, |
| பெருங்காயம் | 35 ,, |
| கண்டந்திப்பிலி | 35 ,, |
| சதகுப்பை | 30 ,, |
| குரோசாணி | 30 ,, |
| இஞ்சிச்சாறு | 100 மில்லி |
| சாதிக்காய் | 30 ,, |
| கிராம்பு | 30 ,, |
| சாதிப்பத்திரி | 30 ,, |
| தாளிசப்பத்திரி | 30 ,, |
| சிறுநாகப்பூ | 30 ,, |
| அதிவிடையம் | 30 ,, |
| சடாமாஞ்சில் | 30 ,, |
| சேங்கொட்டை | 30 கிராம் |
| கொள்ளியிலைச்சாறு | 250 மில்லி |
| தேங்காய்ப்பால் | 250 ,, |
| வெள்ளைப்பூண்டு | 70 கிராம் |

மேற்சொன்ன மருந்து வகைகள் யாவற்றையும் குறிப்பிட்ட அளவு வீதம், கடைச்சரக்குகளை மட்டும் எடுத்துக்கொண்டு புதுச்சட்டியில் போட்டுப் பொன் நிறமாக வறுத்துக்கொண்டு இதனை நன்கு இடித்துத் துணிகொண்டு வடிகட்டிச் சூரணமாகச்

செய்துகொண்டு ஒரு பெரிய பாத்திரத்தில் சாறு வகைகளை ஊற்றி இதில் 140 (நூற்றி நாற்பது) கிராம் எடைக்குப் பனை வெல்லத்தைப் போட்டு இதில் ஒரு லிட்டர் பசும் பால் ஊற்றிப் பிறகு முப்பது கிராம் எடைக்கு மூங்கிலிலையை அரைத்து இத்துடன் போட்டு நன்கு கலக்கிக் காய்ச்சிக்கொண்டு இருக்கும் பொழுது தேங்காய்ப்பால், சேங்கொட்டை, இரசகற்பூரம் ஆகிய வகைகளை ஆறு கிராம் எடைக்கு இதனையும் சேர்த்துப்போட்டுச் சுண்டக் காய்ச்சி தார்ப்பதம் வரும் போது மேற்செய்து வைத்திருக்கும் சூரணத்தை இதில் போட்டுக்கிண்டி மெழுகு பதம் வரும்போது சம்பா நெல் பொரியை ஒரு கைப்பிடி அளவு இதில் போட்டு நன்றாகக் கிண்டி இதனை ஆறவைக்கும் முன்னர் நெய், தேன் விட்டு நன்றாகக் கிண்டி ஆறிய பிறகு சுத்தமான பாட்டிலில் வைத்துக்கொள்ளவும்.

**உட்கொள்ளும் அளவு**:

கொட்டைப்பாக்கு அளவு தினம் இரண்டு வேளை வீதம் சாப்பிடவும்.

**உட்கொள்ளும் காலம்**:

ஒரு மண்டலம் (நாற்பத்தெட்டு நாட்கள்) சாப்பிடவும்.

**தீரும் வியாதிகள்**:

மேகவாய்வு, மேக சூலை, பதினெட்டு குட்ட வகைகள், கரப்பான், சொரி சிரங்கு, வெட்டைச்சூடு, சில விஷக்கடி இவைகள் தீரும்.

**பத்தியம்**:

புளி, புகையிலை நீக்கவும். உப்பை வறுத்துப்போட்டுக் கொள்ளவும்.

**சேர்த்துக்கொள்ள வேண்டிய உணவு வகைகள்;**

அரைக்கீரை, வெள்ளாட்டு வத்தல், கச்சக் கருவாடு, முருங்கைக்காய்ப் பிஞ்சு இவைகளைச் சேர்க்கும்போது புளியை நீக்கிவிட்டுச் சேர்த்துக்கொள்ளவும்.

**குறிப்பு**:

**சூதக வாய்வுக்குக் கீழ்க்கண்ட மருந்தினைத் தயார்செய்து உட்கொள்ளலாம்.**

குப்பைமேனி, பொற்றலைக் கரிப்பான்,சிறு செருப்படையிலை நிலாவாகைவேர் இவைகளைச் சமன் எடை வீதம் எடுத்துக்கொண்டு, நன்றாகக் காயவைத்து இடித்துச் சூரணமாகச் செய்து தினம் இரண்டு வேளை வீதம் அரை மண்டலம் (24 நாட்கள்) உட்கொள்ளவும்.

**அனுபானம்:**

மருந்தைத் தேனில் கலந்து சாப்பிடவும்.

**பத்தியம்**:

இச்சா பத்தியம்.

**சுவடி மருந்து முறை**: 33

## பரங்கிப்பட்டை பதங்கம்

கூட்டுவது மருந்து கொள்ளும் போது தள்ளிக்
கொண்டு மறு பத்தியத்திற் கூட்டிக்கொண்டு
நாட்டியே யின்ன மொன்று சொல்லிக்கேளு
நலமான வாதமொடு சூலைரோகம்
சூட்டுவது மேலக்கடுப்புங் கை
காற்மிடும் மங்காதே தேக மெல்லா
மோடிப் போக பாட்டிலே ரோக மெல்லா
மோடிப்போக பரங்கிப் பதங்கமதைப் பாடுகிறேனே.
(எசஉ)

பாடுகிறேன் பரங்கிப்பட்டைப் பலந்தான் பத்து
பரு பருக்கை யாயிடித்துப் பாகங்கேளு
பாடுகிறேன் புதுக் கலச மூன்று வாங்கிப்
பட்டைப் பலந்தான் பத்து கலசந் தன்னிற்

போடுகிறேன் முடிவு யாங்குழி பேசியமருந்து கேளாய்
பெருங்காயங் காடுகிந்துப்பு வீசியரசம் பொற்காரம்
வேளமனோ சிலையுங் கூட்டியா
சில திப்பிலியும் அரிதாரத்த கடுதாக்கி
மாசில்லாக் கரிய சீரம் வகை வகை களஞ்சிவாங்கே.(உ)

சீரம் வகை வகை களஞ்சி வாங்கியே வாங்கும்
மருந்துக் கொப்பாய் வளமும் வறுப்புப் பாதி தாங்கிய
பச்சை பாதி சமன் முளைபோக்கி நீக்குத் தீங்கில்லா
மருந்து பத்துஞ்சேரவே யரைக்க வேண்டி யோங்கிய
மொருஞ் சோறு முண்டு நீ யரைத்துக் கூட்டே. (ங)

கூட்டிய மருந்தின் பேர்கள் அகஸ்தியர் குழம்பதாகும்
மூட்டியா தாமே சுக்கு இருகினாற் கடுக்காய்ச் சாரு
வாட்டிய குளிர் சுரங்கள்வகை சுஃகு மிளகிற் கொள்ள
பாட்டினிலிரசத மூலம் பசுவினெய் மோதிப்பாலே. (ச)

பாலினி லொழியும் பாண்டு மகோதரம் பெருவயிறு
மேலினீராமை கூகை மிளகுதூள் வெள் வெங்காயஞ்
சாலவே ஜன்னிக்கெல்லாந் தேனிஞ்சிச் சார தாகும்
ஏலமாகுசக ஜன்னிக்கு இடு கண்ணி வெறுக்கில் வேம்பே. (ரு)

இடுகண்ணிற் கடுகிற பாதி வீங்கிற் கற்றமஞ் சோறு
வடிதயிர் சந்தனங்கள் வைத்து நீர் கட்டி மாறும்
பிடிபெற வாளை பக்கறை யாப்புப் புண்கள்
புடிபெறு சிலந்தியாகிலும் கீரில் மிகவும் பூசே. (சு)

**விளக்கம்**:

மேற்குறிப்பிட்டிருக்கும் மருந்தில் சிலவிஷமருந்துகள் கலந்து செய்ய வேண்டியிருப்பதால் இந்த மருந்தினைச் செய்ய ஆர்வம் உள்ளவர்கள் இந்த மருந்தினைச் செய்ய சித்த வைத்தியரை நாடிக்கலந்து ஆலோசித்து இதன் முறையை நன்கு புரிந்து செய்யவும். இருப்பினும் இந்த மருந்தினால் கீழ்க்குறிப்பிட்டுள்ள வியாதிகள் தீரும்.

## தீரும் வியாதிகளும் அனுபானமும்

**மூட்டுச்சுரம் அனுபானம்**:

சுக்கு,கடுக்காய்க் கஷாயத்தில் சாப்பிடவும்.

**குளிர் சுரம் அனுபானம்**;

வெந்நீரில் கலந்து சாப்பிடவும்.

**மூலச்சூட்டுக்கு அனுபானம்**;

பசுவின் நெய், அல்லது தயிரில் கலந்து சாப்பிடவும்.

**விஷப்பாண்டு, மகோதரம் பெருவயிறு இவைகளுக்கு அனுபானம்**;

தேன் அல்லது இஞ்சிச் சாற்றில் கலந்து சாப்பிடவும்,

**சகல சன்னிக்கு அனுபானம்**:

தேன் அல்லது இஞ்சிச்சாற்றில் கலந்து சாப்பிடவும்.

இன்னும் சில கொடிய வியாதிகளுக்கு இந்த மருந்தினைக் கலிக்கம் முறையிலும் உபயோகிக்கலாம். கண்விழிகளில் போடுவதற்குத்தான் கலிக்கம் என்று பெயர்.

**குறிப்பு**:

மேலே குறிப்பிட்டிருக்கும் மருந்தினைச் செய்யும் முன்னர், செய்யும் முறைகளை நேரில் பார்த்துத் தெரிந்துகொண்ட பின்னர் இந்தப் பரங்கிப்பட்டை பதங்கம் செய்யவும். இல்லையேல் பங்கம் ஏற்பட்டு விடும். எனவே, இந்த மருந்தினை முறையாகச் செய்து மேற்கண்ட நோய்களுக்கு முறையோடு கொடுக்கவும்.

சுவடி மருந்து முறை; 34

# மண்டையிடி, கபாலவலி இவைகள் நிவர்த்திக்கு வேப்பம் பட்டைத் தைலம் செய்யும் முறை

முத்தின வேப்பம் பட்டை துலாம் - க இடித்து
தூளாக்கு நாலு மரக்கால் செலம் ஒருமுடா
வில்விட்டு நாலு படியாக்க காச்சிக் கிஷாயத்தை
வடிகட்டி நாலுபடி நல்லெண்ணை விட்டு அஞ்சுபலம்
யேலம் பொடி பண்ணி போட்டுக் கைப்பக்குவத்தில
மெருகு தயிலத்தை யிறக்கவும் இந்தத் தயிலம்
விதானம் பண்ணினால் மண்டையிடி முதலான கபால
வாயுவுகள் தீரும். இச்சா பத்தியம்.

**விளக்கம்**;

நூறு வருடம் உள்ள வேப்பமரத்தின் பட்டைகளை ஐந்து கிலோ எடையளவு எடுத்துக்கொண்டு இந்தப் பட்டையைப் பெரிய கல் உரலில் போட்டு நன்றாக இடித்து ஒரு பெரிய பானையில் போட்டு, இத்துடன் ஐம்பது லிட்டர் அளவுக்குத் தண்ணீர் விட்டு நன்றாகக் கலக்கி, அடுப்பில் வைத்து நான்கு லிட்டர் அளவு வரும் வரை சுண்டக் காய்ச்சி இதன் கிஷாயத்தை வடிகட்டி இத்துடன் இரண்டு லிட்டர் நல்லெண்ணெயும் ஐம்பது கிராம் ஏலக்காய்ப்பொடியையும் கலந்து ஒரு பாத்திரத்தில் ஊற்றி இதனை மெழுகு பதம் வரும் வரை நன்றாகக் காய்ச்சி ஆறியபின் வடிகட்டிச் சுத்தமான பாட்டிலில் வைத்துக்கொள்ளவும்.

**தீரும் வியாதிகள்**:

மண்டையிடி, கபால வலி, கபால உஷ்ணம், கபால வாய்வு இவைகள் நீங்கும்.

**அளவு**:

இருபத்தைந்து மில்லி வீதம் எடுத்துத் தலையில் இருந்து உடம்பு முழுவதும் தேய்த்துக் குளிக்கவும்.

**காலம்**;

மாதம் இரு முறை தலைக்குத் தேய்க்கவும்.

**பத்தியம்**:

இச்சா பத்தியம் (புளி, உப்பு, கரப்பான் பதார்த்தங்கள் நீக்கவும்.)

**குறிப்பு**:

கீழ்க்கண்ட முறைகளிலும் மேற்சொன்ன வேப்பம் பட்டைத் தைலம் தயார் செய்யலாம்.

நூறு வயது ஆன முற்றிய வேப்ப மரத்தின் பட்டையை எடுத்துக்கொண்டு இதனை நன்றாக இடித்து ஒரு பெரிய பானையில் போட்டு இத்துடன் 40 லிட்டர் தண்ணீரில் கலந்து மூன்று லிட்டர் வரும் வரை சுண்டக் காய்ச்சி இந்தக் கஷாயத்தை வடிகட்டி இத்துடன் இரண்டு லிட்டர் நல்லெண்ணெயும் சேர்த்து ஏலக்காய், இலந்தை மரத்தின் வேர், பழம்பாசி, அக்கிரக்காரம் இவைகள் சமன் எடை எடுத்து அரைத்து மேலே கலந்து வைத்திருக்கும் எண்ணெயில் போட்டு மெழுகுபதம் வரும்வரை, நன்றாகக் காய்ச்சி ஆற வைத்துக்கொள்ளவும். இதனை இருபத்தைந்து மில்லி லிட்டர் அளவுக்கு எடுத்துத் தலையிலிருந்து உடம்பு முழுவதும் நன்கு தேய்த்துக் குளித்து வந்தால் வாதம், குட்டம், தேகக்கடுப்பு, செங்கரப்பான், புண்புரைகள் இவைகள் நிவர்த்தியாகும்.

மேற்சொன்ன பத்திய முறைகளைக் கடைப்பிடிக்கவும்.

**குறிப்பு**;

இந்த வேப்பம் பட்டையை மரத்திலிருந்து வெட்டி எடுக்கும் பொழுது மேலேயுள்ள காய்ந்த பாகங்களை நீக்கி விட்டு உள்ளிருக்கும் சதைப் பட்டைகளை மட்டும் எடுத்து உபயோகம் செய்ய வேண்டும்.

இதில் குறிப்பிட்டுள்ள கடைச்சரக்குகளைச் சம எடை வீதம் சேர்த்துக்கொள்ளவும்.

## சிரசில் (நீரேத்த மண்டையிடிக்குத் தயிலம்)

**மற்றொரு முறை:**

| | |
|---|---|
| கரிப்பான் சாறு | 1 லிட்டர் |
| ஆவின் பால் | 1 ,, |
| நல்லெண்ணெய் | 1 ,, |
| சிற்றாமணக்கின் வேர் | 35 கிராம் |
| பெருஞ்சீரகம் | 35 ,, |
| நொச்சியிலை | 35 ,, |
| விளாவரிசி | 35 ,, |
| அதிமதுரம் | 35 ,, |
| சுக்கு | 35 ,, |
| இந்துப்பு | 35 ,, |

மேற்கண்ட மருந்து வகைகளைப் பசுவின் பாலில் அரைத்து நல்லெண்ணெயில் போட்டுக் கலக்கி அடுப்பில் வைத்து எண்ணெய்ப் பதம் வரும் வரை காய்ச்சித் தலை முழுகி வரவும்.

**தீரும் வியாதிகள்;**

சிரசு நோய்கள், மண்டையிடி, கபாலவலி அனைத்தும் நீங்கும்.

சுவடி மருந்து முறை; 35

## அறுகம்புல் வேர்த் தைலம்செய்யும் முறையும் நிவர்த்தியாகும் வியாதிகளும்

அறுகம் வேராயத்துலாம் - க நூறுபடி தண்ணீர்
பானையில் விட்டு வேரை நன்றாய் யத்து வைத்து
தண்ணீ
ரில் போட்டு யெட்டொன்றாய்க் காச்சிக் கிஷாயத்தை
வரிகட்டி ஒரு படி நல்லெண்ணை விட்டு தயிலத்தை
மெழுகு பதத்திற் காச்சித் தயிலத்தை யிறக்கி
ஸ்நானம் பண்ணினால் உஷ்ணங்கள் கண் குளிருமிச்சா

பத்தியம், கற்றாழையை பூரலிலே போட்டிடித்துப் பத்துக் கடுக்காய் தோலியெடுத்துக் கூடப் போட்டு யிடித்து ஒரு நாழிகை வைத்து வைத்தால் தண்ணீராகும்.

**விளக்கம்**;

அறுகம்புல் வைரை ஒரு கிலோ அளவு எடுத்துக் கொண்டு இதனைக் கல் உரலில் போட்டு, நன்றாக இடித்துக்கொண்டு ஒரு மண் பானையில் போட்டு இத்துடன் ஐம்பது லிட்டர் தண்ணீர் நன்றாகக் கலக்கிக்கொண்டு அடுப்பில் வைத்து இந்த மொத்தத் கலவையில் எட்டில் ஒரு பங்கு வீதம் வரும்வரை நன்றாகச் சுண்டக் காய்ச்சி இந்தக் கிஷாயத்தை வடிகட்டிக்கொண்டு இத்துடன் ஒரு லிட்டர் நல்ல எண்ணெய் விட்டுச் சேர்த்து ஒரு பாத்திரத்தில் ஊற்றி அடுப்பில் வைத்து மெழுகு பதத்திற்கு வரும்வரை நன்றாகக்காய்ச்சி ஆறியபிறகுஇந்த எண்ணெயைச் சுத்தமான பாட்டிலில் வைத்துக்கொள்ளவும்.

**தீரும் வியாதிகள்**:

உடல் உஷ்ணம், கண் உஷ்ணம் நீங்கி கண் குளிர்ச்சியாக இருக்கும். உடம்பின் சர்மம் நன்றாக மிருதுவாக இருக்கும்.

**அளவு**:

ஒரு இருபத்தைந்து மில்லி அளவு எடுத்து உடம்பு முழுவதும் தேய்த்து இப்படிப் பன்னிரண்டு நாட்களுக்கு ஒருமுறை ஒரு மண்டலம் (நாற்பத்தெட்டு நாட்கள்) குளிக்கவும்.

**பத்தியம்**:

இந்த எண்ணெய் உடம்பில் தேய்த்துக்கொள்ளும் தினம் இச்சாபத்தியம் இருக்கவேண்டும்.

**குறிப்பு:**

மேற்கண்ட நிவர்த்திக்குக் கீழ்க்கண்ட முறைகளிலும் மருந்துகளைத் தயார்செய்து கொடுக்கலாம்.

சோற்றுக்கற்றாழை ஐந்து கிலோ எடைக்கு எடுத்துக்கொண்டு இத்துடன் பத்துக் கடுக்காயை உடைத்து எடுத்த தோலை மேலே சொன்ன கற்றாழையுடன் சேர்த்து உரலில் போட்டு நன்றாக இடித்து ஆறு மணி நேரம் வைத்து இருந்தால் தண்ணீர் மாதிரி நீர்த்து இருக்கும். இதனை வடிகட்டி இத்துடன் ஒரு லிட்டர் நல்லெண்ணெயுடன் கலந்து நன்றாகச சுண்டக் காய்ச்சி மெழுகு பதம் வந்து ஆறிய பிறகு வடிகட்டி சுத்தமான பாட்டிலில் வைத்துக் கொண்டு கண் ரோகங்களுக்கும் உடல் உஷ்ணம் இவைகளுக்கு மேற்சொன்ன விகிதப்படி இந்த எண்ணெயை உபயோகிக்கலாம்.

**இரண்டாவது செய்யும் முறை:**

அருகன்புல்வேர் இரண்டு கிலோ எடைக்கு எடுத்துக்கொண்டு இதனை நன்றாக இடித்து ஒரு மண் பானையில் போட்டு இத்துடன் (50) ஐம்பது லிட்டர் தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து இந்த மொத்தக்கலவையில் ஆறு லிட்டர் வரும் வரை சுண்டக் காய்ச்சி பின் இதனை வடிகட்டி இதில் ஒரு லிட்டர் நல்லெண்ணெய் கலந்து ஒரு பானையில் ஊற்றிக் கோரைக்கிழங்கு, பூமிச்சர்க்கரைக் கிழங்கு, அமுக்கிராக் கிழங்கு இவைகளை வகைக்கு 50 கிராம் எடை வீதம் எடுத்துக்கொண்டு கல்வத்தில் போட்டு பசுவின் பால் விட்டு நன்றாக அரைத்து மேற்செய்து வைத்திருக்கும் எண்ணெய் கலவையில் இதனையும் சேர்த்து ஒன்றாகக் கலந்து அடுப்பில் வைத்து எண்ணெய் பதம் வரும் வரைக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு மேற்சொன்ன வியாதிகளுக்குக் குறிப்பிட்ட அளவுப்படி உபயோகிக்கவும்.

**சுவடி மருந்து முறை; 36**

## குமரித் (சோற்றுக் கற்றாழை) தைலம் செய்யும் முறைகளும் இதனால் நிவர்த்தியாகும் நோய்களும்

பெருமை சொல்ல வியப்பாகுமாயில் பட்டை காணே(யரு)
காணுகின்ற நாகவல்லியிசங் குலைச்சார் கற்றாழைச்சார்
வகைக்குப் படி கால் வீதம் பூணுகின்ற யெண்ணை தன்னில்
விட்டுக் காச்சாயப் புகழ் பெரியருப்ப வலின்ற யிலத்துக்குத்
தோணுகின்ற கரி மஞ்சள் கஸ்தூரி மஞ்சள் தூய்மையுடனுன்
வகைக்கு வேர் பலமதாகப் பேணுசின்ற விரு வகையும்
சேத்தரைத்து பிரிய முட னெண்ணை தனிற்
கலந்துகொள்ளே(யச)

கலந்து கொள்ளு மெண்னைத்தனைக் காச்சி போமதுகைய்
முறையாய் மெழுகு பதந்தனில் வடுத்து
வுலகிலுள்ளோர் பத்தியுடன் மூழ்கினாக் காலொடு மேயொரு
நொடிக்கு யேய்களெல்லாஞ் நிலந்தனிலே யின்னூல்
போலான்றுக்
கானே நேர்மையுள்ள வீடு தூற்றியஞ் சுக்காகப்
பலவிதமாயத் தெளிவுடனே பகர்ந்து சொன்னோ
பண்புடனே யிப் பொருளைப் பாரு பாரே (யஎ)

பாரப்பா பற்பமுதல் தயிலத்துக்குப் பழுதில்லாக் கருக்
கிடையும் பாகந்தானுந் தேரப்பா வெளி தோனத் சொல்லிட்
திறமையுள்ள சஞ்சீவிதன்னை யாறு நேரப்பா விநாதூலே
நித்தியமாகு நினைவுடனே மறந்து விட்டாலியானென்
செய்வேன்
காரப்பா பூமிக் குத்துணையைப் போலக் கருதினேனித்னி
கண்டுகொள்ளே. (யச)

**முற்றிற்று**

**தேவையான மருந்துகள் விபரம்**

**விளக்கம்**;

| | |
|---|---|
| நாகவல்லி இலைச்சாறு | 1/2 லிட்டர் |
| கற்றாழைச்சாறு | ,, |
| சங்கு இலைச்சாறு | ,, |
| கரிமஞ்சள் | 35 கிராம் |
| கஸ்தூரி மஞ்சள் | 35 ,, |
| நல்ல எண்ணெய் | 1/2 லிட்டர் |

மேற்குறிப்பிட்டுள்ள சாறு வகைகளை அரை லிட்டர் நல்லெண்ணெயில் கலந்துகொண்டு மஞ்சள் வகைகளைப் பால் விட்டரைத்து இதனை மேல் கலந்து வைத்திருக்கும் கலவையில் இதனை எல்லாம் ஒன்றாகக் கலந்து நன்கு கலக்கி ஒரு பானையில் ஊற்றி அடுப்பில் வைத்து எண்ணெய்ப்பதம் வரும் வரை காய்ச்சி வடிகட்டிப் பாட்டிலில் ஊற்றி வைத்து இதனை மேல்மூடி போட்டு நன்றாக மூடிய இந்த எண்ணெய் பாட்டிலை நெல் குவியலில் (12) பன்னிரண்டு நாட்கள் அதனுள் வைத்துப் பிறகு எடுத்து உபயோகிக்கவும்.

**அளவு**:

(25) இருபத்தைந்து மில்லி அளவுக்கு எடுத்து மாதம் நான்கு முறை தலை முழுகவும்.

**தீரும் வியாதிகள்**;

அஸ்திசுரம், சகல மேகப்பித்தம், வறட்சி, குன்மம், பாண்டு, உடல் வெறுப்புத் தீரும்.

**பத்தியம்**;

குளிர்ச்சியான உணவு வகைகளை நீக்கவும்.

இரண்டாவது முறை:

| | |
|---|---|
| கற்றாழைச்சாறு | 1½ லிட்டர் |
| செவ்விளநீர் | 1½ ,, |
| பொற்றலைக்கையாந்தகரை | 1 ,, |
| நெல்லிக்காய்ச்சாறு | 1 ,, |
| கரிசாலைச்சாறு | 1 ,, |
| எலுமிச்சம்பழச்சாறு | 1 ,, |
| இலவங்கம் | 35 கிராம் |
| ஜாதிக்காய் | 35 ,, |
| கோஷ்டம் | 35 ,, |
| தாமரைக்கிழங்கு | 35 ,, |
| சிறுநாகப்பூ | 35 ,, |
| வசவாசி | 35 ,, |
| வெட்டிவேர் | 35 ,, |
| அகில்பட்டை | 35 ,, |
| இலவங்கப்பத்திரி | 35 ,, |
| பச்சைக்கற்பூரம் | 35 , |
| அதிமதுரம் | 35 ,, |
| சிறுதேக்கு | 35 ,, |
| திப்பிலி | 35 ,, |
| ஆவின் பால் | 1 லிட்டர் |

ஒரு பாத்திரத்தில் நல்லெண்ணெய் 1 லிட்டர் பால் அனைத்துச் சாறு வகைகளையும் ஊற்றி, மற்றக் கடைச் சரக்குகளை அரைத்து, இத்துடன் கலந்து காய்ச்சி எண்ணெய்ப்பதம் வந்தவுடன் இறக்கி வடித்துக்கொண்டு தலைக்குத் தேய்த்துக் குளிக்கவும்.

சுவடி மருந்து முறை: 37

## மேகவாய்வு, சூலை, காய்ச்சல், கரப்பான், கிரந்தி, அரையாப்பு இந்த நோய்களுக்கு மருந்து

ரசமாச கற்பூரம் சாதிலிங்கம் சல்வீரம் கெந்தமளியெல்லா
முள்ளுக் கீரைச் சாற்றில் ரெண்டு சாம மரைத்து யளு புளி
ரசத்தில் ரெண்டு சாம மரைத்து குண்டுமணிப் பிரமாணு
உண்டை
செய்து நிண்ணுலத்தி வைத்துக்கொண்டு பசை புளி நீரில் ஒரு
உண்மையாக உதையும் சாயந்திரடின் குடுக்கவும் யிதனால்
தீரும்
வியாதி மேக வாய்வு சூலை காச்சல் கரப்பான் கிரந்தி
யரையாப்பு
யிது முதலான வியாதி தீரும் மூன்று தடவை காப்பன தள்ளி
யிச்சா
பத்தியம் தலை முழுக மிளகு ஓமம் பாலிலாவுதுங்டி நீரிலாவது
முழுக்கவும்.

**விளக்கம்**:

மேலே குறிப்பிட்டு இருக்கும் வியாதிகளுக்கு மருந்து செய்யும் முறையினைப்பற்றி மிக விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

**தேவையான மருந்துகளின் விபரம்;**

| | |
|---|---|
| ரசம் நான்கு கிராம் இரண்டு மி, கிராம் (4.2) | |
| கற்பூரம் | ,, |
| சாதிலிங்கம் | ,, |
| வீரம் | ,, |
| கந்தகம் | 50 கிராம் |

இவைகள் எல்லாம் மிக விஷத்தன்மை உள்ளதுதான். இருந்தாலும் இதனை எல்லாம் கல்வத்தில் போட்டு முள்ளுக்கீரைச்சாறு விட்டு ஆறு (6) மணி நேரம் நன்கு அரைத்து விட்டு மறுபடி புளி ரசத்தில் ஆறு (6) மணி நேரம் அரைத்து இதனை சின்னக் குண்டு மணி அளவுக்கு உருண்டைகளாகச்செய்து, நிழலில் பத்திரமாகக் காய வைத்துக்கொள்ளவும்.

**உட்கொள்ளும் அளவு:**

மேற்படி மருந்தை ஒரு குண்டுமணி அளவுக்குச் சாப்பிடவும். (130 மில்லி கிராம்)

**காலம்:**

முதலில் மூன்று நாளைக்குச் சாப்பிடவும். பிறகு வியாதிக்கும், உடல் நிலைக்கும் ஏற்றபடி மருந்தைச் சாப்பிடவேண்டும்.

**தீரும் வியாதிகள்:**

மேகவாய்வு, சூலை, காய்ச்சல், கரப்பான், கிரந்தி, அரையாப்பு.

**அனுபானம்;**

புளி கரைத்த தண்ணீரில் கலந்து சாப்பிடவும்.

**பத்தியம்:**

இச்சா பத்தியம்

**குறிப்பு:**

இந்த மருந்தைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது தலை முழுகினால் மிளகு, ஓமம், பசும்பாலில் அரைத்துத் தலைக்குத் தேய்த்து நீரில் குளிக்கவும்

**சுவடி மருந்து முறை: 38**

## மனித அவயங்களின் ராசி பலன் பற்றிய சுவடி விவரங்கள்

1) முந்தியே பெற்றெடுப்பன ஒணியான மணி தெலின்
வாசஞ்
செல்வம் புலால் நாற்றமாயிருந்தார் புத்திரரு............
தாணு மருகல் மணம் வருமையாகு மணி சிவர்
தாவென்னாருஞ் செல்வ
முண்டார் துளிவரகக் கருத்திருந்தால் துன்பமுண்டு
தூய
திருந்தாய் வியாதி சொல்லே. (அயஉ)

மனித உடம்பில் சுரக்கும் வேர்வை நாற்றத்தின் ராசி பலனைப்பற்றி இந்தப் பாடலில் குறிக்கப்பட்டுள்ளது.

2) வெறுவலா திரிதாரை யொண்டுயவரைந்து துரை
பாயும் மாகில்
நலம் பெறு மாசம் ....... ரண்டேடு நாக்கு நன்மை
மலர்ந்தது
துசிந்திப் பாயில் வருமையாய் மூன்று கிராம்
கலந்திடத்திரியுமாகில்
கூட்டமே ... மென்னே. (அநு)

மனித மூத்திரக் குறியின் பலனைப்பற்றி மேற்கண்ட பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) வீரிய முத்திர நாரிள் மெத்த பத்திரியாவன சீர்ய
இளநீர் வாசஞ்
கிறயான் ச மிகுதியுண்டாம் வா............சுண்ணாம்பு
வாடை
வருமையே வளருமென்க உளருதாமரைப்பூ வாசம்
உலகத்தை
யாகு மென்னே.

மனிதனுடைய மூத்திரக்குறியின் யோகம் பலன் பற்றி மேற்கண்ட பாடல் தெரிவிக்கின்றது.

4) சொவுருவி பெண்டிளப்பன் சோகையா தம்மைக்
கூடா
அரருமை தீரம் புல்ல அவனியிற் கிடையாதாகும்
பாற்றிருமளகு
வெள்ளை பழுப்பேனிலு சீந்த போக .......... கஞ்சி
பேலே
யிருந்திடிர் கொளிப் போகம். (அயகு)

மனிதன் ஸ்திரீகளுடன் கூடும் பொழுது வெளிப்படுகின்ற சுக்கிலத்தின் தன்மை மற்றும் மணம் ஆகியவற்றில் பலா பலன்கள் பற்றி மேற்கண்ட பாடல் தெரிவிக்கின்றது.

5) வீசந்தானி ரண்டு மொத்தால் விழங்கிய அழகாயித்
டெல்லவருமையாகும் வலக்கில் வலஞ்சுனியன்னிய
போகமுண்டாமிகி தானியிடஞ் சுளிதான் விரத்தியாவ
வில்லை யெனிலா பெ.......யென்னலாகும் சின்ன
வாயிடம்
புரியேலக்கிரி மானாம் சீரியவலஞ் சுளியிகளப் படுவன
(எ அ)

ஆண் குறியின் தன்மை மற்றும் அதன் அமைப்புப் பற்றிய யோகம் பலன்கள் பற்றி மேற்கண்ட பாடல் தெரிவிக்கின்றது.

6) முதுகில் மயிர் மிகுதிதிரு ..... திரிபானாலன் மொழிந்த
மயிர்லுப முண்டெலம் பயந்தானுண்டாம்
உதிமுதுகு ரெண்டானால்
வழக்காகு மொரு முதுகாயிடுந்திடிவேர் .... மந்தன்
அதனடுவே வலஞ்சுளிதானாயிது துண்டாம்
தலத்திலிடம் புரி தான்
பரவியாவனிதிலிரெண்டு வலம்புரியே வெற்றியாகு
மிடம்
தொளி ரெண்டிருந்தாலக் காமியெண்ணெ (எக)

ஒன்றாவலம் வுன்றிடமாய் முதுகில் வந்தால் உலகமெல்லா மங்கங்கே.

போலன் மணரிலே மூன்று சுளி வருமை யாரும்
வலஞ்சுளிதானொன்று
மிலேல்மல்டனா வன்னரி சோரன் குறித்த.........

**விளக்கம்:**

மனிதனின் முதுகில் காணப்படும் உரோமம். மற்றும் அதன் அமைப்பு ஆகியவற்றைப் பற்றிய பலன்களை மேற்கண்ட பாடல் தெரிவிக்கிறதாகும்.

7) நலமாக ஆறு விரலிக்கிற செல்வம் இன்று
சொன்னேன்
னேழு விரலாசனாவன் யெட்டு விரலாயிது தேவரி
யம்பலா
குலந்தானென்பது துண்டேல வித்தையாகு மை யிரண்டு
விரலுண்டேறு
போக்கும் தங்கு பதினொன்று வெகு பாவி.... ......சாரு

**விளக்கம்:**

மனித விரல்களின் பலனைப்பற்றி மேற்கண்ட பாடலில் குறிக்கப்பட்டுள்ளது.

8) மனித லிங்கமணி சிறுக்கிருந்தால் இந்திரியம் நில்லா...
பிடரி தானு யாந்து தொன்றிலது தாளவில்லாச
முண்டாந்து.........தீ
மல்லறுமை தாமே. (ருயகா)

**விளக்கம்:**

மனித லிங்க அமைப்புப்பற்றி மற்றும் அதன் தன்மை பற்றிய பலா பலன்களை மேற்கண்ட பாடல் தெரிவிக்கின்றது.

9) மனித இரு தோல்களில் செல்வ மிவை தாளில்
ஆணளில்லைச்
சரி சமனாயிருந்தால் தானி யோர்க் கதிவுண்டாக்கும்
விரிசையாஞ்
தோளில் மயிரது மிகுதியானால் முருகு வண்குழலாய்
நெஞ்சி நினித்தது முடியா தென்னே. (நுய)

**விளக்கம்**:

மனிதனுடைய் தோள்களில் அமைப்பு மற்றும் அதில் காணப்படும் ரோமம் பற்றிய யோகப் பலன்கள் மேற் குறிப்பிட்ட பாடலிலிருந்து தெரியவருகின்றது.

10) அக்குள தானு யாந் திடானும் .......லுள்ள மயிர்
கறுத்துத்
தூகொது மில்லா தேனுஞ் சுருதி சேடுங்க மான்வன
மிக்கதுர்
கெந்த முண்டாய் மேவுகக்குளை ராறில்....களுங்
கண்ணாய்
காமலிகாரியாப் வருந்துவானே. (லுய)

**விளக்கம்**:

ஆண்களில் அக்குளில் காணப்படும் சுளிகள், அமைப்பு மற்றும் அவற்றில் கிராமம் தென்படின் அதனால் உண்டாகும் பலன்கள் ஆகியவை மேற்கண்ட பாடல் மூலம் தெரிய வருகிறது.

11) ரிஷப மூத்திரத்தைப் போல் எரிந்துதாரு
மாகிலச்சு.....
போகு யாவன சுண்ணாம்பு நாற்றத்துக்கும் குவிபட
இளநீர் வாசம் கொண்டிடில் நிரம்பு போகித் தவிரம்
புண்டரீ
வாசந்தழுவுள வேகு மின்னாரை (சஉ)

**விளக்கம்:**

மனிதன் தான் கழிக்கும் சிறுநீரில் மனம் வெளியேறி விழும் தன்மை மற்றும் ஓசை இவை பற்றிய யோகபலன்களை மேற்குறிப்பிட்ட பாடலிலிருந்து அறிகிறோம்.

12). மயிரது சிவந்து மிக்காய் வந்திடில் வருமை பாவி
செயரில்லாவுலக மெல்லா மலைந்து போ......
வனகண்டாய்
கயிரவ வாசமின்னே கைகண்ட கண்ணிலங்கே குயி
ரரும் மயிரொன்றின் நெலக் கொளி போகத்
(தனாமே (சநு)

விளக்கம்;

மனிதன் தலையில் காணப்படும் மயிர்களின் நிறம் மற்றும் அதன் அமைப்பு ஆகியவற்றைப்பற்றிய பலாபலன்கள் இக்குறிப்பிட்ட பாடலிலிருந்து தெரியவருகிறது.

13). மனித செல்வன் ............. காமது ..........
இருவிரலு யாமானாலாயிறு பெறயோதும் வருமைந்து
விரல்
மேலெல்லாம் வருமை சஞ்சலமே வஞ்சன் மிருது
வாய் கரிரெ........
.......வெகு செல்வமள காயித்தாம் பெருமையே
மனசுலேசம்
பருதினரேல மிடியனாமே. (சரு)

**விளக்கம்;**

பெண்களின் விரல்கள் மிருதுவாக இருப்பதின் பலனைக் குறிக்கிறது.

14. சிறுவிரலணி விரற்கே சேர்ந்துடன் .... நின்றால்
உருதியாய் வயது நாறும் பூங்கனி விரற்கு
மேலாமிரையின் மேல்
நடுவேநின்றா வியம்பிடு தொன்னூறாகும் குருவி
மலவரையினின் றாலச்கூரிடுவயதென்பானே (சசா)

நடுவிரல் நடுவெய்ந்தச் சிறுவிரல் நாடி நின்றால்
யிடுலய
தேழுத்து ........... சாமிரக்குகளை வரையிலின்றாபடு
பார்கில் கீழ் நடுவே வந்தால் வயதறுபதாமதினிர்

விளக்கம்:

மனிதனின் வலது உள்ளங்கையில் சுண்டுவிரலுக்குக் கீழ் காணப்படும் ரேகைக்கு ஆயுள் ரேகை என்று பெயர். இந்த ரேகையின் அமைப்பு அது ஆரம்பம் மற்றும் முடிவடையும் இடம் ஆகியவற்றை வைத்துக் ஒருவனின் ஆயுள் காலத்தைச் சொல்லும் பலாபலன்களை மேற்கண்ட பாடல் தெரிவிக்கின்றது.

15. சங்குச்சாரம் போலுள்ளங்கையிலே தானிருந்ததால்
அங்
கையில்பொருள் கைப்பாக்கிய நித்தம் வந்தினியு
மென்க
ரேகையிது செவ்வமிய மாட்டான் வெண்குடை
போலிருந்ததால்
வீரியானாவானே (சயஅ)

விளக்கம்:

மனிதன் உள்ளங்கையில் சங்கு சக்கரம் போன்ற ரேகை இருந்தால் பொருள் வருத்தும் சிலவுமாயிருக்கும் என்பதை மேற்குறிப்பிட்ட பாடல் மூலம் அறிகிறோம்.

பலதிரட்டு-16

16) கும்பமே பெரும் கொருள்ளா .......... மதி விடிந்து
வானாம்
நம்பு சாமரையிருந்தால் நாற்பலமொடு வாள்வான்
அம்புயமிருந்த
தாலென்றும் அவள் பங்கு வத்தி ......... மிடியுறு
வஸ்தடைக்
கண்மிகும் நுன்மையாகுமிடமுறுதுடை மறுக்களின்
மாஞ்
சுளிக்குமா ........... குழப்பதளமும் வேணும் முருபார்
லோக்கிர
காமா பழிப்புற நீளில் குற்றம் வருத்திடினு
ரோமங்கரம்.......
களிக குந்தனைத்திருந்து னைவங் கந்தண்டி
பெற்றோர் சாலாம் (எறு)

**விளக்கம்:**

பெண்களின் கண் அமைப்புகளினால் தெரிந்து கொள்ளும் பலாபலன்களைத் தெரிந்து கொள்ள மேற்சொன்ன பாடல் தெரிவிக்கிறது.

17) பாதமும் விரைமு வைத்து வதும்மா...............
வேர்த்திரபுகாதே
கோதுறும் பெரும் விரற்கே குறையினால் விரலுஞ்
செல்வ மோதிய குதி (எலு)
...........வரே
வட்டமாய் நாமடிபாதிநெரிதாய வளையில் லஞ்சும்
வட்டிடங்
கானின்னம் ....... யப்பாத்தடங்கிரி கனி துவாக்குய
வானாஷ்ட்ட
மொட்டிய விரல்களென்னினுடையவன் தொழுது
கால் இனியவாகக்

முரைத்து கவரமணலிட்டெழுந்து கைகொடுத்து
பசரித்து வோலே
புளியுரை சான்யோ தம்முட புண்ணிய புருடனாமே
புருஷலட்சணம் (எய சா)

**விளக்கம்**;

மனிதனுடைய பாதங்களில் காணப்படும் விரல்களின் அமைப்பு, அதில் காணப்படும் நரம்புகள் ஆகியவற்றை வைத்துச் சொல்லும் பலாபலன்கள் மேற்குறிப்பிட்ட பாடலில் நாம் காண்கிறோம்.

18) தொந்தி வாட்டமாயிருந்ததால் நோய்தானுண்டு
தோரழுந்த திமும் மடிப்பானால் வறியவனாவன்
முறையிரண்டு
மடிப்பானால் வெற்றியாகும் முந்தியதோகும் மடிப்பி
நல்ல பொசி.....பொய்யில்லை யொரு
மடிப்புமில்லை யென்னுலை குலானே. (எசா)

**விளக்கம்**:

வயிற்றில் காணப்படும் மடிப்புகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் அதன் பலா பலன்கள் மேற்கண்ட பாடலின் மூலம் தெரியவருகிறது.

19) நாபினால் வளையமுள்ள ரோமெல்லா நாபியை
நோ........
செல்வமுண்டாம் நாபி வலஞ் சுனியாகிலாசனா
வனைமில்லவா
துடஞ்சளியேல் வருமையாவனாபியாளஞ் திருந்.......
குணவானா லன்ன மையாடி யாந் திருந்தாலந்
தலைவனாகு நாபி
தானிண்டிருந்ததால் வாத மாடும் நல்ல பசி
மிகுதியே.....
... ... ... ... ... ... ... லில்லாமே (எஎ)

**விளக்கம்;**

மனிதர்களின் நாபியின் அமைப்பு மற்றும் அதில் காணப்படும் சுழிவகைகள் ரோமம் இவைகளைப் பற்றிய பலாபலன்கள் இங்கு குறிப்பிட்ட பாடலிலிருந்து அறிகிறோம்,

20) மனிதருட விலாப் பக்கந் தன்னிலே தான் மயில்
நரம்பு
யில்லை யெனில் செல்வமுண்டாம் வலிதமாய்.........
தானின்மை வேறு
விதா யேலும் தானுந்த தோன்றிடில் மிடிய தாருள்
தொறுவிய
நரம்பு தோன்றில் துகரமா மென்று (சாக)

**விளக்கம்;**

மனிதனின் விலாப் பக்கங்களில் காணப்படும் நரம்புகள் மற்றும் உரோமங்கள் ஆகியவற்றை வைத்துச் சொல்லும் பலா பலன்கள் இக்குறிப்பிட்ட பாடலில் காண்கிறோம்.

21) வாளிய முளநகைச் சந்தில சுளிவிதான் மூண்
டெல்லத்
தாவிடச் சுளியெலுந்தன் தரு முளங்கைக்கு மேலே
....கீல்
மட்டுக்கு மயிரின் ரேவ் வாகனாகும் மானிய
மயிர் துண்டெலுத்துன்ப
மாய்ப் பகரலாமே. (எய)

**விளக்கம்:**

மனிதனின் முழங்கையின் பலன் குறிக்கப்பட்டு உள்ளது.

22) அவாவாங்குலத் .... நான்கு மார்ப தாக்கிக் கவரிமுகட்
கழட்டுகளுக் கொரு ரேகை காவிலப்விலி
போர்க்குத் தலைவனாகிப்
...முழுது மாளவன் இவையெந்த மட்டும் குன்றி மட்டரி
வனென்னே

**விளக்கம்**:

தலையின் பலனைப் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது.

23) அவ்விடம் மயிர் மருந்து நெரு ...... வருமை
யாகுஞ் செவலி
தாய் மயில் சிறுத்து நெருங்கிடி வழமு செய்யு
யிவ்விட மயில் பிளந்த
மார்பிலே தாள் படிவஞ்சுளியிருந்தால் திக பாக்கிய
வான் பாரே.

**விளக்கம்**;

மனிதனின் மார்பில் காணப்படும் உரோமம் மற்றும் அதில் காணப்படும் சுழிவகைகள் ஆகியவற்றன் பலா பலன்கள் மேற்குறிப்பிட்ட பாடல் மூலம் தெரியவருகின்றது.

24) இடஞ்சுளி வறுமையிட்டு யிரு முலைக்காம்பு ...
சாலாகும்
திடம்படப் பருந்திருந்தால் வீரிய மலி வேதில்லை
மட்டும்
படியவன் ..... .....னோங்கிய ... ... திரங்கான முட்டல்
குவியோத்தால்
நன்மை.

**விளக்கம்**;

மனிதன் மார்பில் காணப்படும் இரு பக்கங்களிலும் உள்ள முலைக்காம்புகள் பருமன் அளவு பற்றியும் அதனால் ஏற்படும் பலா பலன்களை மேற்கண்ட பாடல் மூலம் தெரியவருகின்றது.

25) வயிறு மாசனம் பொன்னின் மயக்க முப பசியுறு
தவளை
போத்தாவாவிலை யோந்தான் நன்மையுமா யோர்
மடின்புண்டாகி
வுறுமிரெண்டு காமம் முறு மூன்று சுலலி நா .......
முதுகிலும்
விலாப்புறுத்துஞ் சுந்தர வலஞ்சுழிக்குத் துன்பம்

**விளக்கம்**:

மனிதனின் தொடையினுடைய அமைப்பு மற்றும் அதன் கடின, மிருது, தன்மைகள் பற்றிய பலாபலன்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

26) கல்லணை கானை போன்ற கன்னமேடி விரவோடு
இன்பம் சொல்
லிடம் வலிஞ்சு துன்பமுஞ் மின்பஞ் சொல்க
மெல்லியகவுள் யெலி
காணமீது நோக்கிடுமு ரோமம் வில்லும் வேர்
பிளையும் போன்ற
மீசைவல்லைஞ் செய்யும் நாலாஞ் குலத்திறகலந்து
திடவரை காணான்
குஞ்சுவித்து மேனரம் பொழாமாலங் கிடில்லா
மவுன்டாகு
மிழு குற்றயிடப்படினே யிழையாக கும்பழுந்து
செப்பு
பாலிகை யோக னென்றே.

**விளக்கம்**:

மனிதன் காது ஓரங்களில் இருக்கும் ரோமங்களின் பலனையும், விரல்களின் மேல் இருக்கும் ரோமங்களின் பலனையும் இப்பாடல் குறிக்கிறது

27) புயமொரு முன் மகன்ற செல்வந்தாயில் வயித்திக
முழுரோமம்
விந்திடில் விகாரியாகு முயல் காக்கஞ்சங் காந்தன்
முடிப்பந்
துரில் நெந்தாகும் பய ........... துண்டந்கமு நன்றே.

**விளக்கம்**:

மனிதர்களின் தழின் உள்ள ரோமத்தின் பலனைப் பற்றி இப்பாடலில் கூறப்பட்டுள்ளது.

28) இலிங்கமே விரலாற்லி அளவாக மேழாகிற
குலங்களில்
செட்டா குற குணாடா வாயுடயிரக்கம் பலன் கொள்
ளொன்ப
குதேல வித்தை பத்தெனில் விந்து நீ...........
பதினுருளிரறுன்புமே நோயு மென்றே

**விளக்கம்**;

மனித லிங்க பலனைக் குறிக்கிறது.

29) பீசமை யிரண்டு மொத்தும் பிரிந்து தாழந் தேறி
லாபனமாசறு பொல்லிந்
தாகுள ............ மோகம் தே சுறுங்க ராசி போலச்
சிறுத்திடில் மகவு மீதாம்
வாசமாய் சரி ரெண்டிருக்குக் மலடு பாரி சமுந்
தீங்காம்

**விளக்கம்**:

மனித மீசையின் தோற்றத்தின் பலன் குறிக்கப்பட்டுள்ளது.

30) துடைபெறுங் கதவிசந்து தொட் டொருமுளமே
வெற்றி
யடைவுறு ரோமம் கோபிலஞ்சக மென்று மொலி
மாத்திடருன்
வானுன்னீர் பலவிதங் குடிலஞ் செயலான
பூ,ஷீயா முன்பு
வைத்தே புகழவன பிள்ளி சாஸ்வா சிரசஷீயாய்ப்
பத்துக்
கொன்று செப்புவாய் செயஞ் செய்வானே.

**விளக்கம்**:

மனிதனின் தொடையின் தோற்றத்தில் உள்ள பலன் குறிக்கப்பட்டுள்ளது.

31) கட்டுரை வாயக்கலிவாய் கும்பிக்கல் ..........
லிஷ்டம் முருக்குக்
கொவ்வை விரி மூவுரி னோயின்னாங் குட்டையு
மொத்தியின்றி
குமிழில் மூவிரல் மூக்கின்ப மட்டினமே தத்தம்
வறுமை முத்தோம்கின்னரே.

**விளக்கம்:**

மனித மூக்கின் அமைப்பைப் பற்றிய பலன் குறிக்கப்பட்டுள்ளது.

**சுவடி மருந்து முறை: 39**

## இரும்பைச் சுத்தி செய்யும் முறை

ஊமத்திலைச்சாறு விட்டரைத்துக்கொண்டு கானம்
வாரு வில்லை கட்டிப் புடத்தில்ப் போடுகனபாக
யிப்படி யஞ்சு விசையே கேளு தினபாரு புடம் போடச்
சுன்ன மாச்சுச் சிவமே காணும் திவரைப் பஞ்சாமே
அஞ்சான யிரும்பு பலமடித்து நீட்டி யாதனையின்
இளங்கும் நெல்லிக்காயுஞ் சேர்த்து பிஞ்சாம
யிடித்துச்
சாறபிளிந்து இரும்பை வேக வைத்துப் பதிமூன்று
தாமே
சாய்த்துத் மூன்றுனாளான பின்புதுஞ்சவே சாயவொ
யெருக்கலம் பழுத்தில் சொரி சாமுவரைத்துக் குகை
யுண்டாக்கே.

உருக்கவே குகை பதினொன்று கும்ப்பார் ஒரு விசைக்கு
விசைவேரே குகை செப்யப்பா அருக்கவே யெருக்
தலையில்
பழுத்தலவாட்டி யதில் சாயவொரைத் மருந்தே
வேணும் பெருக்கமே சொல்ல வில்லை யிரும்புச்
செம்பு போசரிய வித்தையடா பெசிப்பாரு சுருக்கவே

கண்டு கொண்டு யிரு நரிவை பாகு சொல்லியிச்செம்பு
குட்டிப்பாரே குட்டிப்பாறு நாறு கரந்தை
பொன்னாங்கண்ணி சூடிய பொற்றழலை கையான
மூன்று கேளு
நாட்டியதோர் வகை வகை ஆலாமப்பா நன்றாக
வெவ்வேறேயுலர்த்திச்சுட்டு ஆட்டியதோர்
சாம்பலிலே
செலத்தை விட்டு அதைக் கலக்கி வெவ்வேற்
பாண்டத்திட்டு
மூட்டியதோர் தெளிவிறுத்துப் உப்புக்காச்சி
மூன்றுப்பும்
வெவ்வாறே வைத்துப்பின்னே
வைத்தட்டி கண்டங்கத்திரியினுப்பும் வாகாண நொச்சி
யுப்பும் விராலியுப்புத்து.

**விளக்கம்;**

இரும்புத் தூள்களை ஊமத்தையிலைச்சாற்றில்விட்டு மூன்று மணி நேரம் அரைத்து வில்லைகளாகத்தட்டி காய வைத்து ஓட்டில் வைத்துச் சீலைமண் செய்து கஜபுடம் போடவும். இப்படி ஐந்து தடவை புடம் செய்து மாதளைக்கிழங்கு நெல்லிக்காய் இவற்றை அரைத்துச் சாறு பிழிந்து மேற்படி இரும்புத் தூள்களை எடுத்துக் காயவைத்து 13 முறை இந்தச்சாற்றில் போட்டு எடுத்தால் சுத்தியாகும். இப்படி மருந்து செய்யும்பொழுது அரைப்பதமாக இருக்கும். மறுபடி மூன்றாம் நாள் எடுத்து இதனை எருக்கன் இலைப் பழுப்பில் கவசம் செய்து வைத்துக்கொண்டு மருந்துசெய்யும் பொழுது தேவையான அளவு எடுத்துக்கொண்டு உபயோகிக்கலாம். இப்படிச் செய்தால் சுத்தியாகும்.

**சுவடி மருந்து முறை: 40**

## அக்காலத்து சித்தர்களின் கருத்துகளின் குறிப்பு

தன்னை யளந்த ... ... ... ... ... ... ...
தூங்கும் நீத்த மென்ற தோரருக்குள்ளே
யப்பா நேரான சித்தாவைப்பு நெடுங் காலமாச்சு
பலதிரட்டு-17

காத்த மென்ற காய சித்திசெய்ய வேண்டிக்
காசினியிலே
தையெடுத்துச் சிலவு செய்து வாத்த மென்ற கறிப்ப
முன்னும் வாரைக் காகும் வையகத் தொர்
ரசவைத்தார் (ளளந)

வாய்க்கயின்னஞ் சொல்லுகிறேன் மதுரைக்கி மேற்கே
மலையொவேன் வாரிலே அலையாதே வாங்கு கேளு
உண்ணின தோர் மதுரைக்கு வடமேற்காக
உறைக்கின்றேன்

அளகாமலையு காத்தானும்
நண்ணியிலே சுனையருகில் விரிச மொன்று நலமான
அதின்
கீளேசுனைதான் ஒன்று ஒண்ணயிலே அருளினையுட
உளாவபாயு
முலக்க தோரோடுவார் தீத்த மென்றே (ளளஉ)

தீர்த்தமென்ற அச்சுனையில் கிடார மொன்று
செயமான
ஆயக்கால் தன்னில் நூலைச் சுத்தே. (றகாஅ)

சுத்திதொர் தியதனை விளக்கிவிட்டு சுகமான முன்
தயிலந் தன்னில் வார்த்து பத்தியிரங்காராமைத்
தோட்டுக்குள்ளே பத்துகின்ற மைய்யதனைப்
பாண்டிக்
கொண்டு வெத்தியா முன் தயிலம் புத்துத் தேனும்
விதமாகக் சரியிடையாய்க் கூட்டி மத்திய சித்தியாம்
பதினாறு
வயசுசென்ற செலவாகைய யிலிட்டிடவே
தெரியுந்தூரம் (ளசாகா)

யெள்ளொடு அளிஞ்சி விரையிடித்துக் கொண்டு
யிதமாகக்
குளித்தயிலமிறக்கி யேதான் விள்ளாதே பாணியிலே
அடைத்து

கொண்டு மென்னகையாள் பெண்ணினுடன் விலக்கச்
சீலை
தள்ளாமலச்சாளீளஞ்சதிரமாகத்தாளெடுத்துயதனில்
மூன்றுள பாத்தியே தான் கொள்ளு மட்டுந்திரிபிபோலே
உருட்டிக் கொண்டு குணமான வெள்ளெருக்கமாம்
வாலையடா
அவள் தானாப்பா வேறகும் யான் சொன்ன
தலங்களுக்கும்
வேத மில்லை பேதமில்லைப் பேசுறேனே. (கூக)

பேசுரது சமுத்திரத்துக் கப்பால் பத்துப்
பேறான கமுகையது மேற்கே சென்று
வீசுரதோர் கற்பங்கள் உண்ண வேணு
மெய்ஞானிக் கெங்குமாம்வே தாந் திரகு
ஆகிறதோர் தலம்திகம் நிலம்திகம் பாரு
அப்பனேகுளுந்த தலமாகுங் கூசர்
தோரென்ன வென்றால்ரா சநீ தங்கு
வலையத்தில் மனுநீதங் கொள்ளைபாரே. (எ)

பாரப்பா சமாதியிலே யிருக்கும் போது
பலபலவாந் தோளில் முரசும் செய்யும்போது
நேரப்பால் கூட்டங்குட லாக
நெறிகெட்ட சீஷர்க்கர் சேறக லாக
ஆரப்பா தனியேதா ளிருந்து கொண்டு
அளவாந்த வித்தையெல்லாம் ஆடு ஆடு
சீரப்பா தேகசித்தி யோக சித்தி
யெமானமலைகளிலே சேர்ந்ததுகொள்ளே (எக)

கொள்ளென்றகுமரிக்கு மேற்கே கேளு
கூறுவென்ப திங் காதங் குளமாம் பூமி
கள்ளென்ற பூமிகளில் பூமி னாதாம்
வினாந் தெடுக்கும் தலங்ககாயான விரித்துச் செல்வேன்
உளனென்ற காசிக்கு தெற்கே பத்து
உறவான கடினக்கி குள்ள பூமி யொன்று
யெள்ளென்ற பூமிக்குக் கிளக்கே தானும்

யிருந்துநாளி கைகுளத்த லமுஒரு பிறமாம்
வடபக்கந் தன்னிலேதான் கள்ளர் கல்லிலே
குகைதா னென்று
யுதிலை யொரு கருநெல்லி மரந்தா னுண்டு
தள்ளாத குகைதனிலே கற்பாணி
நாலு முண்டு வுதகமுண்டு தளங்கா னுண்டு
விள்ளாத வாலாச மொன்ற தாகும்
மேலான பரிசினமாம் வெதை யாமே. (எயகா)

ஆமென்ற நல்லிமலை வடச்சார்வு தன்னில்
திகமாஞ் .... ..... .... .... ..மட்டுமடைந் ததனைக்
கொண்டுபோய்நீ
விள்ளென்ற சிடை தானுள்ளே கொள்ளு
வெண்மையுா மண்டலத்
தில்ப் சாவு போச்சு தள்ளுமது சட்டையெல்லாந்
தள்ளுந்
தள்ளும் தயிலமென்ற உதகமது தானுமப்பா
யெள்ளவுயிரும்
பிலேற்போட யேமமென்ற வித்தையது
கைக்குள்ளாச்சே (எயஅ)
உள்ளானம் யெந்திரமாமலைக்குத்தான் லிங்கந்
தருவான்
கமண்டலமுந்தரிப் பார்பாரு அம்முடைய தீட்சைவிதி
யோக மாறக் மானந்த மூலகுரு வெட்முப்படியே
யாகுங்கும் மென்ற மெருவுக்குத் தெற்கே கேளு
கோடான
கோடி சித்தர் கூடினாரே. (எசா)

கூடினார் மேற்கிலுள்ள சித்தர் கோடி கூர்ப்பான
வயசவர்கி
யிருநூ ற்றிருவது தேடினால் வளர்தீயிது முளமும்
நாற்பது
வாஞ் சித்திக்கு மெருவுக்கு வடக்கே கேளு
நாடினால் வளரத்தீயிது நானூருக்கும் நலமான

வயசதுவு

முன்னிலாட்டி உளடினார் கிளக்கதிக முரைக்ககேளு
உத்தமனே வளர்த்தியிது நானூ ரெண்ணே (எஎ)

நூறாகும் வயசதுதான் முன்னிலாட்டி நூதனமா
மூன்றுதிசை சித்தருக்கு
பேறருந் தேக்கிலுள்ள சித்தரெல்லாம் பெருமை
மேத்தப்
பேசப் போகா ஆனாகும் நாலுதிசை சித்தருக்கும்
அடையாள
மென்னுடைய கரயாசமாகும் வீறாகும் கோனாது
நின்றவரே
குருவைக் காண்பார் குருக்கானார் னைகண்ட
குருடராமே
ஆனான ஆதாரத்தீட்சை யாரும்ப் புறத்தில் நின்ற
தொரு ஆருஞ் சொன்னேன் (உ௫)
ஆற்று வலி ரெண்டு தலமுஞ் சொன்னே னதில்
நிற்குமடசாமுஞ்சக்கரமுஞ்
சொல்லி வாசியது யேத்தஞ் சொல்லியே காடசர
பூரணமும்
யெடுத்துக் .... ...... ....... ....... .. ..........
யெல்லாங் கூறினேன் நான் கூத்தி விற்றயிடம்
வினைகளெல்லாங்கானா தோடுங்கண்டு
யில்வெயாதூரத்திற்
கட்டாக வைத்துடனே வாசியேறுங் கண்டுகொண்டு
யிவ்வெறாத்
தைப் பெரியோ சொல்லாங்கட்டினார் நூல்காணா
தென்றே (ய௫)

காணாது ஆணுமல்ல பெண்ணுமல்ல கருதிப்
பார்வையுமங்கி கருதிச்
சொல்லத் தோணாது ஒரு வொன்றும் போடு
வந்துவங்கி
நின்ற பூரணத்தை சொல்லிவிட்டேன் ..... ..... ....

யிருக்கிற போது வதுயெரு விலப் பொடம்போட்டு
யெடுத்து கலக் .... ... .. .. .கும்போது நெல்லிடை
பச்சைக் கற்பூரம் கூடக் கூடச் சங்காடிக் கொள்ளவும்.
காசமெல்லாம் போக மருந்து அரைபொடி கழஞ்சி
பொன்
னாங்காணி ... ... ....வேர் செம்பன் நெருஞ்சிவேர் கரு
வழகில் பவழம் முத்து கத்தாளை மணி ...... துத்தம்
துகே
வெப்பம் விரை புளியம்பூ தலையொடு இதுவெல்லாம்
சரி
ஒரு சாமம் அரைக்கவும் பழச்சாத்தில் ஒரு சாமம்
இப்படி
ரெண்.....செய்து உருண்டை பண்ணிக்கொண்டுக்
கண்ணிலிடவும்..........கண்ணுக்குக் குளம்பு அரமபொடி
யிருகளஞ்சி துத்தம் இது துரிசுக்கு இதுவெல்லாம்.....
செய்து ஒரு சாமம் காலிச செம்பு கொண்டு அரைத்துக்
குளம் பாக்கிக் கொண்டு பசுவின் .........
கொண்டு பானையிலடைத்துக்கொள்ளவும். இறுக்குத்
தீரும்
வியாதி கண்ணோவு அக்காம நீப் ....... தொன்னூத்
தாரும்
பொருக்கும் புழுக்கடிக்கு அஞ்சு அயிரைமீன் கொண்டு
வந்து
போட்டு ஒரு சீலையில் கள்ளி பால்லூ பிடி மீனை
பொதிந்து
கருஞ்சட்டி ...........மருந்தையெடுத்து இது ஒரு யிடையும்
குளம்பு ஒரு யிடையும் ஆக யிது ரெண்டு ..........
பலஞ்சாறு
விட்டு செம்பு கொண்டு ஒரு சாமமரைத்து யெடுத்து
சிமிளில்
விடவும் வெள்ளைக்காசு கனம் வேர் கொண்டு வந்து
பசுவின்
கோமியாதி...........வெள்ளாட்டுப் பாலில் ஒரு சுற்றி

வெள்ளாடு

கோமியத்தில் ஒரு சுற்றி ....... தோண்டு மறுபடி

யிலுமிச்சம்

பழச்சாறுவிட்டு செம்பு கொண்டு ........ கம்பனத்தான்

மருவுலரிலிங்க வின் மடவா ரெட்டென்ற வைக்கும்

பிரத்

தொலிற்கல்விகலேக மாயிரயினும் பகலும் விட்டுயாகா

மத்திரு விழா நடத்திய கற்குதாளி கல்விகெட்ட

ருய்பரா (யஎ)

எண்ணருற்பதம் மடந்தை யரியம்பையான

பராயெடுத்து தடுத்து

ரைப்பால் நன்னிய போதம் போயதிந்தது நாடியே

பூணவே

தேயலால் மண்ணுலகத்திட்டேயந்தாயேற்கை

வெறுவேறாய்

வகுத்தினும் பன்னிடுமொளி மாற்கடாம்

மென்றெடுத்த பகுதி

யே பன்பெனலாமான் களித்திடு மிளமை

தாடவந்த குறில்

கனெரிந்திரு யிரைபோலுகிரங்கி மோனியார்

நிறைந்த சிங்கா ....

கூர்ந்த கருதி சினங்கிடாசாம் முதலையஞ்சு

வைத்தனையில்

லாணவரே. (யது)

பேரன்னிண்டுரைதரும் பூவரையர் சொலும் நன்னிய

மொளிகனோம்

நயமாக யெப்பதவி யிழந்தோயிற் கலவி பண்ணீய

பின்னதின் ..........

யிருவி தென்ற மிந் நாட்டம்செயினை

குறந்தழுவின் கன்றி

மெதைய தாடனஞ் செய்து கவிசே படமதுகுற

யொண்டு

லிரவரல் நூலை கொண்டி வித கரத்
துக்குத் தோயந்திடனே ......... மென்று எந்த வொளி

**விளக்கம்:**

அக்காலத்துச் சித்தர்கள் தங்களது கூட்டத்தினருடன் கலந்து உரையாடிக் கொண்டிருக்கும்போது அவர்களது குறிப்பு இச்சுவடியில் இடம் பெற்றுள்ளது. இச்சுவடியில் இத்தகைய குறிப்பினைக்குறிக்கப்பட வேண்டிய காரணம் என்ன என்பதை இந்தப் பாடலைப் பிரித்துப் படித்துப் பார்க்கும் பொழுது சில மருந்து முறைகளையும் மதுரைக்குப் பக்கத்தில் இருக்கும் அழகர் கோயிலில் இருந்த குகையின் பக்கத்தில் ஒரு சுனை இருக்கின்றது என்றும் அந்தச் சுனையில் ஓடுகின்ற தண்ணீர் ஒரு தீர்த்தமாக இச்சுவடியில் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் காசிக்குப் பக்கத்தில் ஒரு கருநெல்லிமரம் இருப்பதாகவும் அதனைப்பற்றியும் இந்தப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனையெல்லாம் பார்க்கும் பொழுது அக்காலத்துச் சித்தர்கள் செய்து வந்த மருத்துவ முறைகளுக்காக எங்கெங்கு எந்தெந்த மூலிகைகள் எந்த எந்த இடத்தில் எந்தெந்த நீரூற்றுகள் இருக்கின்றன என்று தெரிந்துகொண்ட பின்னர்தான் சித்தர்கள் மருந்து முறைகளைச் செவ்வனே செய்து இருக்கமுடியும் என்று இந்த பாடலின் மூலமாக நாம் தெரிந்துகொள்கிறோம்.

இப்பாடலில் புற்றுத் தேனைப்பற்றியும், வெள்ளோடு அழிஞ்சி விரையை இடித்துக் குழித்தயிலம் செய்து சில வியாதிகளுக்குக் கொடுத்துக் குணப்படுத்தியிருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது. இதன் விவரத்தைச் சுவடியில் குறிப்பிடவில்லை. எனவே இந்தப் பாடலின் கருத்துக்களை இந்த நூலின் வாயிலாகத் தெரிந்து இந்தப்பதிப்பு ஆசிரியருக்கோ அல்லது இந்த சரசுவதி மகால் நூல் நிலையத்திற்கோ தெரிவிக்கப்பட்டால் இந்தப் பாடலைக் குறித்து மேற்கொண்டு சில ஆராய்ச்சிகளைச் செய்து இதனை மறுபடியும் வாசகர்களின் கருத்துகளைக் கேட்டு மறுபதிப்பில் பதிப்பு செய்யப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.